"செந்தமிழ்"ப்பிரசுரம்—௨௨.

41122

ஸ்ரீ:

உதீசிதேவர் இயற்றிய

# திருக்கலம்பகமூலமும் உரையும்

[ இரண்டாம்பதிப்பு ]

மதுரைத்தமிழ்ச்சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

முன்னைச் "செந்தமிழ்"ப்பத்திராசிரியர்

திரு. மு. இராகவையங்காரவர்கள்

பரிசோதித்தபடி.

1951

,17LUT,T
N51
92862

விலை ரூபா ஒன்று.

"செந்தமிழ்"ப்பிரசுரம்—உஉ.

ஸ்ரீ:

உதீசிதேவர் இயற்றிய

# திருக்கலம்பகமூலமும் உரையும்

[ இரண்டாம்பதிப்பு ]

மதுரைத் தமிழ்ச் சங்கம்
THE MADURA TAMIL SANGAM

முன்னைச் "செந்தமிழ்"ப்பத்திராசிரியர்

திரு. மு. இராகவையங்காரவர்கள்

பரிசோதித்தபடி.

1951

விலை ரூபா ஒன்று.

இரண்டாம்பதிப்பு: பிரதி 500. கர-௵.

பதிப்பாசிரியர்:

திரு. கி. இராமாநுஜையங்கார்.

ஸ்ரீ:

# முகவுரை.

திருக்கலம்பகம் என்பது, புயவகுப்பு தவம் மதங்கு முதலாய ம்பகவுறுப்பெல்லாம் அமையப் பாவும் பாவினங்களுமாகிய ற்றுப்பத்துச்செய்யுட்கள் அந்தாதியாகத் தொடர்ந்துவர யாத்த வுடையதோர் நூலாகும். இது சொல்லானும் பொருளானும் பெரிதுபயந்து அருகக்கடவுளைப் பராவிவருதலின், இத் நாட்டுச் சைனர்பலராலும் சிறப்பித்துப் போற்றப்படுவது. ற்கண்ணே ஜைனசமயக் கோட்பாடுகள் பல நன்கெடுத் க்கப்படுகின்றன.

இக்கலம்பகமியற்றியவர் உதீசிதேவர் என்பார். திருக்கலம்பக டுப்பிரதிகளில் இவரைப்பற்றிக் குறிக்கப்பட்டிருக்கும் பாயிரம் ருமாறு:—

“வையக மடந்தை வாழ்முக மாகிய
மெய்வளர் தொண்டையம் பதிக்கு வடாஅது
கன்னி காரத்து மன்னிய பெரும்புகழ்ப்
பழியில் பல்குடிப் பையூர்க் கோட்டத்
தொழியாச் சீர்த்தியொடு வழியறம் பயப்பினும்
ஆங்கவை கருதா அன்புகொ ளியல்பிற்
றூங்கா வீகைச் சான்றோர் குழீஇய
காரணி செந்நெற் கழனியம் படப்பை
ஆரணி நெடுந்துறை ஆர்ப்பா கைக்கோன்
அரசர்க் கரசெனு முரைசால் பெருமையிற்
றுவில் வடபான் மொழிதலை மணந்த
தேவ னென்னுந் தென்றிசைப் பெரும்பெயர்
மாவண் டமிழின் வாதுநெறி பயின்ற
சாவக நிலையோன் சாக்கிய குடாரன்
காதல் சார்ந்து மேதகப் புனைந்த
திருமலி பிண்டித் தெய்வ நாயகன்
அருமலர்ச் சேவடிக் கமர்ந்தன னணிந்த
தொன்மலர்க் கலம்பகத் தூய மாலை
பன்முறை யோதுநர் பழிச்சுந ரெல்லாம்
சேதியம் பெருநெறி சேர்குவர் விரைந்தே.”

இப்பாயிரத்தால் இந்நூலாசிரியர் தொண்டைநாட்டுப் பையூர்க்கோட்டத்து ஆரணிநெடுந்துறையைச் சார்ந்த ஆர்ப்பாகை என்னும் நகர்க்குத் தலைவரென்பதும் ஜைனமதசம்பந்தமான கல்வி கேள்விகளிற் பெரிதும் வல்லவரென்பதும் தெரிகின்றன. இக்கலம்பகத்துக்கு உரைசெய்தவர் இன்னார் இன்னகாலத்தவர் என்பவை அறியக்கூடவில்லை.

இவ்வுரை பழமையானதென்று தெரியவில்லையாயினும் பாடல்களின் பொருளைப் பதவுரையாலும் கருத்துரையாலும் நன்கு விளக்கியும் ஜைனமதக் கோட்பாடுகளையும் பரிபாஷைகளையும் வேண்டியவளவு கூறியும் செல்வதாம்.

முன்பு "செந்தமிழ்" ப்பத்திரிகைவாயிலாகப் புத்தகரூபமாக வெளியிடப்பெற்ற திருநூற்றந்தாதிமூலமும் உரையும்போலவே, சொற்செறிவு பொருட்பொலிவு முதலியவற்றாற் படிப்போர்க்கு இன்பந்தரக்கூடிய இக்கலம்பகத்தையும் ஒருவாறு ஆராய்ந்து வெளியிடலாயினேன்.

இதனை அச்சிடற்குத் தம்மிடமிருந்த பிரதிகளை அன்புடன் அனுப்பியுதவிய ஸேதுஸம்ஸ்தான வித்வான்: ஸ்ரீமத்—ரா. இராகவையங்காரவர்கட்கும், ஆரணி 'ஜவுளி'வியாபாரம் -ஸ்ரீமத்- சந்திரநாதநயினாரவர்கட்கும் யான் நன்றியறிதற் கடப்பாடுடையேன்.

இந்நூற் பரிசோதனையில் ஜைனமதவிஷயங்களில் எனக்கு ஆராய்ச்சிபோதாக்குறைவாற் குற்றங்குறைகள் நிகழ்ந்திருக்குமாயின், அவற்றை அறிஞர் பொறுக்கக்கடவர்.

இங்ஙனம்,

மு. இராகவையங்கார்,

"செந்தமிழ்ப்"பத்திராசிரியர்.

ஸ்ரீ:

உதீசிதேவர் இயற்றிய

# திருக்கலம்பகம்

மூலமும் உரையும்.

காப்பு.

பதினறுவர் பொன்வண்ணர் பச்சை யிருவர்
மதிவண்ணர் மற்ருே ரிருவர்—கதியடைந்த
செம்மைநிறத் தோரிருவர் சேர்ந்த முகிலிருவ
ரெம்மைக்குந் தெய்வ மெமக்கு.

**இதன்பொருள்:**—பொன்வண்ணர் பதினறுவர்-பொன்னிறமுடையவர்களாகிய பதினறுதீர்த்தகரரும்; பச்சை இருவர்-பசுமைநிறமுடையவர்களாகிய இரண்டு தீர்த்தகரரும்; மதிவண்ணர் ஓரிருவர்-சந்திரன்போன்ற நிறமுடையவர்களாகிய இரண்டு தீர்த்தகரரும்; கதியடைந்த செம்மைநிறத்தோர் இருவர்-பஞ்சமகதியைச்சேர்ந்த சிவந்தவண்ணமுடையவர்களாகிய இரண்டு தீர்த்தகரரும்; சேர்ந்த முகில் இருவர் - பொருந்திய மேகநிறமுடையவர்களாகிய இரண்டு தீர்த்தகரரும்; எமக்கு எம்மைக்கும் தெய்வம் - எங்கட்கு இம்மை மறுமை அம்மை என்னும் எப்பிறப்பினுக்கும் சுவாமி என்றவாறு.

**விசேடவுரை:**—மற்று-அசை. கதியடைந்தவென்றது நடுநிலைத்தீபம். உத்சர்ப்பிணி, அவசர்ப்பிணியென்னுங் காலவிகற்பத்தான் முறையே இருபத்துநால்வராக * அவதரிப்பினும், தன்மையா லொருவரேயாகையால் தெய்வமென ஒருமையாகக் கூறினர். இயற்கையா யெண்குணமு மெய்தி, விருப்பு வெறுப்பின்றி, உருவமு மருவமு மொருங்கெய்தி, முத்தியாகிய மூவுலகத்துச்சியின் விளங்குகின்ற சித்தரிடத்தில் வைத்த தியானத்தால் கற்பத்துச்சியாகிய அகமிந்திரலோகத்தினின்றும் அவதரித்து, மத்திமலோகத்தில் சுவாமி, சீவன், கருமம், வேதம், உலகம், காலமென்னும் அறுவகை நித்தியப்பொருள்களின் குணங்களை விளக்கி, காமவெகுளி மயக்கமாகிய

---

"*கொண்மூ வொருபருவம்பொழிந் தாங்கிரு கொட்பினுட்பா, ருண்மூ விருவகைக் காலத் திடையுல குய்யக்கொள்ளு, மெண்மூவர்" என்னுந் திருநூற்றந்தாதியடிகளானும் (சுஎ) அவற்றின் உரையானும் இக்கருத்துணர்ந்துகொள்க.

குற்றமுடையவர்களைக் கடவுளென்று முன்னெடுபின் மாறுபட்டுத் தீநெறியை விரிப்பதாகிய நூலை நம்பி மயங்கும் மயக்கத்தை நீக்கி, முத்தியடைந்தவராகையால் "கதியடைந்த" என்றார்.

விருஷபர், அசிதர், சம்பவர், அபிநந்தநர், சுமதி, சீதளர், சிரேயாஞ்சர், விமலர், அநந்தர், தர்மர், சாந்தி, கிரந்து, அரர், மல்லி, நமி, வர்த்தமாநர் என்னும் பதினறுவரும் பொன்வண்ணர்; பார்சுவர், சுபார்சுவர் என்னுமிருவரும் பச்சைவண்ணர்; சந்திரப்பிரபர், புஷ்பதந்தர் என்னுமிருவரும் வெள்ளைவண்ணர்; பத்மப்பிரபர், வாசுபூச்சியர் என்னுமிருவரும் சிவப்புவண்ணர்; முநிசுவ்விரதர், நேமி என்னுமிருவரும் நீலவண்ணர். இம்மை-இப்பிறப்பு. மறுமை-வருபிறப்பு. அம்மை-முத்தி.

## நூல்.

### கோச்சகவொருபோகுக்கலிப்பா.

1. பூநான்கும் பொதுளிவெறி திசைநான்கும் போயுலவத்
தேனார்ந்து சுரும்பாடத் திகழ்பிண்டித் திருநீழல்
நிலவுமிழ்ந்து நீர்ததும்ப நிழன்மாலை நித்திலஞ்சூழ்
குலவிலங்கு மதிமூன்றிற் குடைமூன்று முடனிழற்றப்
பாங்கிலகு மணிக்கவரி பன்னாறு யிரமசைய
வோங்கரியா சனத்தும்ப ருலகுதொழ விருந்தனையே.

இது தரவு.

கயல்பிறழ்வ தெனப்பிறழுங் கருந்தடங்கண் ணார்கலவிச்
செயல்பிறவி வித்தென்று செறிதவர்முன் னுரைத்தருளித்
தேறாத பிறப்பிகந்த சித்தியெனுங் கன்னியுடன்
மாறாத பேரின்ப மகிழ்வதுநின் குணனாமோ.

அடுமாற்ற லாருயிர்மே லாறாது மிகுத்தசினந்
தடுமாற்றந் தருமென்று தவவரசர்க் குரைத்தருளி
இரியவிரு வினைப்பகைவ ரிகல்வாட்டி யைம்புலவெங்
கரியகதக் கடக்களிறு காய்ந்ததுநின் னருளாமோ.

உள்ளத்தா லெவ்வுயிர்க்கு மொத்தொழுகா தவர்பிறவி
வெள்ளத்தாழ் பவரென்று விரிதவர்முன் விரித்தருளி
அன்போடு தொழுதெழுவார்க் கமருலக மளித்தமையா
நின்போல வரகதியு ணிறுத்துதனின் னியல்பாமோ.

இவை மூன்றுந் தாழிசை.

க்றையறு சுடர்மணி கரதல நடுவண தெனமுழு துணரு நின்மதி
நயைறலர் வெறியென நகுமணி யொளியென நணுகியல் பினது நின்சுகம்.

விரைசெறி முளரியின் மிசைமுறை பெயரல மிதியல வியலு நின்னடி
உரைபல தருகுவ துடன்மலை விலதருளொடுபொருட்டழுவும்நின்மொழி.

இவை இரண்டும் அராகம்.

நறையோடத் தோடவிழு நறும்பூமென் கணை துரந்து
நிறையோடப் பொருமதனை நீறுக நோக்கினையே.

அலைமாறுக் கதிக்கடலு ளழுந்துயிர்வேட் டலமருஉங்
கொலைமாறுக் கொடியவெங் கூற்றினையுங் குதித்தனையே.

எழுதருசெஞ் சுடர்போனின் றிலங்கொளிமண் டலத்தினையே
தொழுதகுவீட் டிறைவிமணந் தூற்றுந்துந் துபியினையே.

இவை மூன்றும் பெயர்த்துந்தாழிசை.

அலர்பொழியத் தேன்பொழியு மசும்பொழியா முன்றினையே.
உலகடங்க வுள்ளடங்கி யொலியடங்கா வெயிலினையே.

இவை நாற்சீரோரடி யிரண்டம்போதரங்கம்.

தொன்மறையை விரித்தோய் நீ; துருநயங்க ளழித்தோய் நீ;
நன்னெறியை வகுத்தோய் நீ; நமனணுகாக் கதியோய் நீ.

இவை மூச்சீரோரடி நான்கம்போதரங்கம்.

வீர னீ; விமல னீ; விண்ணு நீ; கண்ணு நீ;
தீர னீ; சுகத னீ; சிவனு நீ; தவனு நீ.

இவை இருசீரோரடி யெட்டம்போதரங்கம்.

என வாங்கு, இது தனிச்சொல்.

ஒருதனிக் கடவுணிற் பரவுது முயிர்க
ளின்னல்வெங் கனல்கூர் புன்னெறித் தலைச்சென்
றுறுபுலக் கோண்மாத் திரிதரு மகன்றலைப்
பிறவிக் கானத்து மறவியுற் றுழந்தாங்
கலமரு துயரினை யெறியுநின்
னிலமரு திகிரி நீடுவாழ் கெனவே.

இது சுரிதகம்.

இ-ள். பூநான்கும்......இருந்தனையே—நால்வகை மலரும் நெருங்கி அம் மலர்களின் வாசனை நான்குதிக்கினுஞ்சென்று திரிய, அம்மலர்களின் மதுவை உண்டு நால்வகைவண்டுகளும் இசைபாட விளங்கப்படுகின்ற அசோகி னுடைய அழகிய நிழலில் பிரகாசத்தை வீசிக் குணமானது துளும்ப, குளிர்ச்சிபொருந்திய முத்துமாலைகள் சூழ்ந்த மிகவும் விளங்குகின்ற மூன்று மதிபோல முக்குடையும் அவ்வசோகநிழலுடன் நிழல்செய்ய, இருமருங்கி னும் ஒளிர்கின்ற அழகிய சாமரைகள் நான்கு குறைந்த நாற்பதுலட்சம் சுழல, உயர்ந்த சிங்காசனத்தின் நான்கங்குலத்தின்மேல் மூவுலகத்தவரும் வணங்க வீற்றிருந்தாய்.

நால்வகைமலராவன:—கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, புதர்ப்பூ. நால்வகைவண்டுகளாவன:—கருவண்டு, பொன்வண்டு, ஞிமிறு, சுரும்பு. குடைமூன்றாவன:—சந்திராதித்தியம், நித்தியவிநோதம், சகலபாசநம்.

கயல்பிறழ்வதேன......தணனுமோ—கயன்மீன்கள் புரள்வனபோலப் புரளாநின்ற கருமையாகிய பரந்த கண்களையுடைய மாதரது புணர்ச்சியாகிய தொழிலானது, பிறப்பினுக்கு மூலமென்று நெருங்கிய முனிவரெதிர் சொல்லி யருளி, அளவுகாணப்படாத பிறப்பினின்று நீங்கிய மூத்தியாகியபெண்ணுடன் நீங்காத அனந்தவின்பத்தினால் நீ யின்புறுவது நினது குணமாகுமோ?

அடுமாற்றலாநுயிர்மேல்......அருளாமோ — தம்மைக்கொல்லவருகின்ற பகைவருடைய சீவனிடத்தும் அடங்காமல் அதிகரித்த கோபமானது பிறவியைக்கொடுக்குமென்று முனீந்திரருக்குச்* சொல்லியருளி, கெடும்படி தேசகாதி சருவகாதியென்னு மிருவினைகளாகிய மாற்றலருடைய வலியைக் கெடுத்து, பஞ்சவிஷயங்களாகிய வெப்பமான கறுத்த கோபமும் மதமு முடைய யானைகளைக்கொன்றது நினது கருணையாகுமோ?

தேசகாதியாவன—மதிஞானாவரணீயம், சுருதஞானாவரணீயம், அவதி ஞானாவரணீயம், மநப்பரியயஞானாவரணீயம், சக்ஷுதர்சநாவரணீயம், அசக்ஷுதர்சநாவரணீயம், அவதிதர்சநாவரணீயம், சம்மியத்துவப்பிரகிருதி, ஸஜ்வலநக்ரோதம், ஸஜ்வலநமாநம், ஸஜ்வலநமாயை, ஸஜ்வலநலோபம், ஹாசியம், இரதி, அரதி, சோகம், பயம், சுகுச்சை, ஸ்திரீவேதம், பிரம்ச வேதம், நபரம்சகவேதம், தாநாந்தராயம் லாபாந்தராயம், போகாந்த ராயம், உபபோகாந்தராயம், வீரியாந்தராயம்—என—உசு. *

---

* தேசகாதி ஸர்வகாதிவகைகளின் பொருள்களை, சிந்தாமணி முத்தி யிலம்பகத்துவரும் "தெளிவறுத்தெழுவர்" "புணரிபோற்சிறு" என்னும் பாடல்களின் விசேடவுரையிற் காண்க.

சர்வகாதியாவன:—கேவலஞானாவரணீயம், கேவலதர்சனாவரணீயம், நித்திராநித்திரை, பிரசலாபிரசலை, நித்திரை, பிரசலை, ஸதியானஸந்தி, அநந்தாநுபந்திக்ரோதம், அநந்தாநுபந்திமாநம், அநந்தாநுபந்திமாயை, அநந்தாநுபந்திலோபம், அப்பிரத்தியாக்யாநக்ரோதம், அப்பிரத்தியாக்யாநமாநம், அப்பிரத்தியாக்யாநமாயை, அப்பிரத்தியாக்யாநலோபம், பிரத்தியாக்யாநக்ரோதம், பிரத்யாக்யாநமாநம், பிரத்தியாக்யாநமாயை, பிரத்யாக்யாநலோபம், மித்யாதர்சநம், சம்மியக்மித்தியாத்துவம் என—உக.

ஐந்துவிடயங்களாவன:— சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம்.

உள்ளத்தால்......இயல்பாமோ— உள்ளன்பினல் ஐவகைப்பட்டவுயிர்கட்கும் ஒத்து நின்று நடக்காதவரே பிறப்பாகிய கடலில் அழுந்துவரென்று பரந்தமுனிவர்முன் சொல்லியருளி, விருப்புடன் வணங்கியெழுபவருக்கு வானவருலகத்தைக்கொடுத்து, உன்னைப்போல, கிடையாதமுத்தியில் வைக்குதல் நினக்குத் தன்மையாமோ?

ஐவகையுயிராவன:— ஏகேந்திரியம், துவீந்திரியம், திரீந்திரியம், சதுரிந்திரியம், பஞ்சேந்திரியம்.

கறையறு......நின்மொழி—குற்றமற்ற வொளியையுடைய இரத்தினமானது கையினுடைய மத்தியிலிருப்பக் காண்பதுபோல உலகமனைத்தையுமறியும் உனது அநந்தஞானம்; தேன்பொருந்திய பூவினது மணம்போலவும் விளங்குகின்ற இரத்தினத்தினுடைய விளக்கம்போலவும் பொருந்திய தன்மையையுடையது உனது அநந்தசுகம்; வாசனைபொருந்திய தாமரைப்பூவின்மேல் இருபாதமு முறையாக நடவாதனவாகவும் மிதியாதனவாகவும் நடக்கும் உனது பாதங்கள்; பதினெண்மொழிகளையும் கொடுப்பதாகியும் அதனுடன் முன்னெடுபின் மாறுபாடு இல்லாததாகியும் சீவகாருண்ணியத்துடன் அறுவகைப்பொருளையுந் தழுவிநிற்பது உனது பரமாகமம்.

அறுவகைப்பொருளாவன:—சீவன், புற்கலம், தர்மம், அதர்மம், ஆகாசம், காலம்.

நறையோட......நோக்கினையே—தேனானது பெருக இதழ்கள் விரிகின்ற வாசனைபொருந்திய மலர்களாகிய மெல்லிய பாணங்களையேவி மனநிலைகெடப் போர்செய்கின்ற மன்மதனை நீறுபடப் பார்த்தாய்.

அலைமாற......துதித்தனையே—பிறப்பாகிய திரைகள் நீங்காத நாற்கதியாகிய கடலில் முழுகுகின்ற சீவன்களை விரும்பிச் சுழலுகின்ற கொல்லுந் தொழில் நீங்காத கொடுமையான வெப்பமுடைய காலனையுங் கடந்தாய்.

எழதருசெஞ்சுடர்......துந்துபியினையே—உதிக்கின்ற சூரியனைப்போல் நிலைபெற்று விளங்காநின்ற பிரபாவலயமூன்றினையுடையாய்; யாவரும் வணங்கத்தக்க முத்திநாயகியினுடைய கல்யாணத்தை அறிவிக்கின்ற துந்துபியினையுடையாய்.

பிரபாவலயமூன்றாவன:—ஆலோகம், பிரபாமுத்தி, கநப்பிரபை.

அலர்பொழிய......எயிலினையே—மலர்களைத் தேவர்கள் சொரிய அம்மலர்கண் மதுவைப் பொழிதலினாலே கசிவுநீங்காத முற்றத்தினையுடையாய்; மூவுலகத்தவரும் தன்னுளடங்க மத்திமலோகத்துட் டானடங்கித் திவ்வியத் தொனியை அடக்காத மும்மதிலையுடையாய்.

மதின்மூன்றாவன:—உதயதரம், பிரீதிதரம், கல்யாணதரம்.

தோன்மறை......த்தியோய்நீ—பழமையாகிய வேதங்களைச்சொன்னவனீயே; ஏகாந்தவாதங்களைக் கெடுத்தவனீயே; * அநேகாந்தவாதத்தை வகுத்தவனீயே; காலனெருங்காத முத்தியையுடையவனீயே.

ஏகாந்தவாதங்களாவன:—சைவம், வைணவம், இரணியகர்ப்பம், பிரமம், பௌத்தம், கபிலம், காணாதம்.

வீரனீ......தவனுநீ—அனந்த வீரத்தையுடையவனீயே; நிர்மலத்தையுடையவனீயே; ஆகாயத்தானத்தையுடையவனீயே; ஞானக்கண்ணினையுடையவனீயே; தீரத்தையுடையவனீயே; நன்னடையையுடையவனீயே; மங்களகரத்தையுடையவனீயே; தவத்தையுடையவனீயே.

எனவாங்கு—என்று இவ்வாறாக;

ஒருதனி......எனவே—ஒப்பற்ற அருகபரமேட்டியே! உன்னை யாம் துதிப்போம்: சீவன்கள் துன்பமாகிய வெப்பம்பொருந்திய நெருப்பானது மிகுந்த அற்பமாகியவழியிற்போய்ப் பொருந்திய பஞ்சவிடயங்களான கொலை செய்யும் மிருகங்கள் திரிகின்ற பரந்த இடத்தையுடைய பிறப்பாகிய காட்டில் நின்னெறியிற்செல்ல மறந்து உழன்று அப்பிறவிக்காட்டிற் சுழல்கின்ற துன்பத்தையறுக்கின்ற உனது மூவுலகத்தினும் மருவிய அறவாழி அநந்த காலம் வாழவேண்டுமென்றே. எ - று.

**வி - ரை.** அமரர், முன்றில் என்பன கடைக்குறைவிகாரம். குலவிலங்கு ஒருதனி யென்பன மீமிசைப்பதம். ஏகாரம்—தேற்றம். இதனால் இறைவ

---

* சைநர், ஒருபொருட்கு ஒருபோதே உண்மையும் இன்மையு முதலாயின கூறுதலால், தம்மை அநேகாந்தவாதியர் எனவும், சைவவைணவர் முதலியோரை ஏகாந்தவாதியர் எனவும் கூறுவர்.

னதுபெருமையும், அவனருள்வழிப்பட்டுநடக்கும் அறவாழியினது தன்மையும், சீவர்களுடைய எளிமையும் கூறப்பட்டன. இதனுள் யாம் என்றது தோன்றுவெழுவாய்; உன்னை எ-து செயப்படுபொருள்; துதிப்போம் எ-து பயனிலை. (க)

வெண்பா.

2. என்மொழியி னென்னறிவி னென்னன்பின் யான்றொடுத்த
புன்மொழி மாலை புனைந்தக்காற்—பொன்மலர்மே
லம்மானுக் கிந்திரர்க ளாயிரம்வாய் கொண்டேத்து
மெம்மானுக் கென்னிசையு மாறு.

இ - ள். எனது சொல்லினாலும், எனது அறிவினாலும், எனது அன்பினாலும், நரனாகிய யான் கட்டிய புன்மையான சொன்மாலையைத் திருவடியிற் றரித்தால், பொற்றாமரைப்பூமேலிருக்கின்ற அருகபரமேட்டிக்கு, நூறிந்திரரும் ஆயிரம்வாயினை விகுர்வணையானிருமித்துக்கொண்டு துதிக்கும் என் சுவாமிக்கு, அஃது எவ்விதம் பொருந்தும்விதம்? எ - று.

வி - ரை. இசையாதென்பது குறிப்பெச்சம். இதனால் இறைவனது பெருமையும் தனது சிறுமையும் கூறப்பட்டன. இசையுமாறு எ-து எழுவாய்; என் எ-து பயனிலை.

நூறிந்திரராவார்—பவணேந்திரர் நாற்பதின்மர்; வியந்தரேந்திரர் முப்பத்திருவர்; சோதிஷ்கேந்திரர் இருவர்; கற்பேந்திரர் இருபத்துநால்வர்; நரேந்திரன் ஒருவன்; மிருகேந்திரன் ஒன்று. (உ)

கட்டளைக்கலித்துறை.

3. ஆறுரைத் தான்பொருளைந்துரைத் தான்கதிநான்குரைத் தான்
மாறுரைத் தாரை முருக்கு மறைவைய மூன்றினுக்கும்
வேறுரைத் தான்றொல் லறமிரண் டவ்விரண் டாலும்விடு
பேறுரைத் தானமக் கொன்றுரை யாத பெருந்தகையே.

இ - ள். ஆறுவகையென்றுசொன்னான் பொருளை; அத்திகாயத்தை ஐந்துவகையென்றுசொன்னான்; உயிர் சென்றுதிரியுங் கதியை நான்குவகையென்றுசொன்னான்; மித்தியாத்துவமாகச் சொன்னவர்கள்சொல்லைக் கெடுக்கின்ற நான்குவேதங்களையும் மூவுலகத்தாருக்கும் சமத்துவமாகச் சொன்னான்; பழமையான இரண்டுவகையறத்தையுஞ்சொன்னான்; அவ்வறமிரண்டாலுங் கருமமானது சீவனைவிடுகின்றதன்மையைச் சொன்னான்; நமக்கொன்றினையுஞ்சொல்லாத பெரியகுணத்தையுடைய சுவாமி. எ-று.

**வி - ரை.** இதனால் சகலதத்துவங்களையு முரைத்தவன் இவனே யென்பது கூறப்பட்டது. பெருந்தகை எ-து எழுவாய்; பொருண்முதலியவைகளை எ-து செயப்படுபொருள்; சொன்னான் எ-து பயனிலை.

அத்திகாயமைந்தாவன:—சீவாஸ்திகாயம், பிரகலாஸ்திகாயம், தர்மாஸ்திகாயம், அதர்மாஸ்திகாயம், ஆகாசாஸ்திகாயம். கதிநான்காவன:—நரககதி, திரியக்கதி, மநுஷ்யகதி, தேவகதி. உலகமூன்றாவன:—சுவர்க்கம், மத்தியமம், பாதாளம். நான்கு வேதங்களாவன:—பிரதமாநுயோகம், கரணாநுயோகம், சரணாநுயோகம், திரவ்யாநுயோகம்.* அறமிரண்டாவன:- இல்லறம், துறவறம். (௩)

எண்சீர்க்கழிநெடில்விருத்தம்.

4. பெருந்தகைநின் றெய்வமொழி தோன்றத் தோன்றிப்
பிறழாநின் றூயமொழி நிற்ப நின்றுன்
னருந்தகைய செய்யமொழி செல்லச் செல்லு
மகன்ஞால முழுதுமுட னென்றால் வானோர்
பொருந்தகைய முடிநெருக்க வெழுந்த சோதிப்
பொலந்துகளைப் பூந்துணரின் மதுநீர் மாற்ற
விருந்தவெயின் மூன்றுடையாய் நீய லான்மற்
றியாவர்படைத் தளித்தழிக்கு மியல்பி னாரே.

**இ - ள்.** பெருந்தகையையுடையவனே! நின்னாற் சொல்லப்பட்ட பரமாகமம் உண்டாகத் தானும் தோன்றி, மாறுபாடில்லாத உன்னாற்சொல்லப் பட்ட பரமாகமம் நிலைபெறத் தானும் நிலைபெற்றுநின்று, நின்னாற்சொல்லப் பட்ட அருமையாகிய குணத்தையுடைய அப்பரமாகமம் நீங்க, உடனே நீங்கும் பரந்தவுலகமெல்லாம் என்று சொல்லப்பட்டால்,—தேவர்களுடைய இருளையோட்டுகின்ற தன்மையையுடைய மகுடங்கள் ஒன்றையொன்று தாக்க அதனாலுண்டாகிய விளக்கமான பொற்பொடியை அம்முடியிற்றரித்த பூங்கொத்தினின்றுமிழிந்த தேனாகிய ஜலமானது தணிக்க, வீற்றிருந்த மும்மதிலையுடையவனே! நீயேயல்லாமல் வேறே யெவர் அவ்வுலகத்தை யுண்டாக்கிக் காத்து நீக்குகின்ற தன்மையையுடையவர்? எ - று.

* "பிரதமாநுயோகமென்பது — திருஷ்டிசலாகாபுருஷசரிதத்தினைச் சொல்வது; கரணாநுயோகமென்பது — திரைலோக்யஸம்ஸ்தானத்தைச் சொல்வது; சரணாநுயோகமென்பது—சகா...ளது (?) சரியாவிசேஷத்தினைச் சொல்லும்; திரவியாநுயோகமென்பது ஷட்திரவியங்களது சுவரூபத்தினைச் சொல்லும்"—ஸ்ரீபுராணம்.

வி-ரை. இதனால் நீயே கடவுளென்பது கூறப்பட்டது. இயல்பினால் எ-து எழுவாய்; யாவர் எ-து பயனிலை. (௪)

அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

5. இயல்கொண்ட பொருளனைத்து மெஞ்சாம
லெப்பொழுது முடனே காணுஞ்
செயல்கொண்ட திசைமுழுதுந் திகழ்ந்திலங்குந்
திருமுகத்து நின்னை யல்லான்
முயல்கொண்ட கறைதுடைத்த முத்தணிந்த
மும்மதிமுக் குடையா யிந்த
மயல்கொண்ட வகன்ஞாலந் திசைமுகனென்
றெவ்வாறு வழங்குமாறே.

இ-ள். குணத்தைக்கொண்ட அறுவகைப்பொருளையுங் குறையாமல் முக்காலத்தினும் ஒருதன்மையாகப் பார்க்கின்ற செயலையுடைய நான்கு திக்கினும் விளங்கி ஒளிர்கின்ற அதிசயத்தா னன்குமுகத்தையுடைய உன்னை யல்லாமல், முயலைத் தன்னிடத்துக்கொண்ட களங்கத்தை நீக்கி முத்து மாலைகள் தரித்த மூன்றுமதிபோன்ற மூன்றுகுடையினையுடையவனே! மயக்கத்தை மனதிற்கொண்ட அகன்ற இவ்வுலகத்தார் விகாரத்தா னன்முகம் பெற்றவனைத் திசைமுகனென்று எவ்விதம் சொல்லும்விதம்? எ-று.

வி-ரை. இதனால் உலகத்தாருடைய பேதைமை கூறப்பட்டது. வழங்குமாறு எ-து எழுவாய்; எவ்வாறு எ-து பயனிலை. (௫)

கட்டளைக்கலித்துறை.

6. வழங்கும் பதினெண் மொழியு மிதமு மதுரமுமாய்
முழங்குங் கலைமகள் காந்தர்கண் டீர்முது நீர்மடுவுங்
கிழங்குந் தவிர விசும்பிடைப் பூத்தலர் கிண்டிவண்டு
தழங்குங் கமலத்து வந்துல கேழையுந் தந்தவரே.

இ-ள். உலகத்தில் வழங்கும் பதினெண்பாடையும், இதமுள்ளனவாயும் மதுரமுள்ளனவாயும் ஒலிக்கின்ற சரஸ்வதியினுடைய நாயகர். பழமையான ஜலத்தையுடைய குளமும் கிழங்கும் நீங்க, ஆகாயத்திலுண்டாகி மலர்ந்த, குடைந்து வண்டுகள் இசைபாடும் தாமரைமலரிற் றோன்றி எழுவகை யுலகங்களையுந் தெரிவித்தவர் எ-று.

வி - ரை. கண்டீர் என்பது முன்னிலையசை. இதனால் உலகைத்தரும் நாத னிவனெனக் கூறப்பட்டது. உலகேழையுந் தந்தவர் எ - து எழுவாய்; கலைமகள் காந்தர் எ - து பயனிலை.

எழுவகையுலகாவன—நாகலோகம், பவணலோகம், நரலோகம், சோதிர்லோகம், கல்பலோகம், அகமிந்திரலோகம், மோக்ஷலோகம். (சு)

அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

7. தந்த வுலகிற் பொருளனைத்துந் தமதுண் மையினு லுளவாகு
மந்த மிலதன் பிறகுணத்தி னுளவல் லனவா மெனவுறைந்தாய்
பந்த விருள்கால் சீத்திலங்கும் பகலோய் பகல்கா ணுப்புள்ளி
னெந்தை பெருமான் வாய்மையினை யேனோர் காணு ரானூரே.

இ - ள். நீ தெரிவித்த உலகத்தில் அறுவகைப்பொருளு மவற்றினுடைய நிச்சயநயத்தினால் நித்தியமாகுமென்றும், முடிவில்லாதனவாகிய அப்பொருளுடைய விவகார நயத்தினால் அநித்தியமாகுமென்றும் சொன்னாய்; உயிரைப் பந்தித்த காதியாகிய இருளை முழுதுங் கெடுத்து ஒளிர்கின்ற ஞானசூரியனே! சூரியனை யென்றுங்காணுத கூகைபோல், என் சுவாமியாகிய பெருமானே! நினதுவாக்கினை ஏகாந்தவாதிகள் அறியப்படாதவர்களானார்கள். எ - று.

வி - ரை. இதனால் ஏகாந்தவாதியரிழிவு கூறப்பட்டது. ஏனோர் எ - து எழுவாய்; வாய்மையினை எ - து செயப்படுபொருள்; காணுரானூர் எ - து பயனிலை. (எ)

அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

8. ஆனவா ருக மெய்ம்மை யறிவரி துலகிற் பல்லோர்
போனவா றல்ல தில்லைப் போநெறி யென்பா ரென்க
வானவா வியுள்வண் டார்ப்ப மலர்ந்தபூச் சுமந்த தாளெங்
கோனவா மறைகள் சொன்ன நெறியலாற் குறுக லேனே.

இ - ள். ஆனவகையாகத்தக்கது; உண்மையை அறிதலரிது; 'உலகத்திலநேகர்கள் நடந்தவழியல்லாமல் வேறொன்றில்லை நமக்குப் போகும்வழி' என்று சொல்பவர் சொல்லுக; ஆகாயமாகிய தடாகத்தில் வண்டுகள் இசைபாட விரிந்த தாமரைப்பூவானது தாங்குகின்ற பாதத்தையுடைய எமது சுவாமியை அவாவிச்சொல்லும் நான்குவேதங்களுஞ் சொல்லியவழியல்லாமல் மித்தியாமார்க்கத்தை யடையேன். எ - று.

வி - ரை. இதனால் தந்துணிவு கூறப்பட்டது. யான் எ-து எழுவாய்; மித்தியாமார்க்கத்தை எ-து செயப்படுபொருள்; குறுகலேன் எ - து பயனிலை.

எழுசீர்க்கழிநெடில் விருத்தம்.

9. குறுகு முறைபொறி மறையி லதுகுறை
யிலது மலர்வெறி யென்னவே
யுறுவ தொருசுக நிகழ நிகழ்வதொ
ரொழிவி லொளியுமை நண்ணுமே
கறுவு பகையற வுறவி லருள்புரி
கடவுண் மலரடி துன்னியோர்
மறுவி றிருவற வமிர்த வருவியின்
மயல்கொ ளிருவினை மண்ணவே.

இ - ள். அடைகின்ற கிரமமும் கரணமும் மறைவும் இல்லாததும், ஒரு குறைவும் இல்லாததும், பூவினுடைய வாசனைபோலவே பொருந்துவதாகிய ஒப்பற்ற இன்பம் தோன்றும்படிதோன்றுவதுமாகிய நீங்காத முச்சோதி உங்களையடையும். கோபிக்கின்ற பகை நீங்க நட்பில்லாத கிருபையைச் செய்கின்ற அருகபரமேட்டியினுடைய தாமரைப்பூப்போன்ற பாதங்களை அடைந்து, ஒருகுற்றமுமில்லாத செல்வத்தைத்தரும் சினதருமமாகிய நீரையுடைய ஆற்றிலே அழுக்காகக்கொண்ட இருவினையையுங் கழுவினால்; எ-று.

வி-ரை. இதனால் சினதருமத்தினுடைய பெருமை கூறப்பட்டது. ஒளி எ-து எழுவாய்; உம்மை எ-து செயப்படுபொருள்; நண்ணும் எ-து பயனிலை. முச்சோதியாவன:—மநசோதி, வாக்குச்சோதி, காயச்சோதி. (கூ)

எழுசீர்க்கழிநெடில்விருத்தம்.

10. மண்ணார் கதிர்மணி மலரார் செங்கையில்
வைத்துக் கண்டவ ரொத்தென்று
மெண்ணு தகிலமு முடனே கண்டருள்
கின்றாய் நீயல தில்லென்றாற்
பண்ணார் வண்டிறை கொள்ளக் கள்ளவிழ்
பனிமா மலர்மிசை வருமாலே
கண்ணார் கடவுல கெல்லா மறிவதொர்
கரியா தற்கெவ ருரியாரே.

இ-ள். ஒப்பனைபொருந்திய கிரணத்தையுடைய இரத்தினத்தைத் தாமரைமலர்போலே பொருந்திய செம்மையாகிய கரத்தின் நடுவில்வைத்துப் பார்த்தவரை யொப்பாக, எக்காலத்துஞ் சிந்தியாமலே யாவற்றையு மொரு தன்மையாகப்பார்க்கின்ருய்;நீயல்லாமல் அப்படிக்காண்கின்றவர் வேறொருவரில்லை என்று சொல்லப்பட்டால், இசைபாடுகின்ற வண்டுகள் தங்குதல் கொள்ளத் தேனையுடைய விரிந்த குளிர்ச்சியையும் பெருமையையுமுடைய தாமரைப்பூமேல் வாராநின்ற அருகனே! இடம்பொருந்திய கடல்சூழ்ந்த உலகமெல்லாம் அறிதலிலே ஒரு சாட்சியாகுதற்கு யாவர் உரிமையுடையார்? எ-று.

வி-ரை. இதனுற் சர்வஞ்ஞன் இவனே யென்பது சொல்லப்பட்டது. உரியார் எ-து எழுவாய்; எவர் எ-து பயனிலை. (௧௦)

எழுசீர்க்கழிநெடில்விருத்தம்.

11. உரிமையால் யாவ னுரைவழி நடப்ப
துலகெலா மவனுல காளும்
பெருமையா னென்னி னெழுநயம் பகர்ந்த
பிண்டியா யலதியா ருரியார்
கருமைசால் வினையின் கட்டர ணழிய
மட்டவிழ் கமலமா நடவி
யருமைசா லுலக மேழினு நடாத்து
மாணையா யமரர்நா யகனே.

இ-ள். உரிமையினலே எவனுடைய தருமவாக்கினது நெறியில் எல்லா வுலகமும் செல்லுகின்றதோ அவனே உலகத்தை யாளுகின்ற பெருமையுடையவன் என்று சொல்லப்பட்டால், சத்தபங்க நியாயத்தைச் சொன்ன அசோகினையுடையவனே! நீயல்லது எவர்கள் உரிமையுடையவர்கள். இருளானது மிகுந்த உயிர்களைப்பந்தித்த வினையினுடைய பந்தமாகிய வலியானது கெட*, தேனனது வழிகின்ற தாமரைப் பூவாகிய யானையை நடத்தும் அருமைசான்ற ஆணையையுடையவனே! தேவர்களுக்கு நாதனே! எ-று.

வி-ரை. இதனுல் இவனே உலகத்திற்கு நாதனென்பது கூறப்பட்டது. உரியார் எ-து எழுவாய்; எவர் எ-து பயனிலை.

* கெட நடாத்தும் என இயையும்.

சத்தபங்கமாவன:—சியாதஸ்தி, சியாந்நாஸ்தி, சியாதஸ்திநாஸ்தி, சியாதவக்தவியம், சியாதஸ்தியவக்தவியம், சியாந்நாஸ்தியவக்தவியம், சியாதஸ்திநாஸ்தியவக்தவியம். (கக)

காப்பியக்கலித்துறை.

12. நாயக னிவனென வகிலமு நவில்வதொர் பதநண்ணிப்
பாயந லிசையொடு பலவுக நிலவுதல் பெறினும்பேர்
தூயன பெரியன வாயிர முடையவர் சுடர்போதிற்
போயவ ரடிபுகழ் புலவரொ டலதுரை கலவோமே.

இ-ள். நாதனிவனென்று உலகமெல்லாஞ் சொல்லுவதாகிய ஓர் வாழ்வை யடைந்து, பரந்த நல்ல புகழுடன் கூடி, பல பொருள்களுமழியவும் தாம் விளங்குதலை யொருவர் பெற்றாராயினும், நாமங்கள் பரிசுத்தமுடையனவும் பெருமையுடையனவுமான ஆயிரத்தையுடையவர், ஒளிர்கின்ற தாமரைப்பூவில் நடந்தவருடைய பாதங்களைத் துதிக்கின்ற அறிவுடையவருடனல்லாமல் பேசமாட்டோம். எ-று.

வி-ரை. இதனால் மித்தியாதிருஷ்டிகள் எத்தன்மையராயினும் அறிவிலரென்பது கூறப்பட்டது. யாம் எ-து எழுவாய்; உரைகலவோம் எ-து பயனிலை. (கஉ)

ஊசல்.

எண்சீர்க்கழிநெடில்விருத்தம்.

13. கலவமயிற் குலமனையீ ராடாமோ வூசல்
கருங்குழன்மேற் சுரும்பிரிய வாடாமோ வூசல்
உலவுதுணைக் கயல்பிறழ வாடாமோ வூசல்
ஒளிருமணி வடமசைய வாடாமோ வூசல்
புலவுசுவைத் தொளிருபடை தொடாது முத்தி
பொருபகடிப்* பகைதுரந்த புனிதர் கோலத்
திலதமலர்ப் பதம்பாடி யாடாமோ வூசல்
செம்பொனெயில் வளம்பாடி யாடாமோ வூசல்.

* பிரகிருதி என்பது "பகடி" எனத் திரிந்துநின்றது; "பகடிப்பகைவா" என்றார் அவிரோதியாரும் (திருநூற்றந்தாதி ௩.)

இ-ள். தோகையையுடைய மயிற்கூட்டங்களை யொப்புடையீர்! ஆடுவோம் ஊஞ்சல்; கருத்த அளகமீது வண்டுகளோட ஆடுவோம் ஊஞ்சல்; திரிகின்ற இரண்டாகிய சேற்கெண்டைகள் புறள ஆடுவோம் ஊஞ்சல்; விளங்குகின்ற முத்துவடமசைய ஆடுவோம் ஊஞ்சல்; நிணங்களைப்புசித்து விளங்குகின்ற ஆயுதங்களைத் தீண்டாமல்† பேரின்பத்தை யடையாமல் தடுத்துப் போர்செய்கின்ற பிரகிருதியாகிய சத்துருவைச்செயித்த அருகருடைய அழகிய யாவருக்குந் திலதமான தாமரைமலர்போன்ற பாதத்தைத் துதித்து ஆடுவோம் ஊஞ்சல்; சிவந்த பொன்னாலாகிய மும்மதிலினுடைய வளப்பத்தைத்துதித்து ஆடுவோம் ஊஞ்சல் எ-று.

வி-ரை. இதனால் இவனே நிர்மலனென்பது கூறப்பட்டது. நாம் எ-து எழுவாய்; ஊசலாடுவோம் எ-து பயனிலை. (கங)

கலிவிருத்தம்.

14. ஊசற்குழை நல்லார்தம துளவாறறி யாதே
நேசப்படு நெஞ்சானினை வாரேயினை வாரே
பேசப்படு மொருகுற்றமு மில்லார்தமை யொருகாற்
பேசப்படு வாரேபிற வாரேயிற வாரே.

இ-ள். அசைகின்ற குண்டலத்தையுடைய மாதர்களது மனத்திலெண்ணும் கபடமார்க்கத்தை அறியாமல், மயல்கொள்ளும் மனத்தால் அவரை நினைக்கின்றவர்களே துக்கமடைவார்; சொல்லப்படு மொருதீங்குமில்லாத அருகபரமேட்டியை ஒருதரம் துதிப்பவரே இனிப் பிறவாதவர்களும் இறவாதவர்களுமாவார். எ-று.

வி-ரை. இதனால் பற்றற்றவனதுபற்றினைப் பற்றவேண்டுமென்பது கூறப்பட்டது. நினைவாரே எ-து எழுவாய்; இனைவார் எ-து பயனிலை; பேசப்படுவார் எ-து எழுவாய்; பிறவாரிறவார் எ-து பயனிலை. (கச)

எண்சீர்க்கழிநெடில்விருத்தம்.

15. இறந்துதாம் பொன்றுதலே வீடென் பாரு
மிறவாது கல்லாத லியல்பென் பாரும்
பிறந்துகோ னுடனென்று குதலென் பாரும்
பிறவாது சித்தளவென் பாரு மென்க

† தீண்டாமல் எ-து செயித்த என்பதனுடன் இயையும்.

வறஞ்செய்வான் றிகிரியா லகில மாண்ட
வறவாழி யசஞ்சலர்தா மறைந்த நூலின்
றிறங்கொள்வா னச்சுதா நந்த மல்லாற்
செய்தவத்தா லுறநினையார் தேர்கிற் பாரே.

இ-ள். கையற நசித்தலே முத்தியென்றுசொல்பவரும், சாகாமற் கற்போலாகுதல் முத்தித்தன்மை யென்பவரும், உலகத்திற்பிறந்து ஈசுவரனுடன் கலத்தலே முத்தியென்பவரும், என்றும் பிறப்பில்லாமல் ஞானத்தினுடைய அளவாதலே முத்தியென்பவரும் அப்படியே சொல்லுக; தருமத்தைச்செய்யும்பொருட்டுத் தருமசக்கரத்தினால் உலகத்தையாளுகின்ற அறக்கடலாகிய சஞ்சலமில்லாத அருகபரமேட்டி சொன்ன பரமாகமத்தினுடையகூறுபாட்டைக் கொள்பவனுடைய கெடாத சுகமேயல்லாமல், செய்யப்பட்ட தவத்தினால் வேறான சுகத்தையடைய எண்ணார்கள் விவேகமுடையார். எ-று.

வி-ரை. இதனால் மித்தியாதிருஷ்டிகள் கூறும் முத்திநிலை இழிக்கப்பட்டது. தேர்கிற்பார் ஏ-து எழுவாய்; வேறானசுகத்தை எ-து செயப்படுபொருள்; நினையார் எ-து பயனிலை. (கரு)

நேரிசையாசிரியப்பா.

16. தேர்வதொன் றுடையன் யானே காரெனக்
கடிமலர் மாரியோ டிடிமுர சியம்புங்
கொடிநுடங் காரெயிற் கிழவனை யொருதனி
யிருவினை யிரிய மூவரண் முருக்கிய
பொருவி றாளினை யென்ப வருள்புரிந்
தறந்தரு நாவினை யமரரு மரசருந்
தொடர்ந்தன றிறைஞ்ச நடந்தனை சென்ற
போதும் வாடல தாயின்
யாதுகொ லாங்கவை நீயடு மாறே.

இ-ள். அறியவேண்டுவது ஒன்றினையுடையேன் நான்; மேகம்போலே வாசனைபொருந்திய பூமாரியுடன் இடிபோலத் துந்துபி முழங்குகின்ற கொடிகள் அசையப்பட்ட முறையாகப் பொருந்திய மும்மதிலினுடைய சமவசரணத்திற்கு உரியவனாகிய உன்னை ஒப்பற்ற இருவினைகளும் ஓட மும்மலங்களைக்கெடுத்த ஒப்பில்லாத பாதங்களையுடையை என்று சாதுக்கள்

சொல்லுவார்கள்; கருணையை விரும்பித் தருமத்தைத்தருகின்றநாவினையுடையாய்! தேவர்களும் சக்கரவர்த்திகளும் தொடர்ந்து வணங்க நடந்தாய்; நடக்கப்பட்ட மலரும் வாடாததாயினல் யாதுதான் அம்மலங்களை நீ கெடுக்கும்விதம்? எ-று.

வி-ரை. இதனல் இறைவனைப் பழிப்பதுபோல்க் கருமங்களைக்கெடுத்தமை கூறப்பட்டது. யான் எ-து எழுவாய்; தேர்வதொன்றுடையன் எ-து பயனிலை. (கசு)

## காலம்.

### எண்சீர்க்கழிநெடில்விருத்தம்.

17. அடல்விடங்கொள் பாதபங்க ளமிர்தீனுங் கால
மரியினொடு கரியுமிருந் தறங்கேட்குங் காலங்
குடரிடங்கொள் பசியினொடு பிணிநணுகாக் காலங்
குறைந்தபொறி நிறைந்தெவருங் குணம்புரியுங் காலங்
கடல்கிளர்ந்த தெனவுலகு தொடர்ந்திறைஞ்சச் செய்ய
கடிக்கமல மடிக்கமல மேந்தத் தொல்லை
யிடர்கடந்த கருணைமுகில் விசும்பிலெழுங் கால
மெம்மனமுங் காமனம்புக் கிடருழவாக் காலம்.

இ-ள். கொல்லுதலையுடைய் நஞ்சத்தைக்கொண்ட எட்டிமுதலாகிய மரங்கள் அமிர்தத்தைக் கொடுக்குங்காலம், சிங்கத்துடன் யானை பகைநீங்கியிருந்து தருமத்தைக் கேள்விப்படுங்காலம், குடரையிடமாகக்கொண்ட பசியுடனே வியாதிகள் அணுகாத காலம், குறைவுபட்ட பஞ்சேந்திரியமும் நிறைவுபட்டு எவர்களும் நன்மையை விரும்புங்காலம், சமுத்திரம் பொங்கினதுபோல உலகத்தாரடைந்து வணங்க, சிவந்த வாசனைபொருந்திய தாமரைப்பூவானது பாதமாகிய தாமரைப்பூவைத் தாங்கப் பழமையாகிய துன்பங்களைக் கெடுத்த கருணையையுடைய மேகமாகிய அருகபரமேட்டி ஆகாயவீதியில் நடக்குங்காலம்; எமதுமனமும் மன்மதனுடைய பூங்கணையினல் வருந்தாதகாலம் எ-று.

வி-ரை. இதனல் அருகபரமனை நம்பினவர்க்குச் சகலநன்மையுமுண்டாமென்பது கூறப்பட்டது. எழுங்காலம் எ-து எழுவாய்; காலமென்பனவெல்லாந் தனித்தனி பயனிலைகள். (கள)

வஞ்சிவிருத்தம்.

18 காலனென்றுடல் கால்பறிந்துயிர்
மாலவந்துழி மாலொழிந்துமுன்
மூலமந்திர மூலமேயென
வோலமென்பவ ரும்பர்நாதரே.

இ-ள். கூற்றுவனென்று சொல்லும் அந்தியகாலம் தேகமானது நிலை குலைந்து சீவன் மயங்கவந்தபோது மயக்கத்தினின்று நீங்கி, அநாதியாயிருக்கின்ற *பஞ்சமந்திரத்தைக்கொண்டு ஆதியேயென்று, அடைக்கலமென்று சொல்பவர்கள் தேவேந்திரராவர். எ-று.

வி-ரை. இதனால் அருகபரமனை அந்தியகாலத்தில் நினைத்தவர் இந்திரராவாரென்பது கூறப்பட்டது. ஓலமென்பவர் எ-து எழுவாய்; உம்பர்நாதர் எ-து பயனிலை. (கஅ)

எழுசீர்க்கழிநெடில்விருத்தம்.

19 உம்பர்நா டடைவார் நம்பத மடைவா
ரொழிந்தவ ரிழிந்தநாற்கதியிற்
றுன்பமே யடைவா ரென்றுநீ விதித்த
தொல்விதி கடந்தவருளரே
வம்புலாய் நிமிர்ந்து வடஞ்சுமந் தடங்கா
வனமுலை மடந்தையர் தடங்க
ணம்பினு லுடையா வருந்திற லுடையா
யமலனே கமலவா கனனே.

இ-ள் உயர்வான முத்திநாட்டைச் சேர்வார் நமது பாதங்களைச் சேர்பவர்; சேராதவர் இழிவுபட்ட நாற்பிறப்பினும் பிறந்து துன்பத்தையே சேர்வாரென்று நீ நியமித்த பழமையாகிய நியதியைக்கடந்தவர்கள் உண்டோ? கச்சினுள்பரந்து பூரித்து முத்துவடங்களைத்தாங்கி அடங்காத அழகிய தனங்களையுடைய மாதர்களுடைய பரந்த கண்ணாகிய பாணத்தினாற் கெடாத அரிய

---

* சிலப்பதிகாரத்து நாடுகாண்காதையில் வரும் "மொழிப் பொருட்டெய்வம் வழித்துணையாகென" என்னும் அடியின் விசேடவுரையில் "ஆவது பஞ்சமந்திரம் அ ஸி ஆ உ ஸா—அ சி ஆ உ சா" என்றமை கண்டு கொள்க. இப்பஞ்சமந்திரத்தைப் பஞ்சநமஸ்காரம் என்பர் சைநர்.

வலியை உடையவனே! நிருமலனே! தாமரைப்பூவாகிய வாகனத்தையுடையாய்! எ - று.

வி-ரை. இதனற் றிருவாக்கினுறுதி கூறப்பட்டது. கடந்தவர்—எழுவாய்; உண்டோ—பயனிலை. நாற்கதியாவன:—தேவகதி, மனுஷ்யகதி, திரியக்கதி, நரககதி என்பன. (கக)

அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

20 வாகன மாகம் பூத்த மாமல ராக வேகு
மேகனை யுணர்ந்தி லாமை யுணர்தலவ் விரண்டி னாலும்
வேகவெங் கதியும் வீடும் விளை தரு மென்று லெண்ணில்
போகனை யன்றி யாரே புவனகா ரணரா வாரே.

இ-ள். வாகனமானது ஆகாயத்திலுண்டான பெருமைபொருந்திய தாமரைப்பூவாக நடக்கும் அருகபரமனை அறியாமையும் அறிதலுமாகிய இவ் விருசெய்கையினாலும் கடுமையான வெப்பமுடைய இழிவானகதியும் முத்தியும் சீவனுக்குண்டாகும் என்று சாதுக்களாற் சொல்லப்பட்டால், அந்தச் சுகத்தையுடையவனையல்லாமல் எவர்கள் உலகத்திற்கு இன்பகாரணராவார்கள். எ - று.

வி-ரை. இதனல் உலகத்திற் கின்பகாரண னிவனே யென்று கூறப்பட்டது. காரணராவார்—எழுவாய்; யார்—பயனிலை. (உ0)

அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

21 ஆவா ருனக்கு நானடிமை யென்னு வல்லே மெனவுயர்ந்து
போவா ரென்றே யெப்பொழுதும் பூவும் புனலுங் கொண்டேத்தி
யோவா திறைஞ்சு மென்னகத்தே யொருநாள் வந்தா லுலகாளுந்
தேவா திபனே திருமாலே நின்றன் பெருமை சிதைவாமே.

இ - ள். அடிமையாகுமவர் நினக்கு யான் அடிமையென்று சொல்லிக் கருமத்தைக்கெடுக்கும் வல்லமையுடையோமென்று முத்தியை யடைவா ரென்றறிந்து, முக்காலத்தினும் மலர்களும் சலமும் கைக்கொண்டு பூசித்துத் துதித்து நீங்காமல் வணங்குகின்ற எனது மனத்திலே ஒருதினம் வந்திருந்தால் உலகத்தை ஆளுகின்ற தேவநாதனே! முத்திலக்ஷ்மியையுடைய அருகனே! உனது மேன்மையானது கெடுதியாமோ? எ - று.

வி-ரை. இதனல் பழிப்பதுபோல முத்திக்கு நாதன் இவனென்பது கூறப்பட்டது. பெருமை—எழுவாய்; சிதைவாமே—பயனிலை. (உக)

கட்டளைக்கலித்துறை.

22 சிதைக்குங் கதிப்பெயர் மாயச் சகடஞ் சிதைந்துசிந்த
வுதைக்குந் திருவடிப் போதிரண் டானற வுண்டுவண்டு
துதைக்கு மலருந் தளிருஞ் சுமந்திரு டுங்கிவையம்
புதைக்கும் பொழிற்பிண்டி யாயடி யேனைப் புரந்தருளே.

இ-ள். உயிர்களைக் கெடுக்காநின்ற நாற்கதியென்னும்பெயரையுடைய வினையாகிய பண்டியானது உடைந்து அழிய உதைத்த அழகிய பாதங்களாகிய தாமரைப்பூவிரண்டினாலும், தேனைப்புசித்துச் சுரும்பு நெருக்குகின்ற பூக்களையும் துளிரையும் தாங்கி இருளானது தூங்கப்பட்டு உலகத்தைக் கவிக்கும் பெருமைபொருந்திய அசோகினையுடையவனே! அடிமையான வென்னை ஆண்டருள். எ-று.

வி-ரை. இதனால் தான் வேண்டும்பொருள் கூறப்பட்டது. நீ—எழுவாய்; அடியேனை—செயப்படுபொருள்; புரந்தருள்—பயனிலை. (உஉ)

அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

23 புரந்தரரும் வானவரும் புகழ்ந்தடியேங்
குற்றேவல் கொள்கென் றேத்தி
நிரந்தரம்வந் தனைசெய்ய விருந்தருளு
மருந்தவரே நினைந்தோர்க் கெல்லாந்
தரந்தரமன் றெனவொன்றும் பகராது
தவிராத வநந்த நான்மை
வரந்தருமென் றுலகுரைப்ப தும்மையே
லெம்மையெவன் மறந்த வாறே.

இ-ள். நூறிந்திரர்களும் நால்வகைத்தேவர்களும் குணங்களைப்பாடி அடிமையான எங்களுடைய ஏவலை யேற்றுக்கொள்ளென்று துதித்து எப்பொழுதும் வணக்கஞ்செய்ய வீற்றிருக்கின்ற அரிய தவத்தையுடையவரே! நினைத்தவரெல்லாருக்கும் தகுதியுள்ளவரென்றும் தகுதியில்லவரென்றும் ஒன்றினையும் சொல்லாமல் நீங்காத அநந்தசதுட்டயமுளவாக மேன்மையைக் கொடுப்பானென்று சாதுக்களினாற் சொல்லப்படுவது உம்மையானால் எங்களை மறந்தவிதம் என்ன? எ-று.

வி-ரை. இதனால் வேண்டுவோர் வேண்டியது கொடுப்பவன் இவனேயென்பது கூறப்பட்டது. நீர் மறந்தவிதம்—எழுவாய்; எவன்—பயனிலை. (உங)

கலிவிருத்தம்.

24 மறங்கொணேமி விட்டெறிந்து மன்னர்சென்னி சோரியிற்
பிறங்கவென்ற வென்றியோ ரநேகபே ருலோகெலா
மிறைஞ்சவெங்கண் வல்வினைத் தெவ்வர்சிந்த வெந்துபே
ரறங்கொணேமி கொண்டுவென்ற சோதியெங்க ளாதியே.

இ-ள். பாவத்தைக் கொண்ட சக்கரத்தை வீசி அரசர்களுடைய சிரங்கள் இரத்தத்தினால் விளங்கச் செயித்த வெற்றியையுடையோர் அநேகர்; உலகமெல்லாம் வணங்கக் கொடுமையான வலியையுடைய இருவினையாகிய பகைவர்கெடக் கருகிப் பெரிதாகிய தருமசக்கரத்தைத் தன்னிடத்திற் கொண்டு செயித்த சோதியானவர் எமது சுவாமி. எ-று.

வி-ரை. இதனால் மித்தியாதெய்வம் பழிக்கப்பட்டது. ஆதியானவர்—எழுவாய்; சோதி—பயனிலை. (உச)

காப்பியக்கலித்துறை.

25 ஆதியே யாதி யின்றி யகிலமும் பரந்துநின்ற
சோதியே சோதி மூன்றி லெழுதரு சுடரேவான
வீதியே வீதி போகும் வெறிமலர்ப் பாகாவேத
மோதியே நின்னை யல்லாற் பிறரையென் னோதுமாறே.

இ-ள். முதல்வனே! உனக்கொருமுதலில்லாமல் உலகமுழுதும்நிறைந்திருந்த ஒளியே! பிரபாவலயமூன்றினுள் உதிக்கும் சூரியனே! ஆகாயமாகிய வீதியையுடையவனே! அவ்வாகாயவீதியில் செல்கின்ற வாசனைபொருந்திய பூவாகிய யானைக்குப் பாகனே! வேதங்களைச்சொன்னவனே! உன்னையல்லாமல் அன்னியரை என்னகாரணம் சிலர் துதிக்கும்விதம்? எ-று.

வி-ரை. இதனால் பிறதெய்வங்கள் துதித்தற்குத்தகுதியுடையனவல்ல வென்பது கூறப்பட்டது. ஓதுமாறு—எழுவாய்; என்—பயனிலை. (உரு)

## அம்மானை.

ஆசிரியவிருத்தம்.

26 ஓத நெடும்புவி யொன்றென நின்ற முதற்பொ ருளம்மானை
யொற்றை நெடுந்தரு மச்சுடர் நேமி யுயர்த்தவ னம்மானை
யேத முனிந்தியல் வேத மொழிந்த பரம்பர னம்மானை
யிந்திரர் தந்தொழில் வந்திவ னன்பரை யேத்துத லம்மானை

காத மகன்ஞெரு காதரை சென்று நிமிர்ந்தலர் தோடுதொறுங்
கான முரன்றறு கால்பரு குங்கமழ் கண்ணிறை தண்ணளினப்
போதக மல்லது போதக மேறுவ தொன்றில னம்மானே
போதி லிவன்சர ணல்ல தெவன்சில போற்றுவ தம்மானே.

இ-ள். கடல்சூழ்ந்த நீண்ட உலகத்தார் ஒன்றென்று சொல்ல இருந்த ஆதியாகிய பொருளானவன்; ஒன்ருகிய மிகுந்த அறமாகிய ஒளியையுடைய சக்கரத்தைப் பிடித்தவன்; குற்றங்களைக் கெடுத்து நடக்கும் வேதங்களைச் சொன்ன சுவாமியானவன்; இந்திரர்களுடைய செய்கையானது, உலகத்தில் வந்து இந்த அருகனுடைய பக்தர்களைத் துதித்தல், ஒருகாதம் பரந்து ஒன் றரைக்காதம் நீண்டு ஒன்றரைக்காதம் கனத்து மலர்ந்த எல்லாவிதழ்களினும் இராகத்தைப் பாடி வண்டுகள் குடிக்கின்ற பரிமளிக்கும் தேனுனது நிறைந்த குளிர்ச்சிபொருந்திய தாமரைப் பூவினுடைய இடமல்லாமல் ஆனையேறுவது வேருென்றில்லாதவன்; எப்பொழுதும் இவ்வருகனுடைய பாதங்களல்லாமல் என்னகாரணம் வேருன சில தெய்வங்களைத் துதிப்பது? அம்மானே. எ - று.

வி-ரை. அம்மானை யென்பது இரண்டுபெண்கள் அருகனுடைய புகழைச்சொல்லி யம்மானையாடுங் கிரமம். இதனுல் வேறு தெய்வமில்லை யென்பது கூறப்பட்டது. போற்றுதல்—எழுவாய்; எவன்—பயனிலை. (உசு)

எண்சீர்க்கழிநெடில்விருத்தம்.

27 அம்மானை முடிவிலா ஞானந் தன்னு
லளவிலாப் பொருண்முழுதும் பரந்து நின்ற
பெம்மானை யுலகளவு நிறைந்த சோதிப்
பெருமானை யறியாதே பெருமால் கொண்டிங்
கிம்மான நிலனுகித் தீயாய்க் காலா
யிருசுடரா யெறிபுனலாய் வானுய் மற்று
மெம்மானெவ் வுயிர்களுமாய் நின்ரு னென்றே
யியம்புவார் துணிவென்னே யிருந்தவாறே.

இ-ள். தேவாதிதேவனை, அநந்தஞானத்தினுல் அளவில்லாத அறு வகைப்பொருளினும் பரவிய நாயகனை, முந்நூற்றுநாற்பத்துமூன்றுகயிற் றளவும் பூரணையால் நிரம்பிய முச்சோதியையுடைய சுவாமியைக் கருத்த னென்றறியாதே, மிகுந்த மயக்கங்கொண்டு, இவ்வுலகத்தில் அளவுபட்ட இப்பூமியாகியும் அக்கினியாகியும் வாயுவாகியும் சூரியசந்திரராகியும் அலையை வீசாநின்ற நீராகியும் ஆகாயமாகியும் இவையல்லாமலும் எங்கள் கருத்தன்

அப்பஞ்சபூதங்களைத் தேகமாகக்கொண்ட உயிர்களுமாகியும் இருந்தா னென்றே சொல்லுவார்களுடைய நிச்சயம் என்னவிதம் இருந்தது? எ-று.

வி-ரை. இதனால் மித்தியாதிருஷ்டிகள் சுவாமியினது நிலையுணராதவ ரென்பது கூறப்பட்டது. துணிவிருந்தவாறு—எழுவாய்: என்னே—பயனிலை. (உஎ)

அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

28. இருந்தாய் வேறே யரியணைமே லெல்லா வுலகுந் தொழவுலகை
யருந்தா வுமிழா திருந்தாயென் றறையா நின்ற மறையானால்
விருந்தார் சுரும்பு கொப்புளிக்கும் வேரித் துவலை யாரியருப்
பெருந்தாளசோகமொன் றுடையாயாதோ வுண்மைபேசாயே.

இ-ள். வீற்றிருந்தாய், தனியே சிங்காதனத்தின்மேல், மூவுலகும் வணங்க: அவ்வுலகத்தை ஞானத்தாலுட்கொண்டு வெளிவிடாமல் அடக்கி யிருந்தாயென்று சொல்லாநின்றது வேதமானால், விருந்தாக வுண்கிற வண்டுகள் கொப்புளிக்கின்ற தேனினுடைய துளியாகிய மழை நீங்காத பெருத்த அடியையுடைய அசோகமென்னும் ஒரு மரத்தை யுடையவனே! எதுவோ நிச்சயம்? தெரியச்சொல்லுவாய். எ-று.

வி-ரை. இதனால் உலகுண்ணுங்கிரமம் மித்தியாதிருஷ்டிகளறியாதவ ரென்பது கூறப்பட்டது. உண்மை—எழுவாய்: யாதோ—பயனிலை. நீ—எழுவாய்: பேசாய்—பயனிலை. மூவுலகமாவன:—சுவர்க்கம், மத்தியம், பாதலம்.

வெண்பா.

29. பேசி லகண்டமுநின் பேரறிவின் பாலதவ்
வாசி லறிவுன் னகத்ததான்—மாசிகந்த
மெய்ஞ்ஞான வேந்தர்தொழ வீற்றிருந்தாய் நீயல்லா
லிஞ்ஞால முண்டார்மற் றியார்.

இ-ள். சொல்லுங்கால் எல்லாவுலகமும் உனது அநந்த ஞானத்தி னுள்ளடங்கியது: குற்றமில்லாத அவ்வநந்தஞானம் உனது உள்ளத்திலிருப்ப தாகையால், குற்றத்தினின்றும் நீங்கிய நிச்சயஞானத்தினையுடைய முனிவர் வணங்க எழுந்தருளியிருந்தாய் நீயல்லாமல் இவ்வுலகத்தை விழுங்கினவர் வேறே யாவர்? எ-று.

வி-ரை. இதனால் அநந்தஞானத்தையுடையவன் இவனே யென்பது கூறப்பட்டது. உண்டார்—எழுவாய்; மற்றியார்—பயனிலை. (உகூ)

அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

30. யாரே கால மூன்றுமுழு தெல்லா வுலகு முடனளந்தார்
நீரே யானு லுலகளந்த நெடுமா லென்ப துமையன்றே
காரே சிறந்து மலர்களுலிக் களிவண் டறைய நறவொழுகிப்
பாரேழ் கமழும் பூம்பிண்டி நிழலீ ரொருசொற் பகரீரே.

இ-ள். உம்மையன்றி யெவர்? முக்காலத்திலும் அறுவகைப்பொருளை யும் உலகமெல்லாவற்றையும் ஒரு தன்மையாகப் பேரறிவினுலளந்தவர்; நீ ராலுல் உலகத்தையளந்த நெடுமாலென்று சொல்லுதல் உம்மையன்றே? கருமைமிகுந்து பூக்கள்நெருங்கிச் செருக்கையுடைய சுரும்புகள் மோதத் தேனுனது பெருகி எழுவகை யுலகமும் பரிமளியாநின்ற அழகிய அசோகி னுடைய நிழலையுடையீர்! அவரிவரென்னுஞ் சொல்லை யானறியும்படி சொல்லுவீர். எ-று.

வி-ரை. இதனுல் நெடுமாலென்பவனு மிவனென்பது கூறப்பட்டது. நிழலீர்—எழுவாய்; ஒரு சொல்லை—செயப்படுபொருள்; பகரீர்—பயனிலை.

எண்சீர்க்கழிநெடில்விருத்தம்.

31. பகரலாங் குணக்கடல்சேர் முனிவர் சிந்தைப்
பாற்கடற்கண் வளர்ந்தபரந் தாமன் றன்னை
நிகரிலா வினைப்பகைவர் சிந்த வன்று
நெடுவிசும்பின் முகடுருவி நிமிர்ந்த மாலை
மகரவா ருதிவலயத் துலக மேழு
வந்திறைஞ்ச வருளாழி வலங்கொண் டேந்துஞ்
சிகரமா மணிநீல வண்ண வெற்பைத்
தேருதார் தாந்தம்மைத் தேரு தாரே.

இ-ள். சொல்லும்படியான நற்குணமாகிய சமுத்திரத்தைச் சேர்ந்த முனிவர்களுடைய மனமாகிய பாற்கடலிலே அமர்ந்திருக்கும் சித்தியாகிய இடத்தையுடையவனை, ஒப்பில்லாத வினைகளாகிய சத்துருக்கள் கெடும்படி கருமத்தைக் கெடுத்தவன்று நீண்ட ஆகாயத்தினுடைய உச்சியைக்கடந்து வளர்ந்த பெருமையையுடையவனை, மகரமச்சம் பொருந்திய கடல் சூழ்ந்த வட்டத்தில் எழுவகையுலகமும் ஆநந்தமடைந்து வணங்கத் தருமசக்கரத்தை வலதுபக்கத்திற்கொண்டு தாங்குகின்ற சிகரத்தையுடைய பெருமை

பொருந்திய அழகிய நீலநிறம்பொருந்தியமலையைக் கடவுளென்று தெளியாதவர் தங்களுடைய குணத்தைத் தெளியாதவர்கள். எ-று.

வி-ரை. இதனால் அருகனைக் கடவுளென்று தெளியாதவர்கள் முத்தி பெறாதவரென்பது கூறப்பட்டது. தேறாதார்—எழுவாய்: தம்மை—செயப்படுபொருள்: தேறாதாரே—பயனிலை. (௩௧)

கலிவிருத்தம்.

32. தேறி னார்தொழுந் தீர்த்தனை வேட்கைநோய்
ஆறி னானையெம் மச்சுதா நந்தனை
மாறி லாத மலர்மகள் காந்தனைக்
கூறி னார்வையங் கூறநின் றார்களே.

இ-ள். பரமாகமத்தைத் தெளிந்தவர்கள் வணங்குகின்ற அருகனை, இச்சையாகிய வியாதியானது தணிந்தவனை, எங்களுடைய கெடாத இன்பத்தை யுடையவனை, மாறுபாடில்லாத முத்திநாயகியினுடைய நாயகனைத் துதித்தவர்களே உலகத்தார் துதிக்க முத்தியினின்றவர்கள். எ-று.

வி-ரை. இதனால் அருகனைத் துதித்தவர் பெறும் பேறு கூறப்பட்டது. கூறினார்—எழுவாய்: கூறநின்றார்—பயனிலை. (௩௨)

காப்பியக்கலித்துறை.

33. நின்றன நின்ற குணங்களி னின்றியல் பொருள்யாவுஞ்
சென்றன சென்ற குணங்களி னென்றனை திருமாலே
குன்றலி லின்ப வரம்பெற நின்றவர் கொண்டாரிஃ
தொன்றல ரொன்றல் கருங்கதி சென்றிட ருறுவாரே.

இ-ள். அழகிய பெருமையையுடையவனே! நித்தியமாய் நின்று முக்காலத்தினும் நடக்கின்ற அறுவகைப்பொருளும் நிச்சயநயங்களினால்நித்தியமாயினவென்றும், விவகாரநயத்தினா லநித்தியமாயினவென்றுஞ் சொன்னாய்; இதைக் கேடில்லாத பேரின்பமாகிய மேன்மையையுடைய நன்னெறியினின்றவர் உண்மையென்றே கொண்டார்; பெருத்த நாற்கதியிற் சென்று துன்பத்தை யடைபவ ரிருமொழியு மொன்றுதலுக்குப் பொருந்தாதவராயினர். எ-று.

வி-ரை. இதனால் திவ்வியத் தொனியினுடைய தன்மை கூறப்பட்டது. நின்றவர்—எழுவாய்; கொண்டார்—பயனிலை. (௩௩)

## புயவகுப்பு.

34 உறவுலகையல ரெனவெடுத்தணு
வொன்றிற்றற் கணத்தளந்தியல்
ஒழிவில்பலதொழில் களுமுடித்திய
லும்பெற்றி க்ரியைக்கியைந்தன
வுயிர்பருகுபர சுதனுவச்ரமெ
னுஞ்செற்றப் படைக்கலந்தொடல்
ஒருவியகிலசக முழுதுமுற்பணி
யும்பொற்பிற் சயத்துயர்ந்தன

விறல்கொளிருவினை யரசரைச்சுடர்
வெண்கட்கத் தினிற்றடிந்தெழு
விரிபுடவியுறு படர்கெடக்ருபை
யொண்சக்ரத் தினிற்புரந்தன
விழைகளபவள றுநறவுக்கொழு
குஞ்சித்ரத் தொடைச்சுரும்பிவர்
வெறிகுலவுதெரி யலணிமுத்தமு
னிந்தொப்பற் றுமிக்கிலங்கின

மறனிலவுகயல் விழிகணற்கலா
நஞ்சித்தத் தினைக்கவர்ந்துறை
மகளிர்வனகல சமுலைகட்கு
வருந்தொற்கத் தினைக்கடந்தன
மறுவில்கலைமதி நுதலிசித்தியெ
னுஞ்சுத்தக் கொடிப்புணர்ந்தன
மலர்வெறியினள வறவுண்மிக்கெழு
மின்பத்திற் றிளைத்தியைந்தன

*அறனிலடல்கெழு கமடனக்ரம
சண்டத்துட் குறக்கனன்றெறி
யனலமடுபடை யசனிவெற்பெனு
மென்பத்மத் துணர்க்கமர்ந்தன
அகிலதலவர சர்கள்கவித்தநெ
டுஞ்சத்ரத் திரயத்தசஞ்சல
னபரிமிதகுண வரநிதித்தலை
வன்கொற்றத் திருப்புயங்களே.

---

*"வரையம்பு காயெரி•மாரிக ளாயவ் வயிரியெய்த, திரையம்பு காக்கடல் பூக்கடலாக" என்றார் திருநூற்றந்தாதியினும் (௯௪).

4

இ-ள். பொருந்த உலகத்தை மலர்போலத் தாங்கியும் பரமாணு வொன்றினால் அந்தக்கணத்திற்றானே அவ்வுலகத்தை யளந்தும் சாரித்திரம் நீங்காத பலசெய்கைகளும் செய்துமுடித்து மேன்மேலும் பேற்றினையுடைய செய்கைக்குப்பொருந்தின; சீவர்களையுண்கின்ற மழுவும் வில்லும் வச்சிரமு மென்னும் கொல்லுமாயுதங்களைப் பிடித்தலினின்றும் நீங்கி எல்லாவுலகமும் எதிரினின்றுவணங்குகின்ற அழகுடைய செயத்திலோங்கின; வலியைக் கொண்ட இருவினைகளாகிய மன்னவரை விளங்குகின்ற சுக்கிலத்தியானமான வாளினாற் கொன்று எழுவகையாய்ப் பரந்த வுலகத்தில் பொருந்தியதுன்பங் கள் நீங்கக் கருணையாகிவிளங்குகின்ற சக்கரத்தினால் இரட்சித்தன; விரும்பப் படுகின்ற சந்தனக்குழம்பையும் தேனானது வழிந்து ஓடாநின்ற விசித்திர மான ஒழுங்காக வண்டுகள் ஏறாநின்ற வாசனையானது விளங்குகின்ற மாலையையும் அழகிய முத்துக்களையும் வெறுத்து ஒப்பில்லாமல் மிகுந்து விளங்கின; பாவமானது அதிகரிக்கின்ற சேற்கெண்டைபோன்ற கண்க ளுடையகலகத்தினாலே நமது மனத்தைக்கிரகித்து, நம்மிடத்துப்பொருந்தும் மாதர்களுடைய அழகுபொருந்திய பொற்கலசம்போன்ற தனங்களுக்கு நோகின்ற சிறுமையைக்கெடுத்தன; களங்கமில்லாத மூன்றாம்பிறைபோன்ற நெற்றியையுடையவளாகிய முத்தியென்றுசொல்லப்படும் நிர்மலமானகொடி போன்ற கன்னியைத் தழுவின; பூவினுடைய வாசனைபோல, எண்ணிக்கை கெட உள்ளத்தில் மிகுந்து எழப்பட்ட சுகத்தைப் பொருந்தியிசைந்தன; நற் செய்கையில்லாத வலிபொருந்திய கமடனானவன், கிரமமல்லாத கொடுமையி னாலே யாவருநடுங்க வெம்பி எறியாநின்ற அக்கினியும் கொல்லாநின்ற ஆயுதங்களும் இடியும் மலையுமென்று சொல்லும் மெல்லிய தாமரைமலர்க ளுக்குப் பொருந்தின; மூன்றுலோகத்தினுக்கும் மன்னர்களாகிய இந்திரர்க ளால் பிடிக்கப்பட்ட நீண்ட முக்குடையினையுடைய சஞ்சலமில்லாதவனும் அளவில்லாத குணங்களாகிய மேலான நிதிக்கு நாயகனுமான அருகபர மேட்டியினுடைய வெற்றியையடைந்த அழகிய தோள்கள். எ-று.

வி-ரை. இதனால் அருகன் அநந்தவீரியனென்பது கூறப்பட்டது. புயங்கள்-எழுவாய்; பொருந்தின, உயர்ந்தன என்பன முதலானவை தனித் தனி பயனிலைகள். (௩௪)

எண்சீர்க்கழிநெடில்விருத்தம்.

35 புயங்க ளாயிரந் திரண்டிரு மருங்கும்
பொங்கி யாயிரம் வரையெனக் குலாவக்
கயங்கொ டாமரைப் போதென மலர்ந்த
கண்க ளாயிரங் களிப்பவிண் ணவர்கோ

னயங்கொ ளாநந்த நாடக மாடி
நாம மாயிரம் பாடவந் தருளுஞ்
சயங்கொ ளாழியங் கடவுளே யெமக்குன்
சரண மாவன வரணமா வனவே.

**இ-ள்.** ஆயிரந்தோள்கள்கூடி இரண்டுபக்கமும் விளங்கி ஆயிரமலைகள் போலப் பிரகாசிக்க, தடாகத்தை யிடமாகக்கொண்ட தாமரைமலர்கள் போல விரிந்த ஆயிரங்கண்கள் ஆநந்தமடைய, தேவேந்திரன் நன்மையைக் கொண்ட ஆநந்தக்கூத்து ஆடி ஆயிரத்தெட்டுநாமத்தையும் துதித்துப் பாட, ஆகாயவீதியில் வரும் சயத்தைக்கொண்ட தருமசக்கரத்தையுடைய அழகிய நாதனே! எங்களுக்கு உனது பாதங்களானவை காவல்களாவன எ-று.

**வி-ரை.** இதனால் சீவன்கள் பிழைத்தற் காதாரமானவன் இவனே யென்பது கூறப்பட்டது. சரணமாவன - எழுவாய்; அரணமாவன - பயனிலை.

அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

36 அரணுங் கொடிய மதின்மூன்று
மழியக் கனன்றீ ரன்றுள்ள
முரணம் பொன்றே நுமக்கங்கு
முதன்மூ வருமே நும்மடியிற்
சரணம் புகுந்தா ரளித்தவர்
தம்மோ டுலக மூன்றையுமே
கரணந் தவிரப் பொருண்முழுதுங்
கண்டீர் பெருமை கண்டோமே.

**இ-ள்.** காவலாகிய கொடுமையையுடைய ஆவரணங்களான முக்குற்ற மும் கெடக் கோபித்தீர்; கோபிக்குங்காலத்தில், மனத்தினதுவலியாகிய ஒரு கணையே உமக்கிருந்தது; அவ்விடத்தில் மூவுலகத்திந்திரரும் உமது பாதத்தில் அடைக்கலமென்று அடைந்தார்கள்; இரட்சித்தது அம்மூவர்களுடனே திரிலோகத்தையும்; ஐம்பொறிகளும் நீங்க அறுவகைப்பொருளையும் பார்த்தீர்! உமதுபெருமையை யாங்கள் பார்த்தோம் எ-று.

**வி-ரை.** இதனால் கருமத்தைக்கெடுத்தமை கூறப்பட்டது. யாங்கள்- எழுவாய்; பெருமையை - செயப்படுபொருள். கண்டோம் - பயனிலை. முக் குற்றங்களாவன:— காமம், வெகுளி, மயக்கம். (௩௬)

அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

37 கண்மூன்று தோற்றியிகல் காமனுடல்
பொடியாகக் கனன்றாய் தூய
விண்மூன்று மதிக்குடைக்கீழ் வீற்றிருந்தாங்
கறமுரைத்தாய் மேவு மாறெ
னெண்மூன்று படக்கிடந்த வெழுமூன்றி
னிரட்டிமறை தோன்றச் சிந்தை
யுண்மூன்று குற்றமவித் தொருமூன்று
பேருலக முணர்ந்த கோவே.

இ-ள். கேவலஞானமாகிய மூன்ருவதுகண்ணைத் தோன்றச்செய்து வலிபொருந்திய மதனனுடைய தேகம் நீருகக் கோபித்தாய்; பரிசுத்தமான ஆகாயத்தில் மும்மதிபோன்ற முக்குடைநிழலில் எழுந்தருளியிருந்து முனிவரிடத்திற் கொல்லாவிரதத்தைச் சொன்னுய்; இரண்டும் பொருந்தும்விதம் எப்படி? கணக்கு மூன்றுவகைப்பட இருந்த இருபத்தொன்றினுடைய இரட்டிப்பாகிய நாற்பத்திரண்டு வேதங்கள் அங்கமாய்த்தோன்றச் சொல்லி மனத்தில் முக்குற்றத்தையும் கெடுத்து மூன்றுவகைப்பட்ட பெரியவுலகத்தை யறிந்த நாயகனே! எ-று.

வி-ரை. இதனுல் அருகனுடைய திவ்யவாக்கே மாறுபாடில்லாதென்பது கூறப்பட்டது. மேவுமாறு—எழுவாய்; என்—பயனிலை. (௩௭)

கட்டளைக்கலிப்பா.

38 கோறன் மாற்றி யுதைப்பது கூற்றையே
கூறு கிற்பது மெய்ப்பொருட் கூற்றையே
யீறி லின்பத் திருக்கும் பதத்தனே
யிலங்கு பூமிசை யேகும் பதத்தனே
மாறில் லாதசொன் மாலைநின் மாலையே
மலர்ந்து தீர்ப்பது மன்னுயிர் மாலையே
சாறு கொண்டளி மூசு மசோகனே
சார்ந்த வர்க்கருள் செய்யு மசோகனே.

இ-ள். கொல்லுதலைநீக்கிக் காலாலுதைப்பது காலனையே; சொல்லுவது உண்மைப்பொருளினுடைய கூறுபாட்டையே; அநந்தசுகத்தில் வீற்றிருக்கும் இடத்தையுடையவனே! விளங்குகின்ற தாமரைப்பூமேல் நடக்கின்ற

பாதத்தையுடையவனே! முன்னொடுபின் மாறுபடாத பரமாகமமாவது உன்னுடைய பரமாகமமே; எங்குஞ் சென்று நீக்குவது, நிலைபெற்ற சீவன்களுடைய மயக்கத்தையே; தேனையுண்டு வண்டுகள் மொய்க்கின்ற பிண்டி மரத்தையுடையவனே! அடைந்தவருக்குக் கிருபையைப்பண்ணுகின்ற சோகமில்லாதவனே! எ-று.

**வி-ரை.** இதனால் அருகனுடைய தன்மை கூறப்பட்டது; நீ - எழுவாய்; கூற்றை, கூறுபாட்டை, மயக்கத்தை—தனித்தனி செயப்படுபொருள்கள்; உதைப்பது, சொல்லுவது, நீக்குவது—பயனிலைகள். (௩அ)

எண்சீர்க்கழிநெடில்விருத்தம்.

39 சோக மேதருந் துன்ப வெங்கதித்
தொடர்ப டுத்துல கிடர்ப டுக்குமிம்
மோக மன்னனைத் தலைய ரிந்துமுன்
னிடுவ னென்னைவிட் டருளு மொய்த்தபோர்
வேக வெங்கணைக் காம னைச்செரு
மெய்யெ லாமுடன் றழுவு கேவலப்
போக மங்கையைத் தழுவி யின்பமே
புரியு மன்பரே புவன நாதரே.

**இ - ள்.** சோபத்தையே கொடுக்கின்ற துயரமான வெப்பத்தையுடைய நாற்கதியாகிய சங்கிலியினால் கட்டி உலகத்தைத் துன்பத்தில் அழுத்துகின்ற இந்த மோகனீயமென்னு மரசனைத் தலையறுத்து முன்னேவைக்கின்றேன்; என்றனை விட்டுப்போரும். நெருங்கிய யுத்தஞ்செய்யும் வேகம்பொருந்திய வெப்பமான பாணங்களையுடைய மன்மதனைக் கோபித்துத்தேகமெல்லாம் ஒரு தன்மையாகத்தழுவுகின்ற முத்தியாகிய இன்பமாதையணைத்துச் சுகத்தையே விரும்புகின்ற ஆசையையுடையவரே! உலகத்திற்கு நாயகரே! எ - று.

**வி - ரை.** இதனால் அருகனுடைய அருள்பெற்றார் முத்தியையடைவரென்பது கூறப்பட்டது. நீர்—எழுவாய்; என்னை—செயப்படுபொருள்; விட்டருளும்—பயனிலை. (௩கூ)

### எழுசீர்க்கழிநெடில்விருத்தம்.

40 நாதனக் கமிழ்து நன்சுவை யுதவு
நற்கனி மருத்துவர் நாணு
நோய்தனைத் தணிக்கு நன்மருந் துழலு
நோன்பகை யெறிதருந் திகிரி
வேதனைக் கடலின் றனிப்புணை நெஞ்சம்
வேண்டிய வெலாந்தரு நிதிய
மாதலிற் பரமன் மூலமந் திரமைந்
தெழுத்தல தொன்றறி யேனே.

இ-ள். நாவினுக்கு அமிர்தமும், நல்ல மதுரத்தைக்கொடுக்கின்ற நல்ல பழமும், வைத்தியர் வெட்குகின்ற பிறவிநோயை நீக்குகிற நல்ல அவிழ்தமும், நாற்கதியிற் சுழல்கின்ற வலிபொருந்திய பிறவிப்பகையை அறுக்கின்ற சக்கரமும், துன்பாகிய சமுத்திரத்துக்கு ஒப்பற்ற தெப்பமும், மனமானது விரும்பினவையெல்லாம் கொடுக்கின்ற நிதியும்: ஆகையினாலே அருகபரமேட்டியினுடைய மூலமந்திரமாகிய ஐந்தக்கரமேயல்லாமல் வேறொன்றையும் யான் றெளியேன் எ-று.

வி-ரை. இதனால் மூலமந்திரத்தினது பெருமை கூறப்பட்டது. யான்—எழுவாய்; ஒன்றையும்-செயப்படுபொருள்; அறியேன்-பயனிலை. (௪0)

### அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

41 அறிவரிய குணத்தருக னசரீரி
யாசிரிய னுவாத்தி கோதஞ்
செறிவரிய முனிவரெனுந் திருநாம
முதலெழுத்தோ ரைந்துஞ்* சேர்ந்து
பிறிவரிய வோங்கார முன்னுரைப்பர்
பின்னுமதன் பெருமை யோரார்
பொறிவழியில் வருநாதர் பொருளில்வறும்
பெயர்புணையும் புவனத் தாரே.

---

* ஓம்: க்ஷ வி க்ஷூ உ ஸா—ஓம்: அ. ஸி. ஆ: உ. ஸா—எனக் காண்க. இவை பஞ்சமந்திரமெனவும் பஞ்சநமஸ்காரமெனவும் வழங்கப்படும்.

இ - ள். அறிதற்கு அரிதாகிய குணங்களையுடைய அருகனும் சித்தரும் ஆசாரியனும் உபாத்தியாயனும் குரோதமானது இல்லாத சாதுக்களும் என்று சொல்லப்படும் திருப்பெயரினுடைய ஆதியெழுத்துக்களைந்தும் கூடிப் பிறிதற்கரிதாகிய ஓங்காரத்தை முன்னே சொல்லுவார்; பின்பும் அவ்வோங்காரத்தினுடைய உற்பத்தியினது மேன்மையைப் பகுத்தறியார்; ஐம்பொறியினுடையமார்க்கத்தில் திரிகின்ற தெய்வங்களுக்குப் பொருளில்லாமல் வறுமையாகிய நாமத்தை அலங்கரித்துச்சொல்லும் உலகத்தார்; எ - று.

வி - ரை. இதனால் ஓங்காரம் பஞ்சபரமேஷ்டிஸ்வரூபம் என்பது கூறப்பட்டது. புவனத்தார்—எழுவாய்; பெருமையை—செயப்படுபொருள்; ஓரார்—பயனிலை. (சக)

எண்சீர்க்கழிநெடில்விருத்தம்.

42 புவன நாதரென் றும்மை யாவரும்
புகல்வ ரும்மிடத் திகல்கொள் சிந்தையுங்
கவன மாவும்வெம் படையு மில்லைநீர்
காவல் செய்யுமா றியாவ தாயிரந்
தவனர் கூடிநின் றனைய வாயிரந்
தண்ம திக்குழா மன்ன சோதிகண்
டவனி நாடுகண் குளிர வாடகப்
போது மீதுலா மாதி நாதரே.

இ - ள். மூவுலகத்திற்கும் நாயகரென்று எவர்களும் உம்மைச்சொல்லுவார்கள்; உம்மிடத்தில் பகைகொள்ளுகின்ற மனமும் வேகத்தையுடைய குதிரையும் வெப்பத்தையுடைய ஆயுதங்களும் இல்லையாகையால் நீரானவர் காத்தலைச்செய்யும்விதம் எவ்விதம்? ஆயிரஞ் சூரியர்கள் ஒரு கூட்டமாகக் கூடியிருந்ததொத்த பிரபாவலயத்தில் ஆயிரஞ்சந்திரருடையகூட்டத்தினொளியொத்த காயசோதியைப் பார்த்து உலகத்தார் காண்கின்ற கண்கள் குளிர்ச்சியடையப் பொற்றாமரைப்பூமேல் உலாவியருள்கின்ற ஆதிநாயகரே! எ - று.

வி - ரை. இதனால் பழிப்பதுபோலப் பற்றற்றவனென்பது கூறப்பட்டது. நீர் காவல்செய்யுமாறு—எழுவாய்; யாவது—பயனிலை. (சஉ)

வஞ்சித்துறை.

43 ஆதி நாள்புண, ரேதில் வல்வினை
கோதில் வாமனை, யோதி லோடுமே.

இ - ள். ஆதியிலேதானே சீவனுடன்கலந்த அந்நியமான வலிமை பொருந்திய வினையானாலும், குற்றமில்லாத அருகனைத் துதித்தால் நீங்கும் எ - று.

வி - ரை. இதனால் அருகன் வினைப்பகைவனென்பது கூறப்பட்டது. வினை—எழுவாய்; ஓடும்—பயனிலை. (சங)

கலித்தாழிசை.

44 ஓடுஞ் சகடத் துருளி னுழன்று சுழன்
றாடுங் கதியிலிளைப் பாறுந் திறமென்னோ
வாடுங் கதியிலிளைப் பாறுஞ் சுரும்பினங்கள்
பாடும் பொழிற்பிண்டிப் பண்ணவனைப் பாடவே
பாடாத வன்றடவிப் பல்பிறவி பாடுமினே.

இ - ள். ஓடுகின்ற வண்டியினுடைய சக்கரம்போல அலைந்துசுற்றிப் பிறந்திறக்கும் நாற்கதியில் வந்தவிளைப்பு ஆறும்விதம் எப்படி? அப்படிப்பிறந் திறக்கும் நாற்கதியில் வந்த இளைப்பு நீங்கும்: நால்வகைவண்டுகளும் பாடுகின்ற பெருமைபொருந்திய அசோகினையுடைய அருகனைத் துதிக்கவே; துதியாத அந்நாளிலோவெனில் காடுபோல எழுவகைப்பிறப்புமுண்டாகும்; ஆகையாற் றுதியுங்கள் எ-று.

வி-ரை. இதனால் அருகனைத்துதித்தவர் பெறுமின்பமுந் துதியாதவர் பெறுந் துன்பமுங் கூறப்பட்டது. நீங்கள்—எழுவாய்; பண்ணவனை—செயப்படுபொருள்; பாடுமின்—பயனிலை. எழுவகைப் பிறப்பாவன:—சூக்ஷ்மேகேந்திரியம், பாதரேகேந்திரியம், த்வீந்திரியம், த்ரீந்திரியம், சதுரிந்திரியம், அஸஞ்ஞிபஞ்சேந்திரியம், ஸஞ்ஞிபஞ்சேந்திரியம். (சச)

கட்டளைக்கலித்துறை.

45 பாடுவ துன்னடித் தாமரை பல்வினை மாசறநின்
றாடுவ துன்னடி வாரப் புனலடி யேன்றலைமேற்
சூடுவ துன்னடிச் சேட மலரென் றுணைக்கரங்கள்
கூடுவ துன்னடி கோமா னெனக்கோர் குறையிலையே.

**இ-ள்.** யான் துதிப்பது உனது பாததாமரையை; பலவினைகளான அழுக்கானது நீங்க நின்று குளிப்பது உனது பாதத்திற்பட்ட சலத்திலே தான்; அடிமையான நான் சிரத்தின்மீது தரிப்பது உன்னுடைய பாதத்திற் றரித்துச் சேஷப்பட்ட பூக்களையே; என்னுடைய இருகைகளும் குவிவது உனது பாதத்திற்கே; அருகனே! என்றனக் கோர்குறையும் இல்லை; எ - று.

**வி-ரை.** இதனால் உதீசிதேவர் தாம்பெற்ற இன்பங் கூறப்பட்டது. ஓர்குறை—எழுவாய்; இலை—பயனிலை. (சரு)

காப்பியக்கலித்துறை.

46 இலைவயங்கு கனைகடகத் திமையவர்க
ளமையலரா யேத்தவானோர்
தலைவயங்கு பிணிமகரக் கடலலறக்
கடைந்தமிர்த மளித்தகோவே
மலைமயங்கு திருமார்பின் மலர்மடந்தை
வீற்றிருப்ப மகிழ்வையாகிற்
சிலைவயங்கு தோளனங்கன் றிறலழித்த
விசயமென்னோ விசையுமாறே.

**இ - ள்.** இலைபோல விளங்குகின்ற சத்திக்கும் கங்கணங்களையுடைய தேவர்கள் அடங்காதவர்களாய்த் துதிக்கவே, அந்தத் தேவர்களிடத்தில் விளங்குகின்ற நோயாகிய மகரமீன்பொருந்திய சமுத்திரமானது ஒலிக்கக் கலக்கி முத்தியைக்கொடுத்த நாதனே! மலைபோலே விளங்குகின்ற அழகிய மார்பிலே முத்திலக்குமி வீறியிருக்க நீ மகிழ்வாயானால், கரும்புவில்லானது விளங்குகின்ற கையையுடைய மன்மதனது வலியைக்கெடுத்த செயமானது எப்படிப் பொருந்தும்விதம்? எ - று.

**வி - ரை.** இதனால் பழிப்பதுபோல விருப்பற்றவனென்பது கூறப் பட்டது. இசையுமாறு—எழுவாய்; என்—பயனிலை. (சசு)

அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

47 இசைபெருக வருள்பெருக மதிமலர
விணையில்சுக மூழி நிலவத்
திசைமருவு துகிலிறைவர் செழுநெறியில்
வருசதுரர் சேர நினையார்

நசைபெருக வினைபெருக நவைநலிய
வுயிர்கள்பல தேய வொழியா
வசைபெருக மயல்பெருக மதுநறவு
தசைநுகரு மாய நெறியே.

இ - ள். புகழானது வளரவும் சீவகாருண்ணியமானது வளரவும் அறிவானது பெருகவும் ஒப்பில்லாத பேரின்பமானது நீடூழிகாலம் விளங்கவும் திக்குகளையே பொருந்திய வஸ்திரமாகத்தரித்த அருகருடைய செழித்த மார்க்கத்தில் நடக்கும் யோக்கியர்கள் அடைய எண்ணார்கள்: ஆசையானது வளரவும் தீவினையானது வளரவும் குற்றங்களால் வரும் பிணிகள் வருத்தவும் பலசீவன்கள் குறையவும் நீங்காத நிந்தையானது வளரவும் மயக்கமானது வளரவும் தேனையும் கள்ளையும் நிணங்களையும் உண்கின்ற பொய்யான மார்க்கத்தை; எ - று.

வி - ரை. இதனால் சினசமயத்தினது நன்மையும் அன்னிய சமயத்தினது தீமையும் கூறப்பட்டன. சதுரர்—எழுவாய்; மாயநெறியை—செயப்படுபொருள்; நினையார்—பயனிலை. (சஎ)

அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

48 மாயஞ் செய்யுங் கரியநெடு மாலு மணுகா மலரடியாய்
சீயஞ் சுமந்த மணியணைமேற் றிகழுஞ் சுடரே தீவினையேன்
காயஞ் சுமந்து தடுமாறிக் கதியொன் றறியா திழிகதியிற்
போயஞ் சியபின் னீயஞ்ச லென்னு தொழிகை போதாதே.

இ - ள். வஞ்சனையைப் பண்ணுகின்ற கருத்த மிகுந்த மயக்கத்தைச் செய்யும்வினையும் தொடராத தாமரைமலர்போன்ற பாதத்தையுடையவனே! சிங்கமானது தாங்கிய மணிகளிழைத்த ஆசனத்தின்மீது விளங்குகின்ற ஞானசூரியனே! தீயவினையையுடைய நான் தேகத்தைத் தாங்கிக்கொண்டு மயங்கிப் பிறவாதகதியொன்றையறியாமல் இழிவான நாற்கதியிற் பிறந்து பிறந்து பயந்தபின்பும் நீ பயப்படேல் என்று சொல்லாமல் கருணையினின்று நீங்குகை உனது தலைமைக்கேலாது. எ - று.

வி - ரை. இதனால் தனது குறை கூறப்பட்டது. நீயொழிகை—எழுவாய்; போதாது—பயனிலை. (சஅ)

எண்சீர்க்கழிநெடில்விருத்தம்.

49 போதின்மிசைப் பிறந்திருந்து நடந்து பின்னும்
புலவர்மனப் போதுதொறும் புரிந்து வாழு
மாதிமுதற் கடவுளுக்குக் குணப்பேர் தூய
வாயிரத்தெட் டுடையவர்க்கைந் துளவா மென்ப
கோதில்புகழ்ச் சத்தியோ சாதன் வாமன்
கோரனீ சானன்றற் புருட னென்று
சாதமுதற் கலியாண மைந்தின் வானோர்
தாமன்பா விட்டதிரு நாமந் தானே.

இ-ள். தாமரைப்பூமேல் தோன்றி வீற்றிருந்தும் தருமகண்டங்களி லுலாவியும் திரும்பவும் விவேகிகளுடைய இதயகமலந்தோறும் விரும்பி வாழ்கின்ற ஆதிமுதலாகிய சுவாமிக்கு, குணங்களைக் கூறும் பெயர் பரிசுத்தமான ஆயிரத்தெட்டை உடையரான அருகருக்கு, மேலு மைந்துநாமங்கள் உண்டாயிருக்கின்றன என்று சாதுக்கள் சொல்லுவர்; குற்றமில்லாத புகழ்ச்சியையுடைய சத்தியோசாதனென்றும் வாமனென்றும் கோரனென்றும் ஈசானனென்றும் தற்புருடனென்றும் பிறப்புமுதலாகவுண்டாகிய பஞ்சகல்யாணத்தினால் தேவர்கள் தாங்கள் அன்பினாலே வைத்த அழகிய பெயர்கள்; எ-று.

வி-ரை. இதனால் பஞ்சகல்யாணமுடையவன் அருகனே யென்பது கூறப்பட்டது. சாதுக்கள்—எழுவாய்; உளவாமென்ப—பயனிலை. (சகூ)

அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

50 நாம்பரவுந் திறமென்கொ லுவாயி
ரம்படைத்தும் வான வேந்தர்
தாம்பரவு மாறறியா துண்மயங்குந்
தண்மலர்ப்பூம் பாதம் பாதம்
பூம்பதும வாரணத்தான் பூரணவா
ரணம்பயந்த புனிதன் செய்ய
தேம்பதும வடிபணிவா ரடிபரவி
யடிபரவிச் சேறு நெஞ்சே.

இ-ள். நாங் துதிக்கும்வகை எப்படி? ஆயிரநாவினை விகுர்வணையாற் பெற்றும் இந்திரர்கள் தாங்கள் புகழ்கின்றவிதத்தை யறியாமல் மனமயங்கப் பட்ட குளிர்ச்சியாகிய தாமரைப்பூப்போன்ற பொலிவினையுடைய பாதங்கள் பாதங்கள்; அழகிய தாமரையாகிய யானையையுடையவன், நிறைவான வேதங்களைத் தந்த நிருமலனுடைய சிவந்த வாசனைபொருந்திய தாமரைப் பூப்போன்ற பாதங்களை வணங்கு மடியாருடைய பாதங்களைத் துதித்து அவ்வடியாருக்கடியாருடைய பதங்களைத் துதித்துச் செல்லுவோம், மனமே! எ-று.

வி-ரை. இதனால் வழிபடுமுபாயங் கூறப்பட்டது. பரவுந்திறம்—எழுவாய்; என்கொல்—பயனிலை; நாம்—எழுவாய்; சேறும்—பயனிலை. (ரு௦)

பதினான்குசீர்க்கழிநெடில்விருத்தம்.

51 நெஞ்சத் தருளுடை யவர்கட் கணுகுத
லெளிதா யருவினை யவர்கட்கு
நினைவிற் குறுகலு மரிதா யொளியொடு
நீளா வடைபவர் மீளாதோர்
தஞ்சத் தொடுபகை பசிநோய் மறலிகள்
சாரா திறுதியில் பேரின்பந்
தள்ளா வெள்ளமொ டெல்லா வுலகமும்
விழையத் திகழ்தரு தனிநாடா
வஞ்சத் தினினழல் வேரத் தினினிகன்
மானக் கமடன்* முன் னெறியுங்கார்
மலையைச் சொரிதரு கனலைப் பொழிதரு
மழையைக் கொலைதரு படையைப்பா
ரஞ்சத் தெறுமிடி யுருமைத் திருமல
ராகக் கொண்டருள் பெரியோனே
யலரே கொண்டுநின் னடியே தொழுமெனை
யருளா தொழுகுத லமையாதே.

---

* "அறனிலடல்கெழு கமடனக்ரம சண்டத்துட் குறக்கனன்றெறி, யனலமடுபடை யசனிவெற்பெனு மென்பத்மத் துணர்க்கமர்ந்தன" என்றார் முன்னும் (ருச).

இ - ள். மனத்திலே சீவகாருண்யமுடையவர்களுக்குச் சேருதல் எளிமையுடையதாய், அரிதான தீவினையை யுடையவர்களுக்கு எண்ணத்தினாற் சேருதலும் அருமையுடையதாய், முச்சோதியுடன் சென்றுசேருமவர் மீளப்படாமலும், எளிமையுடனே வெறுப்பும் பசியும் வியாதியும் காலன் முதலானவர்களும் சேரப்படாமலும், முடிவில்லாத அநந்த சுகமாகிய நீக்கப் படாதசமுத்திரத்துடன் உலகமெல்லாம் விரும்ப விளங்குகின்ற ஒப்பற்ற முத்திநாட்டையுடையவனே! கபடத்தினாலும் கோபிக்கின்ற வைரத்தினாலும் பகைகொள்ளும் வலியையுடைய கமடனானவன் எதிரினின்று எடுத்தெறிந்த மேகஞ்சூழ்ந்த வெற்பையும் சொரிந்த நெருப்பையும் பொழிந்த மழையையும் கொல்லும்படியான ஆயுதங்களையும் பூமியிலுள்ளார் நடுங்கக் கொல்லுகின்ற இடியேற்றையும் அழகிய பூவினங்களாக ஏற்றுக்கொண்ட மேலானவனே! மலர்களையே கைக்கொண்டு உன்னுடைய பாதங்களையே வணங்குகின்ற என்னை இரட்சியாமற்போகுதல் உனது தலைமைக் கேலாது; எ - று.

வி - ரை. இதனால் தனது குறை கூறப்பட்டது. ஒழுகுதல்—எழுவாய்; அமையாது—பயனிலை. (௫௧)

அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

52 மைச்சந்த மாமுகில்கா ளுலகளந்த
முகில்வண்ணன் மருவு நீல
வுச்சந்த மலைகுறுகி வலங்கொண்டு
பணிந்துநீ ரும்பர் நாடு
நிச்சந்தம் வினைகெடவா டியதீர்த்த
நெடுவாரி முகந்து போந்தென்
மெய்ச்சந்த மழியவரு நோய்தீர
வினையேன்மேல் வீசு வீரே.

இ - ள். கருத்த அழகையுடைய பெருமைபொருந்திய மேகங்களே! உலகத்தைப் பரமாணுவாலளந்த மேகம்போன்ற நிறத்தையுடைய நேமிநாத சுவாமிபொருந்திய நீலநிறமான ஊர்ச்சயந்தகிரியை யடைந்து வலஞ்செய்து வணங்கி, நீங்கள் தேவர்களும் உலகத்தாரும் தினந்தோறும் தங்களுடைய தீவினைகள் நீங்கக் குளிக்கின்ற சுத்தமாகிய மிகுந்த சமுத்திரத்தில் மொண்டுகொண்டுவந்து எனது மெய்யழகுகெடவருகின்ற வியாதியானது நீங்கத் தீவினையுடையேனாகிய வென்மீது, அந்த நீரைப் பொழியுங்கள்; எ-று.

**வி - ரை.** இதனால் அடியவருடையபெருமை கூறப்பட்டது. நீர்—எழுவாய்; நீரை—செயப்படுபொருள்; வீசுவீர்—பயனிலை. (ருஉ)

எண்சீர்க்கழிநெடில்விருத்தம்.

53 வீசுடல மெறிதிரையின் மேவுகடன் மருவுபுணை
வேகவினை வனமடைய வீழவுட னெறியுமழு
வாசையவிர் பொறியரவி னுவிசெல வதிருமிடி
யாறுதுரு நயமயல்க ளாயவிருள் பருகுசுடர்
மாசிலருண் முனிவர்மன வாவிநடு வலருமலர்
வானவரா சர்கண்முடியின் மாமகுட சிகையின்மணி
யேசரிய சிவகதியி லேறுமவர் குறுகுநெறி
யேடவிழு நளினமிசை யேகுமவ ரடியிணையே.

**இ - ள்.** வினையைக் கொடுக்கின்ற தேகமாகிய அடிக்கின்ற அலையினாலே பொருந்திய பிறவிக்கடலுக்குப் பொருந்திய தெப்பமாம், வெப்பத்தையுடைய தீவினைக்காடு முழுவதும் அழிய ஒருதன்மையாக வெட்டுகின்ற கோடாலியாம், இச்சையாகிய விளங்குகின்ற புள்ளிகளுடைய பாம்பினுடைய உயிரானது நீங்க முழங்குகின்ற இடியாம், ஆறுவகைப்பட்ட ஏகாந்தவாதமென்னும் மயக்கங்களான இருட்டைப் போக்குகின்ற சூரியனும், குற்றமில்லாத சீவகாருண்ணியத்தையுடைய முனிவர்களுடைய மனமாகிய தடாகத்தினது மத்தியில் மலர்கின்ற பூவாம், இந்திரருடைய சிரத்திற்றரிக்கும் பெருமைபொருந்திய கிரீடத்தினுடைய உச்சியிலிருக்கின்ற இரத்தினமாம், இகழ்வில்லாத முத்தியிற் சேருகின்றவர்கள் அடைகின்ற வழியாம், இதழ்விரிகின்ற தாமரைப்பூமேல் நடக்கின்றவராகிய அருகருடைய இரண்டு பாதங்களும்; எ - று.

**வி - ரை.** இதனால் அருகனதுபாதத்தை நினைத்தவர்க்கு வரும்பயன் கூறப்பட்டது. அடியிணை—எழுவாய்; புணை மழு முதலியன தனித்தனி பயனிலை. (ருங)

ஆசிரியவிருத்தம்.

54 இணைவள ரிளமுலை வெற்பாலே
யிடைதளர் பவர்பவ ளத்தூடே
யெழுதரு நகைபெறி லத்தாலே
யெழுபுவி யொடுநிலை பெற்றார்போல்

அணைவுறு மகிழ்வொடு பித்தேறு
வயர்பவ ரிறைமையை மெச்சாதே
யகல்வன கதிகள்பெ றிற்போரா
வகதியை யெனையது நச்சேனீள்

பணைதிசை முழுதுநெ ருக்காநேர்
படரொளி யுலகுற விப்பால்வேர்
பனிபடு கடலையொ துக்காவூர்
பணிநில மிடைதர முற்றுவார்

பிணையல்கள் சொரிவிரை மட்டாலேழ்
பெருநில நனைதர முட்டாதோர்
பெருகிய செயலையின் மெய்ப்பாலோர்
பிறவிக ளறவமர் புத்தேளே.

**இ-ள்.** இரண்டும் ஒத்துப் பூரிக்கின்ற இளமைபொருந்திய தனங்களாகிய மலைகளாலே இடையானது வருந்து மாதர்களுடைய பவளமாகிய வாயினின்று உண்டாகாநின்ற சிரிப்பைத் தாங்கள் பெற்றால் அந்தச் சிரிப்பினாலே ஏழுலகுடனே பேரின்பநிலையையும் அடைந்தவரைப்போல, பொருந்திய மகிழ்ச்சியுடன் பித்தேறி மயங்குபவருடைய சுவாமித்துவத்தைப் புகழாமல் நீங்குவனவாகிய மார்க்கங்களை யான் பெற்றால் எக்காலு நீங்கப்படாத முத்தியை எத்தன்மையதென்று விரும்பேன்; நீண்ட கிளைகள் எட்டுத்திக்கையும் நெருக்கி நேரேபடர்ந்துபோய்ச் சோதிடலோகத்தை அடைய, கீழ்ப்பாலான வேரானது குளிர்ச்சிபொருந்திய சமுத்திரத்தை யடக்கி ஊர்கின்ற பவணருலகத்தைச் சேர, சூழ்பவருடைய மாலைகள் பொழிகின்ற வாசனைபொருந்திய தேனினால் எழுவகைப்பட்ட பெருமையையுடைய பிராகாரங்கள்* நனைய, முட்டுப்படாமல்வளர்ந்த அசோகநிழலில் உண்மைத்தன்மையோருடைய பிறப்புக்கள் நீங்க அமர்ந்த கடவுளே! எ-று.

**வி-ரை.** இதனால் மித்தியாதெய்வங்கள் பழிக்கப்பட்டன. ஓரென்றவிரண்டும் அசை. யான்—எழுவாய்; அகதியை—செயப்படுபொருள்; நச்சேன்—பயனிலை. (ருச)

---

* பிராகாரங்கள் ஏழாவன:—மானஸ்தம்பம், ஜலகாதிகை, புஷ்பவனம், சைத்தியவிருக்ஷம், துவஜபூமி, சித்தார்த்தவிருக்ஷம், ஸ்தூபஹர்மாவலி என்பன.

## சித்து.

### ஆசிரியவிருத்தம்.

55 புத்தே ளுலகைப் பொன்னுலக
மாக்கி வடகற் குன்றினையும்
பொற்குன் ருகப் பேதித்துப்
போந்தோம் பூலோ கத்தினுக்கும்
வைத்தோங் குளிகை யதுநினக்கு
வகுத்தோம் வறியோ நின்பாலே
வந்தோம் வருக நன்பாலுஞ்
சோறு மெனவே மயங்கியிடுஞ்
சித்தோ நஞ்சித் துலகனைத்துஞ்
சேவித் தேவ றனைச்செய்யத்
தேவா திபனைப் மூவாது
செம்பொற் புரிசை நடுவிருக்கு
மத்தா வுனக்குக் குளிர்பிண்டி
யம்மா ணாணை தருகின்றே
மருந்து மருந்து மூன்றவையு
மகத்தே காட்டித் தருவோமே.

இ - ள். தேவருலகைப் பொன்னுலகமாகச் செய்து வடக்கிருக்குங்கன் மலையையும் பொன்மலையாகப் பேதப்படுத்திவந்தோம்; மண்ணுலகத்திற்கும் வைத்திருக்கின்றேம் இரசகுளிகையை; அக்காரியத்தை யுனக்குச் சொன்னேம்; வறுமையையுடையோம்; அப்பா! உன்னிடத்தில் மனங்கொண்டு வந்தோம்; உண்டாகுக நல்லபாலுஞ் சோறுமென்று மயக்கமடையும் சித்தர் யாம். நமது சித்துவித்தையை, உலகனைத்தும் வணங்கி ஏவலைப்பண்ணத் தேவர்களுதனுகிக் கெடாமல் செம்பொன்னுலாகிய மும்மதிலினுடைய மத்தியில் வீற்றிருக்கின்ற குளிர்ச்சிபொருந்திய அசோகினுடைய அருகனுடைய ஆணைப்படி நினக்குக் கொடுக்கின்றேம்; நீ புசி; இரத்தினத்திரயமாகிய மும்மருந்துகளையும் உன்மனத்திலேதானே நாங்கள் காட்டிக்கொடுப்போம்; எ-று.

வி-ரை:—இதனுல் சித்துவித்தையாற் பயனின்றென்பது கூறப்பட்டது. யாங்கள்—எழுவாய்; மருந்தவையும்—செயப்படுபொருள்; காட்டித்தருவோம்—பயனிலை. (ருரு)

அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

56 தருமத் திகிரிப் படையிற் புவனத்
திரயந் தனையாள்வாய்
கருமக் கடலைச் சுவறக் கடையுங்
கடவுட் கணநாதா
வொருமைப் படவுற் றுனபொற் கமலச்
சரணத் துளம்வைக்கும்
பெருமைத் திருவைத் தரின்மற் றடிமைத்
திறனிற் பிழையேனே.

இ - ள். தருமமாகிய சக்கராயுதத்தினால் மூன்றுலகத்தையும் ஆள்பவனே! வினையாகிய சமுத்திரத்தை வற்றக்கடைகின்ற முனிகணங்களுக்கு நாயகனே! ஒன்றுபடப்பொருந்தி உன்னுடைய பொன்னாலாகிய தாமரைப்பூப்போன்ற பாதங்களில் மனத்தை இருத்தும்படியான பெருமையுடைய செல்வத்தைக் கொடுத்தால், அடிமைசெய்யும் முயற்சியினின்றும் நான் தப்பிப்போகேன் எ - று.

வி-ரை. இதனால் அருகனுடைய அருள்பெற்றவருக்குக் குறைவின்றென்பதுகூறப்பட்டது. நான்—எழுவாய்; பிழையேன்—பயனிலை. (ருசு)

எண்சீர்க்கழிநெடில்விருத்தம்.

57 பிழைபிறங்க நீண்டநசை
பெருகவந்து வாழ்ந்தவர்கள்
பிறகுநின்று வான்கவிகள்
பிணையுமைந்தர் போன்றுமத
மழைசொரிந்து காய்ந்தகரி
வரதுரங்க மேந்துபிடி
மணிதயங்கு பூண்டுகில்கள்
வருகவென்று வேண்டலிலன்
விழவமைந்த பூந்தொடையன்
மிஞிறுபொங்க வார்ந்துதிசை
வெறிபரந்து தேன்றுவலை
விரவுதென்றல் சூழ்ந்துவெயில்

குழைவடங்க ணூன்றுபுடை
யிருள்செறிந்து தூங்குகுளி
ரெழில்கொள்பிண்டி வேந்தநினை
யெனகுணங்கள் வேண்டுவனே.

இ-ள். குற்றங்கள் விளங்க மிகுந்த ஆசையானது வளரப் பொருளை நாடிவந்து, வாழ்வடைந்தவர்களுடையபின்னேநின்று மேலானபாட்டுக் களைப் பிணைக்கின்ற புலவர்களைப்போல, மதமாகிய மழையைப்பொழிந்து கோபிக்கும் யானைகளும், சிரேட்டமான குதிரைகளும், தரிக்கப்பட்ட ஒரு பிடிகொண்ட இரத்தினங்கள் விளங்குகின்ற ஆபரணங்களும், வத்திரங்களும் உண்டாகுகவென்று விரும்புதல் ஒருகாலத்திலுஞ் செய்கின்றிலேன்; கண்டோருக்கு விருப்பத்தைக்கொடுக்கும் பூமாலைகளிலே வண்டுகள் மிகவும் பொருந்தப்பட்டு, திக்குகளிலே வாசனைபரவப்பட்டு, தேனினுடையதுளிகள் கலந்த தென்றற்காற்றுச் சூழப்பட்டு, சூரியனொளிபோன்ற தளிர்களும் மணிமாலைகளும் தொங்கப்பட்டு, பக்கங்களில் இருளானது நெருங்கப்பட்டுக் குளிர்ச்சிதங்கிய அழகைக்கொண்ட அசோகமரத்துக்கு நாதனே! உன்னிடத்தில் எனக்குரிய எண்குணங்களையே விரும்புதல்செய்கின்றேன் எ-று.

வி-ரை. இதனால் இகத்திலுண்டாஞ் சுகத்தில் வெறுப்பும், பரத்திலுண்டாஞ் சுகத்தில் விருப்புங் கூறுதல்போல, நித்தியமும் அநித்தியமுங் கூறப்பட்டன. யான்வேண்டல்—எழுவாய்; இலேன்—பயனிலை; யான்—எழுவாய்; குணங்களை—செயப்படுபொருள்; வேண்டுவன்—பயனிலை. அமைத்தவென்பது அமைந்தவென மெலித்தல்விகாரம். (ருஎ)

ஆசிரியத்துறை.

58 வேண்டுதல் வேண்டாமை யில்லாத வீரனடி
பூண்டு கிடந்தாற் புறத்திறுத்த வெங்கூற்றம் போகும் போலும்
பூண்டு கிடந்தாற் புறத்திறுத்த பின்னரும்
மீண்டது போகுமெனில் வீரனடி பேணாது விடுவ தென்னே.

இ-ள். விருப்பமும் வெறுப்பும் இயல்பாகவே யில்லாத அநந்தவீரியனாகிய அருகனுடைய பாதங்களை மனத்திற்கொண்டு திரிகரணங்களையுமடக்கியிருந்தால் பக்கத்தில்வந்த வெப்பமான வினையாகிய கூற்றானது போகுமோ? அப்படியடக்கியிருந்தால் பக்கத்தில்வந்தபின்பும் தானே திரும்பி அந்த வினைக்கூற்றம் போகுமேயானால், அருகனுடைய பாதங்களை ஆதரியாமல் நீக்குவது என்னகாரணம்? எ-று.

**வி - ரை.** இதனால் எதிரேவந்து வினைத்துன்பங்களை நீக்குபவனே சுவாமியென்னும் மித்தியாதிருஷ்டிகளுடைய பேதைமை பழிக்கப்பட்டது. விடுவது—எழுவாய்; என்—பயனிலை. திரிகரணங்களாவன:— மனோவந்தக் கரணம், வாக்கந்தக்கரணம், காயவந்தக்கரணம். (ருஅ)

கட்டளைக்கலித்துறை.

59 விடுவது வெவ்வினை விட்டாற் பெறுவது வீடுவந்து
படுவது பேரின்ப வெள்ளமென் றாலென்றன் பாவிநெஞ்சங்
கெடுவது தான்றனக் காவதெண் ணாதுகெட் டேன்பரமன்
வடுவதில் லாநெறிச் செல்லா தொதுங்கு மனையகத்தே.

**இ - ள்.** நம்மைவிட்டுப்போவது வெப்பம்பொருந்திய நல்வினை தீவினைகளிரண்டும்; அவ்வினைகள் நம்மைவிட்டால் நாம் பெற்றுக்கொள்வது முத்தியாம்; அதனால் வந்துண்டாவது பெரிய இன்பமாகிய சமுத்திரமென்று சாதுக்களாற் சொல்லப்பட்டால், என்னுடைய பாவியாகிய மனமானது தான் கெட்டுப்போவதும் தனக்காவதும் நினையாமல், ஐயோ! அருகபரமனுடைய குற்றமில்லாத மார்க்கத்தில் நடவாமல், நடக்கின்றது இல்லறத்திலே **எ-று.**

**வி - ரை.** இதனால் நெஞ்சைப் பழித்தல்போல மித்தியாமார்க்கம் பழிக்கப்பட்டது. நெஞ்சம்—எழுவாய்; ஒதுங்கும்—பயனிலை. (ருகூ)

## குறம்.

ஆசிரியவிருத்தம்.

60 மனைக்கு விளக்க மிகப்பெரி தின்னும்
வருந்தல் பெருந்திருவே
வந்தொரு துன்ப மகன்ற தினித்துயர்
வாரல நெஞ்சினுளே
நினைக்கிற தொன்றுள தத்திசை சொல்லுவ
னித்திசை மேலதுகாண்
நிச்சய மேயது கூடு மனங்களை
நீறு படுத்திகல்கூர்
வினைப்பகை செற்றுடன் முற்று முணர்ந்தற
வாணையு லோகமெலாம்
விளங்க வளங்கெழு பூமிசை வந்தவ
னெண்பெறு வெற்பினில்வாழ்

இனக்குற மக்க ளுரைப்பன பொய்யல
பொய்ப்பன புன்சமயத்
தேதிலர் தம்மொழி யிட்டு வினவி
டெனைத்து முரைத்திடவே.

இ - ள். இவ்வீட்டிற்கு விருத்தியுண்டாகும் மிகவுமதிகமாக; மேலும் நீ வருந்தல்; பெருமையையுடைய இலக்குமியே! முன்னொருதுன்பம் வந்து நீங்கிற்று; இனிமேற் றுன்பங்கள் ஒருகாலும் வரா; உன்மனத்திலே எண்ணுகிறது ஒன்றுண்டு, நினைக்கின்ற திசையைச் சொல்லுகின்றேன், இப் பூமியின்கண்ணதே நன்றாக அறி, உண்மையாகவே அந்தநினைவு கைகூடும்; மன்மதனை நீறுசெய்து வலிமிகுந்த வினையாகிய சத்துருவைச் செயித்து ஒரு தன்மையாக முழுவதும் அறிந்து தருமமாகிய ஆக்கினை உலகமெல்லாம் பிரகாசிக்க, வளப்பமானதுபொருந்திய தாமரைப்பூமேல் வந்தவனாகிய அருகனுடைய எண்ணிக்கைபெற்ற மலைகளில் வாழ்கின்ற கூட்டத்தையுடைய குறப்பெண்கள் சொல்லுவன பொய்ப்பனவல்ல; பொய்படுவனவாம், அற்ப மாகிய சமயத்திலிருக்கும் அந்நியருடைய வசனங்கள்; சங்கையிட்டுக்கேள், எத்தன்மைப்பட்டதையும் நான் சொல்ல எ - று.

வி - ரை. இதனால் மித்தியாமார்க்கம் பழிக்கப்பட்டது. நீ—எழுவாய்; வினவிடு—பயனிலை. (கூ0)

அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

61 உரந்திகழும் வில்லவன்றன் சிலையையிறுத்
துயர்ஞான மகளை வேட்டு
வரந்திகழும் புகழ்ச்சோதி வளநாடு
கைப்படுத்த வரதர் கண்டீர்
பரந்தியலுஞ் சுடர்மௌலிப் பல்லவரும்
பண்ணவரும் விண்ணு டாளும்
புரந்தரருந் தொழவுறையும் பொன்னெயில்விட்
டென்னிதய நண்ணி னாரே.

இ - ள். வலியானது விளங்குகின்ற கரும்புவில்லையுடைய மன்மதனது தனுவை ஒடித்து, உயர்ந்த ஞானமாகிய கன்னிகையைக் கல்லியாணம் பண்ணி, மேன்மையானது விளங்குகின்ற கீர்த்தியையுடைய சோதிமயமான வளப்பத்தையுடைய முத்திநாட்டைக் கைப்படுத்தின மேலானவர். பரவி

நடக்கின்ற பிரகாசம்பொருந்திய கிரீடங்களையுடைய பல தேவர்களும் முனிவர்களும் கற்பங்களை ஆளுகின்ற இந்திரர்களும் வணங்கவீற்றிருக்கும் பொன்னாலாகிய மும்மதில்சூழ்ந்த சமவசரணத்தை* விட்டு என்னுடைய மனத்தைப்பொருந்தினவர் எ - று.

**வி - ரை.** இதனால் அருகனுடையபெருமை கூறப்பட்டது. நண்ணினார்—எழுவாய்; வரதர்—பயனிலை. (சுக)

### காப்பியக்கலித்துறை.

62 நண்போ டன்பு நல்லருள் பேணி யுயிர்க்கெல்லாங்
கண்போல் வாழீர் கைதவ மொன்றும் விடுகல்லீர்
வண்போ தேறும் வாமனை நாளும் பணியீரிப்
புண்பே ரென்றுங் காப்பது நன்றோ புலவீரே.

**இ - ள்.** சினேகத்துடனே தயவையும் நல்ல கருணையையும் காத்து ஐவகைப்பட்ட எல்லாவுயிருக்கும் கண்ணைப்போல வாழமாட்டீர்கள்; எல்லா வஞ்சனைகளையும் விடமாட்டீர்கள்; வளப்பமான தாமரைப்பூவில் இருந்து வாழ்கின்ற அருகனை எக்காலமும் வணங்கமாட்டீர்கள்; அற்பமாகிய இச் சொல்லை நீர் காப்பாற்றிக்கொள்ளுதல் நன்மையோ அறிவுடையவரே! எ - று.

**வி - ரை.** இதனால் நன்னெறிக்கட் சேரு முபாயங் கூறப்பட்டது. நீர்காப்பது — எழுவாய்; நன்றோ — பயனிலை. (சுஉ)

### எழுசீர்க்கழிநெடில் விருத்தம்.

63 புலவர் மொழிந்த மொழிகமழ் தொங்கற்
பூநிரை கொண்டு தியானவாள்
வலவன் வலங்கொ ளடியின் வணங்கி
வாழ்கென நெஞ்சு தாழுமே

---

* சமவசரணம்:— பூமிக்கு ஐயாயிரம்வில்லுயரத்திற்குமேலே பன்னிரண்டுயோசனை அளவுள்ளதாய்ச் சௌதருமேந்திராதி தேவர்களால் நிருமிக்கப்பட்ட ஜினாலயம். இதற்குப் பூமியிலிருந்து இருபதினாயிரம் படிகளுள்ளன என்பர். இவ்வாலயத்தின் விரிவு ஸ்ரீபுராணம் முதலிய நூல்களில் விரித்துக் கூறப்பட்டுள்ளது.

லிலவ மலர்ந்த வணியித ழின்சொ
லேழையர் செங்கண் வேல்கள்போற்
கொலவல வெங்கண் மறலி வளைந்த
கோள்வலை யுய்ந்து போவனே.

இ-ள். சாதுக்கள் உபதேசித்த பதங்களாகிய பரிமளிக்கின்ற மாலையாகிய பூக்களின் வரிசையை வாக்கிற்கொண்டு சுக்கிலத்தியாநமாகிய வாளைத்தரித்த வல்லவனுடைய வெற்றிகொண்ட பாதங்களில் தொழுது வாழ்கவென்று மனமானது பொருந்தினால், இலவம்பூப்போல விரிந்த அழகிய அதரத்தையும் இனிமையான சொற்களையுமுடைய மாதர்களுடைய சிவந்த கண்களாகிய வேல்களைப்போலக் கொல்லவல்லமையுடைய கொடுமை பொருந்திய காலன் சூழக்கட்டிய குற்றமாகிய வலையினின்றும் யான் பிழைத்துப்போவன் எ-று.

வி-ரை. இதனால் அருகனை வணங்கினவரே கூற்றங்குதித்துய்வாரென்பது கூறப்பட்டது. யான்—எழுவாய்; உய்ந்துபோவன்—பயனிலை. (சுஙு)

எழுசீர்க்கழிநெடில்விருத்தம்.

64 போவார் போநெறி பலவா மந்நெறி
போனா லவரொடு புகழ்வேண்டுந்
தாவா வுயர்கதி யொழியப் புகுவது
தவிரா வெந்துயர் நரகாநின்
றேவா திங்ஙன முழல்வேன் மற்றுன
தொருவா வறநெறி பெறநல்காய்
கோவா நிலவுமிழ் தரளக் குளிர்வட
நிரைமுக் குடையமர் கோமானே.

இ-ள். போகுமவர்கள் போகப்பட்ட மார்க்கங்கள் அநேகமாகும்; அந்த மார்க்கங்களிற் சென்றால் அந்நெறிகளிற் சென்றவருடனே மித்தியா தெய்வங்களைப் புகழவேண்டும்; கெடாத உயர்ந்த முத்தியானது நீங்க இழிவானகதிக ளென்னை வந்தடைவது நீங்காவாகும்; வெப்பமாகிய துன்பத்தைத்தரும் நரகுண்டாக அந்நெறிக்கணின்று நீங்காமல் இப்படி உழல்பவனாகிய எனக்கு உன்னுடைய நீங்காத நன்மார்க்கங்களை யான் பெறும்படி நீ கொடுத்தருளுவாய், கோவைசெய்யாத பிரகாசத்தை வீசாநின்ற முத்துக்களின் குளிர்ந்த சரங்களுடைய பத்திகளையுடைய முக்குடை நிழலில் அமர்ந்த அருகனே! எ-று.

வி-ரை. இதனால் மித்தியாமார்க்கங்களி னிழிவும் தனது குறையும் கூறப்பட்டன. நீ—எழுவாய்; அறநெறி—செயுப்படுபொருள்; நல்காய்—பயனிலை. (சுச)

## கைக்கிளே.

### வெண்பா.

65 கோமான் குளிர்முக் குடையான்பொற் கோகனக
வாமான்றேர் மேலொருகால் வாரான்கொ—லேமாண்
சிலேக்கரும்பு நாணொலிக்குந் தேங்கோதை நல்லார்
முலேக்கரும்பு நோயுடையேன் முன்.

இ-ள். அருகன், குளிர்ந்த மூன்றுகுடையையுடையவன், பொன்னு லாகிய தாமரைப்பூவாகிய தாவுகின்ற குதிரைகட்டிய தேரின்மீது ஒரு தரம் வாரானோ; பூங்கணையைப் பிரயோகிக்கப்படும் மாட்சிமை பொருந்திய கரும்புவில்விற்பூட்டும் நாரியினுடைய ஓசையாலும் வாசனைபொருந்திய மாலையையுடைய மாதர்களுடைய முலேக்கு உண்டாகுகின்ற வியாதியை யுடையவனுகிய வென்னுடைய எதிரில் எ-று.

வி-ரை. இதனுல் தனது குறை கூறப்பட்டது. ஒலிக்கும்—வேற்றுமை மயக்கம். முக்குடையான்—எழுவாய்; வாரான்கொல்—பயனிலே. (சுரு)

### எண்சீர்க்கழிநெடில்விருத்தம்.

66 முன்னேப் பிறப்பெண்ணில் பல்கோடி யெல்லா
முயன்றின்று பெற்றேன் முதற்போதி யென்றே
பின்னேப் பிறந்துற்ற யானில்லே யென்னும்
பெரும்பித்த ரோபுத்த ராவார் தெளிந்தீர்
பொன்னிற் பிறக்குங் கலத்திற் சலத்திற்
பொங்குந் தரங்கிற் பெறும்பைக டோறுந்
தன்னிற் றிகழ்ந்தாவி நிற்குங்கொ லென்னுந்
தனிப்புத்தர் பாதங்கள் சாரீர் விரைந்தே.

இ-ள். முன்னே யான்பிறந்த பிறப்பினே எண்ணுங்கால் பலகோடி சனனத்திலும் எல்லாவினேகளேயும் செய்தனுபவித்து இப்பொழுது மதி ஞானியென்னும்பெயரை அடைந்தேனென்றுசொல்லிப் பின்பு உலகிற் பிறந்து ஞானத்தையடைந்த நானேயில்லே என்று சொல்லும் பெரிதாகிய பித்தமுடையவரோ புத்தராவார்கள்; வேதமுணர்ந்தவர்களே! பொன்னிலே உண்டாகின்ற ஆபரணங்களேப்போலவும் நீரிலே எழுகின்ற திரைகள் போலவும் எடுக்கின்ற தேகந்தோறும் எடுத்த எடுத்த தேகத்திலே நிறைந்து சீவனுனது இருக்கும் என்று சொல்லும் ஒப்பற்ற புத்தியையுடைய அருகரது சரணங்களே நீங்களடையுங்கள், வீணுள்போக்காமல் எ-று.

**வி - ரை.** இதனால் புத்ததெய்வம் பழிக்கப்பட்டது; நீங்கள்—எழுவாய்; பாதங்களை—செயப்படுபொருள்; சாரீர்—பயனிலை. (சுசு)

எழுசீர்க்கழிநெடில்விருத்தம்.

67 விரையார் மலர்மிசை வருவார் திருவறம்
விழைவார் கொலையினை விழையார்பொய்
யுரையார் களவினை யொழுகார் பிறர்மனை
யுவவார் மிகுபொரு ளுவவார்வெஞ்
சுரையா லுணர்வினை யழியா ரழிதசை
துவ்வார் விடமென வெவ்வாறும்
புரையார் நறவினை நுகரா ரிரவுணல்
புகழார் குரவரை யிகழாரே.

இ - ள். வாசனையானது பொருந்திய தாமரைப்பூமேல்வரும் அருகபரமனுடைய அழகிய இல்லறதருமத்தை விரும்புவார், சீவகாதையை விரும்பார், பொய்யினைச்சொல்லார், களவினிடத்தில் நடவார், அன்னியருடைய இல்லாளை விரும்பார், மிகுந்த பொருள்களை விரும்பார், கொடுமையான கள்ளினாலே தங்களறிவைக் கெடுக்கார், அழிகின்ற நிணத்தைப் புசியார், நஞ்சுபோல எவ்விதத்தினாலும் குற்றம்பொருந்திய தேனைப் புசியார், இராத்திரியில் உண்ணுதலைத் துதியார், பெரியோரை நிந்தியார் எ - று.

**வி — ரை.** இதனால் அருகசமயத்தோர்பெருமை கூறுமுகத்தான் மித்தியாமார்க்கத்தோர்செய்கை பழிக்கப்பட்டது; திருவறம் விழைவார்—எழுவாய்; கொலையினை—செயப்படுபொருள்; விழையார் முதலிய—பயனிலை.

68 இகழ்வார்களை வெகுளாரிட ருழவார்பிற விகழார்
புகழ்வார்களை யருளார்மகிழ் புரியார்பிறர் மகிழார்
திகழ்வான்முடி மிசைவாழ்சின வரன்யானென நினைவி
னிகழ்வாரிரு திறமார்துற வரசாணிரு மலரே.

இ-ள். நிந்திப்பவரைக் கோபியார், துன்பம் வரினும் அதிலுழந்து கொள்ளார், அன்னியமானவைகளைநிந்தியார், புகழ்பவரை விரும்பார், மகிழ்ச்சியைச் செய்யார், அன்னியசமயத்தாரை இச்சியார், விளங்குகின்ற கற்பத்தினுடைய சிகரமான அகமிந்திரலோகத்தினுக்குமேலிருக்குஞ் சித்தக்ஷேத்திரத்தில் வாழ்கின்ற சினேந்திரன் நானாகுவேன் என்னும் எண்ணத்துடனே

நன்னெறியி னடப்பவராகிய, பாகியபரிக்கிரகம் அந்தரங்கபரிக்கிரகமென்னு மிருவகைப்பற்றினையும் துறத்தலாகிய பொருத்தமான அரசாட்சியை ஆள்கின்ற துறவறத்தவர்கள் எ - று.

**வி - ரை.** இதனல் சினமுனிவர்பெருமை கூறுமுகத்தான் மித்தியா மார்க்கமுனிவர்செய்கை பழிக்கப்பட்டது. நிருமலர்—எழுவாய்; இகழ்வார் களை முதலிய—செயப்படுபொருள்; வெகுளார் முதலிய—பயனிலை.

பாஹ்யபரிக்கிரஹமாவன:—க்ஷேத்ரம், கிருகம், தனம், தான்யம், த்விபதம், சதுஷ்பதம், வாஹனம், சையாஸனம், ஆப்யம், பாண்டம் எனப் பத்தாகும்; அப்பியந்தரங்க பரிக்கிரஹமாவன:—மித்தியாத்வம், வேதம், ஹாஸ்யம், இரதி, அரதி, சோகம், பயம், ஜிகுப்ஸை, அநந்தாநுபந்தி, அப்பிரத்தியாக்யானம், பிரத்தியாக்யானம், சஞ்சலனம், ராகம், துவேஷம் எனப் பதினுன்காம். (சுஅ)

### வெண்கலிப்பா.

69 மலர்தலை மணிவிசும்பின் வண்டார்ப்பப் பூத்திலங்கு
மிலகிதழா யிரத்தெட்டி னெழில்கொண்ட மலரின்மிசை
அலகையில் வினைதெறாஉ மடலாழி முன்னடப்ப
வுலகமடிப் படுத்தாய்க்கென் னுள்ளமடிப் படாதாக
விலையமில் பெருஞ்செல்வ மிரந்தோர்க்கு வரையாத
தலைவநின் றலைவண்மைக் கென்னிரவு தகாதாகக்
கொலையின்றி யுலகாளுங் குடைவேந்த நின்குடைக்கீ
ழலைவென்க ணுறநின்ற வறச்செங்கோல் சேய்த்தாமோ
ஆதலின், நெகிழ்தக்க தாக்கியென் னெஞ்சத் துவந்தீ
நகுதக்கார் நெஞ்ச நடுக்கிவெங் கூற்றம்
புகுதப் பொறிகலங்கும் போது.

**இ - ள்.** பரந்த இடத்தையுடைய அழகிய ஆகாயத்தில் சுரும்புகள் இசைபாட மலர்ந்து மிகவும் விளங்குகின்ற ஆயிரத்தெட்டிதழினலே அழகைக்கொண்ட தாமரைப்பூமேலேயிருந்து, அளவில்லாத வினைகளைக் கெடுக்கும் வெற்றியையுடைய தருமசக்கரம் முன்னே நடக்க மூவுலகத் தாரையும் வணங்கப்பண்ணின வுனக்கு, எனது மனமானது வணங்கா திருக்கினும், கேடில்லாத மிகுந்த செல்வத்தை யாசித்தவருக்கு நீங்காத நாயகனே! உன்னுடைய தலைமையான உதாரத்துவத்துக்கு என்னுடைய இரப்புத் தகாததாயிருக்கினும், கொலையில்லாமல் உலகத்தை ஆளுகின்ற

முக்குடையையுடைய நாதனே! உனது நிழற்கீழ் வருத்தம் என்னிடத்திற் பொருந்திநின்றன; உன்னுடைய தருமமாகிய ஆக்கினையானது தூரமாகுமோ; ஆகையால், நெகிழத்தக்கதாகச்செய்து எனது மனதில் விரும்பியிருந்து நானிரப்பதை நீ கொடு; நகைக்கத்தக்கவர்களுடைய மனத்தை நடுங்கப் பண்ணிக் கொடுமையையுடைய காலன்வர ஐம்பொறிகளும் கலங்குங்காலத்தில் எ-று.

வி-ரை. இதனால் தன்னுடைய பேதைமையும் அருகனுடைய அருளுடைமையும் கூறப்பட்டன; நீ—எழுவாய்; இரப்பு—செயப்படுபொருள்; ஈ—பயனிலை. (சுகூ)

## வண்டுவிடு தூது.

அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

70 பொறிவரிய வண்டினங்கா ளுமக்குமாமென்
பொருந்தியவெங் துயர்நோய்க்கு மருந்துமாகுஞ்
செறிவரிய வுமைத்தொழுதேன் வினையகற்றுஞ்
செம்பொனெயி லகங்குறுகித் தேன்யாழ்செய்யும்
வெறிகமழு மலர்மாரி யூடுபோகி
வீசுசா மரைவெள்ளங் கடந்துபுக்கென்
னறிவர்மா மணியரங்கின் மீதுதூங்கு
மலர்த்தாம வாசங்கொண் டணைகுவீரே.

இ-ள். புள்ளிகளுடன் வரிகளையுடைய வண்டுக்கூட்டங்களே! உங்களுக்கும் ஆகும்; என்னைச்சேர்ந்த கொடுமையான துன்பஞ்செய்யும் வியாதிக்கு அவிழ்தமும் ஆம்; நெருங்குதற்கரிய உங்களை வணங்கினேன்; வினைகளைக் கெடுக்கும் சிவந்த பொன்னாலாகிய மும்மதில்சூழ்ந்த சமவசரணத்தை நீங்களடைந்து, வண்டுகள் வீணையின்பாடுதலைச் செய்யும் வாசனை கமழும் தேவர்கள் சொரியும் பூக்களாகிய மழைக்குள்ளே புகுந்துபோகி இந்திரர்கள் வீசுகின்ற சாமரைக்கூட்டங்களைத் தாண்டி அப்புறம்போய் என்னுடைய சுவாமியாகிய அருகருடைய பெருமை பொருந்திய அழகிய சபையில் மேலே தொங்குகின்ற தாமரைப்பூமாலையினுடைய வாசனையை வாங்கிக்கொண்டு இவ்விடத்தே சேருங்கள் எ-று.

வி-ரை. இதனால் அருகனுடைய சிறப்புக் கூறப்பட்டது; நீங்கள்—எழுவாய்; இவ்விடத்தை—செயப்படுபொருள்; அணைகுவீர்—பயனிலை. (எo)

102862

கலிவிருத்தம்.

71 அணையோ மினியா டகநாண் மலர்மே
லிணையோ தரியார் தமரே சுவர்கண்
பிணையோ பெருநீ லமலர்ந் தனவோ
கணையோ வெனநின் றவர்கா தலையே.

இ-ள். சேரோம் இனிமேல்; பொன்னாகி அன்றலர்ந்த தாமரைப் பூமேல் ஒப்புச்சொல்லுதற்கரியரான அருகபரமனுடைய அடியார்கள் நிந்திப்பார்களாகையால்; கண்ணனது மானோ பெரிதாகிய கருங்குவளை பூத்தனவோ பாணமோ என்று சொல்லநின்ற மாதர்களுடைய ஆசையை எ - று.

வி - ரை. நாங்கள்—எழுவாய்; காதலை—செயப்படுபொருள்; அணையோம்—பயனிலை. (எக)

மறம்.

எண்சீர்க்கழிநெடில்விருத்தம்.

72 காதுசிலை வல்லமைக ளெம்மையவர் பண்டே
கண்டறிவர் தங்கள்வலி கொண்டுமக ளெண்ணார்
கோதிலரு கன்றிரு வறத்தவர்க ளேடா
குலங்கெடவு மாடுவர்க ளோவுறவு கூறுஞ்
சாதிகுல மென்றிவை யிரண்டுமல பேசுஞ்
சத்தமல தென்னுமொரு புத்தனுரை கொண்டோ
வேதியர்க ணீதிகெட வோதுமறை கொண்டோ
வெற்றிமுடி மன்னனிது சொற்றதுரை யாயே.

இ - ள். எங்களுடைய மோதுகின்ற தனுவல்லமைத்தொழில்களை அந்த அரசகுலத்தோர்கள் முன்னாலே பார்த்திருப்பார்கள்; தங்களுடைய பலத்தைக்கொண்டு பெண்ணை எண்ணமாட்டார்கள்; குற்றமில்லாத அருக பரமனுடைய அழகிய தருமத்தை யுடையவர்கள், தோழனே! சினசமயம் மாறுபட உறவைச்செய்வார்களோ? சொல்லப்பட்ட பிறப்பினாலாகுவது சாதியென்றும் வமிசபரம்பரையாலாவது குலமென்றுஞ் சொல்வதாகிய இவ்விரண்டும் வேறல்ல, சொல்லப்படும் சொல்லேயல்லாமல் என்று

O - 17LUT,T
N51

சொல்லும் ஒரு புத்தனுடைய சொல்லைக்கொண்டோ? பிராமணர்கள் நீதி யழியச்சொல்லப்படும் வேதத்தைக்கொண்டோ? சயம்பொருந்திய மகுடந் தரித்த அரசன் இப்பெண்காரியம் சொன்னது; சொல்லாய் எ - று.

**வி-ரை.** இதனால் மித்தியாதிருட்டிகள் பழிக்கப்பட்டார்கள். ஏடா—எழுவாய்; இதனை—செயப்படுபொருள்; உரையாய்—பயனிலை. (எஉ)

கட்டளைக்கலித்துறை.

73 உரையோம் பயன்செய்த வற்கென்று வைத்தற மோதும்வஞ்சத்
துரையோடு ருத சுகதர்கண் டீர்பொங்கு தூங்கொலிநீர்
திரையோ டுருண்டெழு சங்கஞ் சொரிந்த செழுந்தரள
நிரையோ டுறங்குந் துறைமயி லாபுரி நின்றவரே.

**இ-ள்.** முன்னனுபவிக்கும் பயனை வினைசெய்தவனுக்குச்சொல்லோம் என்று சொல்லிவைத்துத் தருமத்தைச் சொல்லுகின்ற கபடநெறியுடனே பொருந்தாத நல்ல நடையுடைய புத்தர், மிகவும் தங்கிய சத்தம்பொருந்திய சமுத்திரத்தினுடைய அலையோடு உருண்டுவந்த வெண்மையாகிய சங்குகள் தாமீன்ற செழித்த முத்துக்களுடைய வரிசைகளுடனே துயிலும்படியான துறையையுடைய மயிலாபுரியில் நிலைபெற்றுவாழ்பவர் எ - று.

**வி - ரை.** இதனால் புத்தமதம் பழிக்கப்பட்டது. மயிலாபுரிநின்றவர்—எழுவாய்; சுகதர்—பயனிலை. (எங)

எண்சீர்க்கழிநெடில்விருத்தம்.

74 மயிலாபுரி நின்றவ ரரியாசன வும்பரின்
மலர்போதி லிருந்தவ ரலர்பூவி னடந்தவ
ரயிலார்விழி மென்கொடி மிடைதீபை நயந்தவ
ரமராபதி யிந்திர னணியாட லுகந்தவர்
கயிலாய மெனுந்திரு மலைமேலுறை கின்றவர்
கணநாயகர் தென்றமிழ் மலைநாயகர் செம்பொனி
னெயிலாரில குஞ்சின கிரியாள்பவர் சம்பைய
ரெனையாள நினைந்துகொல் வினையேனு ளமர்ந்ததே.

**இ - ள்.** மயிலாபுரியில் நிலைபெற்று வாழ்பவர்; சிங்காதனத்தினுடைய மேலே மலர்ந்த தாமரைப்பூவில் வீற்றிருந்தவர்; மலர்ந்த அத்தாமரைப் பூவுடனே தருமகண்டமுழுவதுஞ் சென்றவர்; வேல்போலப் பொருந்திய

கண்களையுடைய மெல்லிய கொடிபோன்றமாதர்கள் நெருங்கிய *தீபங்குடியை விரும்பினவர்; கற்பங்களில் வாழும் இந்திரர்களுடைய அழகிய நடனத்தை இச்சித்தவர்; கயிலாயமென்று சொல்லப்படும் திருமலையின்மீது வாழ்பவர்; பன்னிரண்டு கணங்களுக்கும் நாதரானவர்; தெற்கிலிருக்கும் பொதிய மலைக்கும் நாதரானவர்; செம்பொன்னாலாகிய மும்மதில்சூழ்ந்த சமவ சரணத்தையுடையவர்; விளங்குகின்ற சினகிரியை யாளுபவர்; சம்பை யென்னுந் தலத்தையுடையவர்; என்றனை யாளும்படி யெண்ணித்தானோ, வினையையுடைய அடியேனதுமனதில் பொருந்தினது? எ-று.

வி-ரை. இதனால் அருகபரமனுடைய கருணை கூறப்பட்டது. அருகன் அமர்ந்தது—எழுவாய்; ஆளநினைத்துகொல்—பயனிலை. (எச)

எழுசீர்க்கழிநெடில்விருத்தம்.

75 அமரநா டாளு மரசரை யந்தப்
புரத்தினோ டாணையா லழைத்துக்
குமரிமூ வெயில்சூழ் கோயிலோ வாத
சேவகங் கொள்வது குணனே
தமர்களே பிறர்க ளெனுந்திற மின்றித்
தம்முயி ரெனவுயி ரளிக்கு
நுமரெலா நும்மை யென்சொலார் சொல்லீர்
நான்மறை நூன்மொழிந் தவரே.

இ-ள் கற்பங்களை யாளுகின்ற இந்திரர்களை அவரவர்களுடைய தேவியர்களுடனே ஆக்கினையினாலே யழைப்பித்து, அழிவில்லாத மும்மதில்

---

* இது திருவாரூர்ப்பக்கத்தே மூன்றுமைல் தூரத்தில் உள்ளது. ஜைனர் மிகுந்துள்ள பிரதேசமாகிய திண்டிவனப்பக்கத்தும்இப்பெயர்கொண்டவூர் ஒன்றுண்டு; தீபங்குடி பெரிய ஜைனஸ்தலமென்பது "சயங்கொண்டார், அபயன் நமதூர் யாது என்று கேட்டபோது, சொன்ன கவி"யாகிய,—

"செய்யும் வினையு மிருளுண் பதுவுந் தேனும் நறவு மூனுங் களவும்
பொய்யுங் கொலையு மறமுந் தவிரப் பொய்தீ ரறநூல் செய்தார் தமதூர்
கையும் முகமும் மிதழும் விழியுங் காலும் நிறமும் போலுங் கமலங்
கொய்யும் மடவார் விழிவா யதரங் கோபங் கமழுந் தீபங் குடியே"

என்னும் பாடலாலும் உணர்க.

சூழ்ந்த சமவசரணத்தில் நீங்காத பணிவிடையை யேற்றுக்கொள்வது நன்காகுமோ? சுற்றத்தார் அன்னியர்கள் என்று சொல்லப்படும் வகையில்லாமல் தங்களுயிர்போலச் சகல ஜீவன்களையும் இரட்சியாநின்ற உம்முடைய அடியார்களெல்லாம் என்ன சொல்லமாட்டார்கள்?; உத்தரஞ் சொல்வீராக; நாலுவேதங்களாகிய பரமாகமத்தைச் சொன்னவரே! எ-று.

வி-ரை. இதனால் அருகனுடையபெருமை கூறப்பட்டது. நூன் மொழிந்தவரே நீர்—எழுவாய்; சொல்வீர்—பயனிலை. (எரு)

## தவம்.

### கலிவெண்பா.

76 நூன்மொழியு மாறு நுழைந்து நுமக்குறுதிப்
பான்மைய வாகப் பலநாடி—யான்மொழியக்
கேண்மி னமரங்காள் கேடின்றி நிற்பதுயிர்
காண்மி னுடம்பு கவினிளமை—கேண்மையுடன்
வல்லாண்மை செல்வமென் றிவ்வெல்லாம் வானத்து
வில்லாகு மென்றே விழையன்மின்—றொல்லை
முரணார் வினைப்பகைவர் மூளுங்கால் வாமன்
சரணார விந்தங்க ளல்லா—லரணாய்நீ
ரெண்ணும் பொருள்சுற்றம் யாக்கையென் றின்னவெலாம்
நண்ணுஞ் சரணாக நாடன்மி—னெண்ணிறந்த
வூழிக ளெல்லா முலவாத் தடுமாற்றத்
தாழிக ளூந்தி னனந்தமுறை—சூழுங்
கறங்கி னுழலுங் கதிதோறுந் துன்பம்
பிறங்கும் பிறப்பஞ்சி வாழ்மின்—சிறந்த
பிறப்பிறப்பு மூப்புப் பிணிகளெனுந் துன்ப
முறப்புணர யானுழக்குங் காலை—யறத்திறஞ்சேர்ந்
தியானா மொருவனே யல்ல தெனக்குமற்
றேனோர் துணையல்ல ரென்றறிமி—னீனமில்சீர்ச்
சேதனமா லாவி யசேதனமா லிவ்வுடம்
பாதலினால் வேறாய வவ்விரண்டுஞ்—சேர்தலினால்

மன்னுமொன் ருய்விடினும் வாளுந் தடறும்போற்
பின்ன மெனவே பிரித்துணர்மின்—றன்னும்
புழுப்பிண்ட மாகிப் புறஞ்செய்யுந் தூய்மை
விழுப்பொருளை வீறழிப்ப தாகி—யழுக்கொழுகு
மொன்பது வாயிற்று மூன்குரம்பை மற்றிதனு
லின்பமதா மென்று திழித்துவர்மின்—றன்பந்
துளக்கமாம் யோகந் துவரடக்க மின்மை
விளக்கமிநீக் காட்சி யிவற்றுற்—கிளப்பரிய
வீறில்வினை யீரைந் திறத்தி னெமதுயிர்க்க
ணூறு மெனவே யுணர்ந்துய்ம்மின்—வீறுசால்
குத்தி சமிதி யறஞ்சிந்தை கோதிலா
மெய்த்தவமீ ராறடக்க மென்றிவையா—லொத்தெழுந்த
மாருத ஞான தியானத்தால் வல்வினைக
ளூருது மாறும்வகை யுள்ளுமின்கள்—கூறும்
பரிச கசையந் தவமடக்க மூன்றால்
விரிதரு ஞான தியானத்—தருவினைகள்
தத்த நிலையோ டநுபாகந் தாங்குறைந்
தொத்த வுதிர்ப்பா மெனத்தெரிமின்—வைத்த
வடியேழ் கயிற்றிடைக ளொன்றுடனைந் தொன்று
முடியேழ் கயிற்றிரட்டி யோக்கம்—படியளவாந்
தொல்லுலகு பல்லுயிருந் தோற்றற்கும் வீட்டற்கும்
மெல்லையிட மென்றியைந்து நோக்குமின்கள்—சொல்வி
னரிய பொருண்முதலாஞ் சாதனங்க ளோந்தும்
பிரிவின் றுடன்பெற்றுற் பின்னுந்—தெரிவுடைய
ஞானத் தெளிவொழுக்க மாகிய நல்லறந்
தானற் கரிதாந் தகைநினைமின்—மானந்தீர்ந்
திம்மை குறியா திதமு மதுரமுமா
மெய்ம்மை யருள்சுரந்து வீறமைந்து—பொய்ம்மை
கறுவிகந்த சேவ்விதினற் காட்சியர்பாற் றேன்று
முறுதி மொழியரிதென் றேர்மின்—மறுவிலிவ்

வீாறு சிந்தைகளு மின்பவுல கெய்துவார்க்
கோரா றெனப்பரம ஞோதியவாற்—பேரா
துளங்கொண் டிவையிவை பேணித் துளங்காது
வைகனு மொழுகுதல்கூ தே.

இ-ள். பந்துக்களே! உங்களுக்கு மறுமைக் குறுதிப்பான்மையானவை களைப் பரமாகமஞ்சொல்லுமார்க்கத்திற்புகுந்து வெகுவாயாராய்ந்து நான் சொல்லக் கேண்மின்; சீவனுனது நாசமில்லாமலிருக்கப்பட்டது, நீங்க ளதனை யறியுங்கள். தேகமும் அழகும் யௌவனமுஞ் சுற்றமும் அதனுடன் வீரமும் செல்வமும் என்று சொல்லப்பட்ட இவையெல்லாம் மேகத்தி லிட்ட விற்போல ஆகுமென்றெண்ணி அவற்றை விரும்பாதொழியுங்கள். பழமையையுடைய வலிமைபொருந்திய நூற்றுநாற்பத்தெட்டுக் கருமமாகிய சத்ருக்களெதிர்க்குங்கால் அருகனுடைய பாததாமரைகளேயல்லாமல் நீங் கள் உங்களுக்குக் காவலாயெண்ணப்பட்ட தனமும் பந்துக்களுந் தேகமு மென்று சொல்லப்பட்ட இவையெல்லாம் பொருந்திய அடைக்கலமாக எண்ணுதிருங்கள். கணக்கிறந்த எல்லாவூழிக்காலத்திலுங் கெடாத சமு சாரத்திற் பஞ்சபரிவர்த்தனைகளினுலே அனந்தம்வாரஞ் சூழுகின்ற காற்றுடி போலுழலுகின்ற நாற்கதிகளிலேயுந் துயரமானது மிகுகின்ற பிறப்பினுக்குப் பயந்து வாழுங்கள். மேம்பட்ட பிறப்பு மிறப்புந் தளர்ச்சியும் வியாதிகளு மென்று சொல்லப்பட்ட துயரமானது மிகவுமடைய, நான் அவற்றி லுழந்து நிற்குங்காலத்தில் சினதருமவகையை யடைந்து நானுகிய ஒருவனேயல்லாம லெனக்கந்நியர் துணையானவரல்லர் என்றறியுங்கள். குற்றமில்லாத சிறப்பை யுடைய உயிரானது அறிவை யுடையது: இவ்வுடம்பானதறிவில்லாததாகை யினுல், வெவ்வேறு குணங்களுடைய அவ்வுயிருடலென்னு மிரண்டுஞ் சேருகையினு னிலைபெற்றொன்ருயிருப்பினும், வாளுங் கூடும் போல வேறென்றே பகுத்தறியுங்கள். நெருங்கிய புழுக்களையுடைய பிண்டமாகிப் புறத்தைச் சுத்தஞ்செய்கின்ற மேன்மைப்பொருள்களினுடைய பெருமையை யழித்தலை யுடைத்தாகி, மலங்கள் கழலுகின்ற நவத்துவாரத்தையுடைத் தாகும் மாமிசமாகிய தேகம்: இத்தேகத்தினுற் சுகமுண்டாகு மென்னுமல் நிந்தித்து வெறுத்துவிடுங்கள். மூன்று விபாகதுக்கமுஞ் சலனமாகிய திரி கரணங்களும் நான்குகஷாயங்களும் பன்னிரண்டு அவ்விரதங்களுந் தெளி வில்லாத மித்தியாத்துவமு மிவற்றினுலே சொல்லற்கரிய முடிவில்லாத வினையானது பத்துவகையஸ்ரவத்தினுலே யெம்முடைய சீவனிடத்தில் அடையுமென்றே யெண்ணிப் பிழையுங்கள். பெருமை மிகுந்த திரிகுத்தியும்

பஞ்சசமிதியும் தசதருமமும் துவாதசாநுப்பிரேக்ஷையும் குற்றமில்லாத உண்மையையுடைய பாஹ்யாப்பியந்தரதபஸுகளும் பிராணிசம்யமம் விஷயசம்யமம் என்று சொல்லப்பட்ட விரதங்களும் இவற்றினோடு பொருந்தியுண்டான நீங்காத தத்துவஞானத்தினாலும் தருமத்தியானத்தினாலும் வலிமையுடைய வினைகள் தம்மையடையாமல் நீங்கும்படியான வகையை நினையுங்கள். கூறப்படும் இருபத்திரண்டு பரிஷகசயமும் தவங்களும் விரதங்களும் இவ்வகை மூன்றினோடு மிகுந்த ஞானத்தினாலும் தியானத்தினாலும் அருமையாகிய வினைகளும் தந்தங் கருமத்தினுடைய திதிபந்தசத்தியுடனே அநுபாகபந்தசத்தியும் கணந்தோறுங் குறைவுபட்டுக் கரணத்திரயத்துக்கும் ஒத்த உதிர்ச்சியாகுமென்றறியுங்கள். வைக்கப்பட்ட அடியில் ஏழ்கயிற்றகலமும் மத்திகளில் ஒருகயிற்றகலமும் அதனுடன் ஐந்துகயிற்றகலமும் சிகரத்தில் ஒருகயிற்றகலமும் பதினான்கு கயிற்றுயர்ச்சியும் பூமியினுடைய பிரமாணமாகும்: பழமையாகிய இவ்வுலகமானது பலவாகிய சீவன்களும் பிறத்தற்கும் முத்தியடைவதற்கும் அளவுபட்ட இடமென்றே பொருந்தி நோக்குங்கள். சொல்லுங்கால் அரிதாகிய திரவியமுதலாகிய சாதநவஸ்துக்களெந்தையும் பிரிவில்லாமல் ஒரு தன்மையாக அடைந்தாற் பின்னும் தெளிவுடைய நன்ஞானமும் நற்காட்சியும் நல்லொழுக்கமுமான சினதருமந்தான் நன்மையாக அருமையையுடைத்தாகும் பெருமையை யெண்ணுங்கள். அபிமானத்தினின்று நீங்கி இகத்திலுண்டான பிரயோசனத்தை யெண்ணுமல் உயிர்களிடத்தில் இதமு மதுரமுமாகும் உண்மையான கிருபையுண்டாகிப் பெருமைபொருந்திப் பொய்யும் பகையும் நீங்கிய செம்மையினலே சம்மியக்திருஷ்டிகளிடத்தில் உண்டாகாநின்ற உபதேசமொழிகள் அருமையென்றறியுங்கள். குற்றமில்லாத இந்தத் துவாதசாநுப்பிரேக்ஷைகளும் முத்தியையடைபவருக் கொருமார்க்கமென்று அருகபரமன் சொன்னபடியால், இப்படிச்சொன்னவைகளை நீங்காமன் மனதிற்கொண்டு பாதுகாத்து அசைவில்லாமல் நாடோறும் நடக்குதல் உபாயமாம் எ-று.

வி-ரை. இதனால் சீவன் நித்தியமாதலும், அந்தச்சீவன் ஆசையினால் வினைக்கட்படுதலும், அவ்வினையாற் பிறப்பிறப்புண்டாதலும், அவற்றால் துன்பமெய்தலும், அவ்வினையைக்கெடுத்தால் முத்தியெய்தி இன்பம் அடைதலும், அவ்வினையைக்கெடுத்தற்கு உபாயமும் கூறப்பட்டன. ஒழுகுதல்—எழுவாய்; சூது—பயனிலை.

*நூற்றுநாற்பத்தெட்டுக் கருமமாவன:— ஞாநாவரணீயம், தரிசனு வரணீயம், வேதநீயம், மோஹநீயம், ஆயுஷ்யம், நாமம், கோத்திரம், அந்தராயம், என மூலப்பிரகிருதி - அ; மதிஞாநாவரணீயம், சுருதஞாநா வரணீயம், அவதிஞாநாவரணீயம், மனப்பரியயஞாநாவரணீயம், கேவல ஞாநாவரணீயம், என ஞாநாவரணீயம் - ரு; சக்ஷுர்தர்சநாவரணீயம், அசக்ஷுர்தர்சநாவரணீயம், அவதிதர்சநாவரணீயம், கேவலதர்சநா வரணீயம், நித்திராதர்சநாவரணீயம், நித்திராநித்திராதர்சநாவரணீயம், ப்ரசலாதர்சநாவரணீயம், ப்ரசலாப்ரசலாதர்சநாவரணீயம், ஸ்த்யாநக்ரந்தி தர்சநாவரணீயம் எனத் தர்சநாவரணீயம்-கூ; ஸாதவேதநீயம், அஸாதவேத நீயம் என வேதநீயம்-உ; மித்யாத்வம், ஸம்யக்மித்யாத்வம், ஸம்யக்பிரகிருதி, அநந்தாநுபந்திக்ரோதம், மானம், மாயை, லோபம்; அப்பிரத்யாக்யானக் குரோதம், மானம், மாயை, லோபம்; பிரத்யாக்யானக்குரோதம், மானம், மாயை, லோபம்; ஸஜ்வலநக்ரோதம், மானம், மாயை, லோபம்; ஹாஸ்யம், ரதி, அரதி, சோகம், பயம், ஜுகுப்ஸை, ஸ்திரீவேதம், பும்ஸவேதம், நபும்ஸ வேதம் என மோஹநீயம்-உஅ; நரகாயுஷ்யம், திர்யகாயுஷ்யம், மநுஷ் யாயுஷ்யம், தேவாயுஷ்யம் என ஆயுஷ்யம்-ச; [நரககதி, திர்யக்கதி, மநுஷ்யகதி, தேவகதி எனக் கதிநாமம்-ச. ஏகேந்திரியம், த்வீந்திரியம், த்ரீந்திரியம், சதுரிந்திரியம், பஞ்சேந்திரியம் என இந்திரியநாமம்-ரு. ஔதாரிகம், வைக்ரீயிகம், ஆஹாரகம், தைஜஸம், கார்ம்மணம், எனச் சரீர நாமம்-ரு. ஔதாரிகாங்கோபாங்கம், வைக்ரீயிகாங்கோபாங்கம், ஆஹார காங்கோபாங்கம் என அங்கோபாங்கம்-ந. ஔதாரிகபந்தனம், வைக்ரீயிக பந்தனம், ஆஹாரகபந்தனம், தைஜஸபந்தனம், கார்ம்மணபந்தனம் எனப் பந்தனநாமம்-ரு. ஔதாரிக ஸங்காதம், வைக்ரீயிக ஸங்காதம், ஆஹாரக ஸங்காதம், தைஜஸ ஸங்காதம், கார்ம்மணஸங்காதம் என ஸங்காதநாமம்-ரு. சமசதுரச்ரஸம்ஸ்தானம், நியக்ரோதஸம்ஸ்தானம், ஸ்விதிஸம்ஸ்தானம், வாமனஸம்ஸ்தானம், குப்ஜஸம்ஸ்தானம், ஹுண்ட்ஸம்ஸ்தானம் என ஸம்ஸ்தானநாமம்-சூ. வஜ்ரரிஷபநாராசஸம்ஹநநம், நாராசஸம்ஹநநம், அர்த்தநாராசஸம்ஹநநம், கிலிதஸம்ஹநநம், அஸம்ப்ராப்தாஸம்ஹநநம், அஸ்ரபாடிகாஸம்ஹநநம் என ஸம்ஹநநநாமம்-சூ. ஸ்நிக்தஸ்பரிசம், ரூக்ஷ ஸ்பரிசம், சீதஸ்பரிசம், உஷ்ணஸ்பரிசம், குருஸ்பரிசம், லகுஸ்பரிசம், மிருது ஸ்பரிசம், கர்க்கசஸ்பரிசம் என ஸ்பரிசநாமம்-அ. திக்தரஸம், கடுகரஸம்,

---

* இவற்றில் அநேகம், சிந்தாமணி முத்தியிலம்பகம் சளஅ, சஅக, சஅஉ—ஆம் பாடல்களிலும் பிறவற்றிலும் பொருள் விரித்துக் காட்டப் பட்டுள்ளன.

கஷாய்ரஸம், ஆம்ரரஸம், மதுரரஸம் என ரஸநாமம்-ரு, ஸுகந்தம், துர்க்கந்தம் எனக் கந்தநாமம்-உ. சுவேதவர்ணம், பீதவர்ணம், ஹரிதவர்ணம், அருணவர்ணம், கிருஷ்ணவர்ணம் என வர்ணநாமம்-ரு. நரககத்யாநுப்பிராப்தி, திர்யக்கத்யாநுப்பிராப்தி, மனுஷ்யகத்யாநுப்பிராப்தி, தேவகத்யாநுப்பிராப்தி எனக் கத்யாநுப்பிராப்தி-ச. அகுருலகு, உவகாதம், பரகாதம், ஆதபம், உத்தியோதம், உச்சுவாஸநிச்சுவாஸம், பிரசஸ்தவிஹாயோகதி, அப்பிரசஸ்தவிஹாயோகதி, பிரத்யேகசரீரம், ஸாதாரணசரீரம், த்ரஸநாமம், ஸ்தாவரநாமம், சுபநாமம், அசுபநாமம், சுப்கந்துர்ப்பகம், ஸுஸ்வரம், துஸ்வரம், ஸுக்ஷ்மம், பாதரம், பர்யாப்தி, அபர்யாப்தி, ஸ்திரம், அஸ்திரம், ஆதேயம், அநாதேயம், யசஸ்கீர்த்தி, அயசஸ்கீர்த்தி, நிர்ம்மாணம், தீர்த்தீகரத்துவம்] என நாமம் - கூ. உச்சைர்கோத்திரம், நிச்சைர்கோத்திரம் எனக் கோத்திரம்-உ. தாநாந்தராயம், லாபாந்தராயம், போகாந்தராயம், உபபோகாந்தராயம், வீர்யாந்தராயம் என அந்தராயம்-ரு. ஆக மூலோத்தரப்பிரகிருதிகளாம்.

பஞ்சபரிவர்த்தனையாவன:— திரவ்யபரிவர்த்தனை, க்ஷேத்ரபரிவர்த்தனை, காலபரிவர்த்தனை, பாவபரிவர்த்தனை, பவபரிவர்த்தனைகளாம். விபாகதுக்கம் மூன்றுவன:— சரீரதுக்கம், மானஸதுக்கம், ஆககதுக்கங்களாம். கரணமூன்றுவன:— மனோவந்தக்கரணம், வாகந்தக்கரணம், காயவந்தக்கரணங்களாம். கஷாயம் நான்காவன:— அநந்தானுபந்தி, அப்பிரத்தியாக்யாநம், பிரத்தியாக்யாநம், சஞ்சுவலநங்களாம். பிராணிஸம்யமம் ஆறுவன:— பிருத்விகாயம், அப்புகாயம், தேஜஸ்காயம், வாயுகாயம், பாதகாயம், வநஸ்பதிகாயங்களாம். விஷயஸம்யமம் ஆறுவன:— ஸ்பரிசநேந்திரியம், ரஸநேந்திரியம், கிராணேந்திரியம், சக்ஷுரிந்திரியம், சுரோத்திரேந்திரியம், மநேந்திரியங்களாம். அஸ்ரவம்பத்தாவன:—ஹீநாஸ்ரவம், அவதிகாஸ்ரவம், ஈர்யாபதாஸ்ரவம், கஷாயாஸ்ரவம், ஞானஸ்ரவம், அஞ்ஞானஸ்ரவம், புண்ணியாஸ்ரவம், பாபாஸ்ரவம், திரவ்யாஸ்ரவம், பாவாஸ்ரவங்களாம். திரிகுப்தியாவன:-மனோகுப்தி, வாக்குப்தி, காயகுப்திகளாம். ஸமிதி ஐந்தாவன:-ஈர்யாஸமிதி, பாஷாஸமிதி, ஏஷணாஸமிதி, ஆதாநநிக்ஷேபணஸமிதி, வ்யுத்ஸர்க்கஸமிதிகளாம். தசதர்மமாவன:-உத்தமக்ஷமம், உத்தமார்த்தவம், உத்தமார்ஜ்ஜவம், உத்தமஸத்தியம், உத்தமசௌசம், உத்தமஸம்யமம், உத்தமதவம், உத்தமத்யாகம், உத்தமாகிஞ்சின்யம், உத்தமப்ரும்மசரியங்களாம். அநுப்பிரேக்ஷை பன்னிரண்டாவன:— அநித்தியம், அசரணம், ஸம்ஸாரம், ஏகத்துவம், அந்யத்துவம், அசுசித்துவம், ஆஸ்ரவம், ஸம்வரை,

நிர்ஜ்ஜரை, லோகம், போதிதுர்லபம், தர்ம்மஸ்வாக்கியாநங்களாம். பாஹ்ய தபம் ஆறுவன:—அநசனம், ஆவமோதர்யம், ப்ரததிபரிஸங்கியானம், ரஸபரித்தியாகம், விவக்தசையாஸநம், காயக்கிலேசங்களாம். அந்தரங்க தபஸு ஆறுவன:—பிராயச்சித்தம், விநயம், வையாப்பிரத்தியம்,ஸ்வாத்தியாயம், வ்யுத்ஸர்க்கம், தியானங்களாம். பரிஷஹஜயம் இருபத்திரண்டாவன:-க்ஷுத் பிபாஸ சீத உஷ்ணா தம்ச மசக நாச்நா அரதி ஸ்த்ரீசர்யா நிஷத்யா சய்யா ஆக்ரோச வத யாசநா அலாப ரோக திருஷ்ணஸ்பர்ச மல ஸ்பர்ச ஸத்கார புரஸ்கரா பிரக்ஞா அஜ்ஞாந ஆதர்சநங்களாம். கரணத்திரயமாவன:—அதப்பிரவிருத்திகரணம், அபூர்வகரணம், அநிவிருத்திகரணங்களாம். ஸாதனவஸ்துக்களைந்தாவன:-மானுஷ்யதேகம், கர்ம்மபூமி, மோக்ஷமடையுங்காலம், சுபபரிணமம், முடிந்தபவங்களாம். ரத்நத்ரயமூன்றுவன:— ஸம்மியக்ஞானம், ஸம்மியக்தர்சனம், ஸம்மியக்சாரித்திரங்களாம்.

## மடக்கு.

### எண்சீர்க்கழிநெடில்விருத்தம்.

77 சூதும்போ தார்முலைகட் கேதங்கூர் சிற்றிடையிற்
சுடரும்பூ ணார்களுடன் படர்வண்டார் காவுமளி
யூதும்போ தாரமளி மீதுந்தீ ராவமர
ருலகந்தாள் பாடவெறி யிலகும்பூ வேறியிறை
போதும்போ தாவியல்வ னேதும்போ தாவியல்வன்
பொழியும்பூ வாளிமற மொழியும்பூ வாளிமறங்
காதும்பே ராழியுடன் போதும்பே ராழியுடன்
கழுமும்பே ரோதையனே குழுமும்பே ரோதையனே.

இ-ள். பெரிதான சமுத்திரம்போல வொருதன்மையாகப் பொருந்துகின்ற திவ்வியத்தொனியையுடையவனும் கூட்டமாகிய ஆயிரத்தெட்டுநாமங்களினாலே யோதப்படுஞ் சுவாமியுமான அருகபரமன், சொக்கட்டான்காயும் தாமரைமுகையும்போலப் பொருந்திய தனங்களுக்கு வருத்தப்படுகின்ற சிற்றிடையிற் பிரகாசியாநின்ற மேகலாபரணமுடைய மாதர்களுடன் பரந்த சுரும்புகள்பொருந்திய கற்பகச்சோலையினின்றும், வண்டுகள் பாடுகின்ற மலர்கள்பொருந்திய சயனத்தினின்றும் நீங்காத தேவர்களும் உலகத்தாரும் பாதத்தைத் துதிக்க வாசனைவிளங்குகின்ற தாமரைப்பூவிலமர்ந்து கணப்பொழுதும் வீண்போகாமலெங்குஞ் சஞ்சரிப்பான், எப்பொருளு மொவ்வாத குணமுடையவன், பிரயோகியாநின்ற மலராகிய பாணங்களுடைய மன்மதனது வீரத்தினின்றுநீங்கிய பொலிவினையுடையவனுப் பாவத்தை மோதிநடக்கின்ற தருமசக்கரத்துடன் வருவான் எ-று.

**வி-ரை.** இதனால் அருகனுடைய பெருமை கூறப்பட்டது. ஐயன்—எழுவாய்; போதும்—பயனிலை. (எஎ)

அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

78 ஓதா துலகிற் பொருளனைத்து
முடனே யுணர்ந்தா னுணர்ந்தவற்றை
வேதா கமங்க ளாறேழால்
விரித்தான் விமலன் விரித்தளவே
கோதார் நெஞ்சத் தவர்பிறழக்
கொண்டே தாமே கண்டார்போற்
பேதா பேதம் பேதமெனப்
பிணங்கா நின்றார் பிரமித்தே.

இ-ள். உலகத்திலுள்ள அறுவகைப்பொருளையும் ஒருவராலும் சொல்லப்படாமலே யோகத்தன்மையாலே யறிந்தவனும், தானறிந்த எல்லாவற்றையும் வேதாகமமென்னும் பெயரினையுடைய நாற்பத்திரண் டங்கத்தினாற் சொன்னவனுமாகிய அருகன் சொன்னமட்டும் குற்றம் பொருந்திய மனமுடையவர்கள் மாறுபாடாக்கொண்டு, தாங்களே கண்டவர் கள்போல, பேதமாயும் அபேதமாயுமிருப்பதை யறியாமல் மயங்கிப் பேதமும் அபேதமும் வேறுவேறென்று மாறுபடுகின்றார்கள் எ-று.

**வி-ரை.** இதனால் மித்தியாதிருஷ்டிகளுடைய சாத்திரம் பழிக்கப் பட்டது. நெஞ்சத்தவர்—எழுவாய்; பிணங்காநின்றார்—பயனிலை. (எஅ)

எண்சீர்க்கழிநெடில்விருத்தம்.

79 பிரமனே காமனைவெங் கண்ட வென்றிப்
பெருமானே கருவினிலை வினையை வென்ற
சரமனே சகமுழுதும் வணங்கச் செல்லுஞ்
சதுமுகனே நின்முகப்பேர் தரியார் மீது
கரமனே கம்படைத்துப் படைக ளேந்திக்
கண்ணனே கம்பரப்பிக் கனல்கள் சிந்திச்
சிரமனே கஞ்சுமந்து செருச்செய் தோடுந்
தேவரோ வீரரெனத் தேர்கிற் பாரே.

இ-ள். பிரமனே! மன்மதனைச் சயித்த வெற்றியையுடைய கருத்தனே! கருப்பத்திற் பிறக்கநிலைத்த கருமத்தை வென்ற சரமதேகத்தையுடையவனே! உலகமுழுதும் பணிய நடக்கப்பட்ட நான்முகனே! உனது மார்க்கங்களாகப் பெயரைத்தரியாதவர்களாகி, தேகத்தின்மீது பலவாகக் கைகளைப் பெற்று ஆயுதங்களை அந்தக்கையிற்றரித்துப் பலவாகக் கண்களை விழித்து நெருப்புக்களையிறைத்துப் பலவாகத் தலைகளைத்தாங்கி யுத்தத்தைப்பண்ணியோடுகின்ற தேவர்களையோ வீரரென்று சாதுக்கள் தெளிவார்கள் எ-று.

வி-ரை. இதனால் மித்தியாதெய்வம் பழிக்கப்பட்டது. சாதுக்கள்—எழுவாய்; தேவரை—செயப்படுபொருள்; தேர்கிற்பார்—பயனிலை. (எகூ)

அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

80 பாரே ழுடையாயைப் பாரளந்து
படைத்துண்டா யென்கு வேனே
காரேர் கருமக் கடல்கடந்த
கைவலத்தா யென்கு வேனே
போரேறு காமன் பொருசிலையி
ஞணறுத்தா யென்கு வேனே
நேரே யெழுபிறப்பும் நீதலைவன்
யானடிமை யென்கு வேனே.

இ-ள். பூமியேழையுமுடைய நின்னை யந்தப் பூமியைப் பரமாணுவினால் அளந் தியாவர்க்குந் தெரியவுரைத்து ஞானத்தினால் விழுங்கினையென்று சொல்லுவேனே, கருமையையேற்ற வினைக்கடலைத்தாண்டிய முத்தியையுடையவனே யென்று சொல்லுவேனே, யுத்தத்திற் சிங்கம் போன்ற மன்மதன் பொருகின்ற தனுவினுடைய நாரியை அறுத்தனையென்று சொல்லுவேனே; நேராக எழ்பிறப்பினும் நீயே கருத்தன்; யானே அடிமையானவனென்று சொல்லுவேனே! எ-று.

இதனால், ஜீவராசிகளுக்கு ஆதாரமானவன் இவனேயென்பது கூறப்பட்டது. யான்—எழுவாய்; நின்னை—செயப்படுபொருள்; என்குவேனே—பயனிலை. (அ0)

அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

81 ஓரேழ பங்கவுரை வரம்பில்குணந்
தோறுமொரு பொருளுக் கோதிப்
பாரேழுந் தொழவிருந்த பண்ணவனைப்
பணியாதே யனந்த கால

மீரேழு தலத்திலிரு நெறிவழியி
லங்கொட்பிற் கதிக ணுங்கி
னேரேழு பிறவிகளி னிருவினையி
னொருவினையே னின்ற வாறே.

இ - ள். ஒருபொருளுக் களவில்லாத குணங்கடோறு மேழுவகை யான நியாயமொழியையுபதேசித்தே யேழுவகைப்பட்டவுலகமும் வணங்க வீற்றிருந்தசுவாமியை வணங்காமலேதான்; அனந்தகாலமாகப் பதினுன் கான மார்க்கணுஸ்தானத்திலும் இல்லறம் துறவறமாகிய மார்க்கத்திலும் பஞ்சவிடயங்களிலும் நான்குபிறப்பிலுண்டாகாநின்ற வேழுபிறப்பிலும் இரு வினையினுலே யொருவினையையுடைய யானின்றவிதம் எ - று.

இதனுல், அருகனைப் பணியாதார் பிறவியறுக்கமாட்டாரென்பது கூறப்பட்டது. நின்றவிதம்—எழுவாய்; பணியாதே—பயனிலை.

மார்க்கணுஸ்தானம் பதினுன்காவன:—கதி, இந்திரியம், காயம், யோகம், வேதம், கஷாயம், ஞானம், ஸம்யமம், தர்சனம், லேசியா, கவ்யத்வம், ஸம்யத்வம், ஸஜ்ஞுத்வம் ஆஹாரம் என்பன.

ஸப்தபங்கி நியாயமாவன:—ஸ்யாதஸ்தி, ஸ்யாந்நாஸ்தி, ஸ்யாதஸ்தி நாஸ்தி, ஸ்யாத்வக்தவ்யம், ஸ்யாதஸ்திவக்தவ்யம், ஸ்யாந்நாஸ்திவக்தவ்யம், ஸ்யாதஸ்திநாஸ்திவக்தவ்யம் என்பன. (அக)

### காப்பியக்கலித்துறை.

82 நில்லாத செல்வத்து நிற்பேமை நீயஞ்ச லென்னுவிடிற்
புல்லா தருட்கென்று புத்தேளிர் சொல்லும் புகழ்ச்சோதியே
யெல்லா வுயிர்க்கும் மளிக்கின்ற நின்னேமி யின்றென்கொலோ
வில்லா லலைத்தென்கண் மாரன்செய் வெங்நோய் விலக்காததே.

இ - ள். அநித்தியமான செல்வத்தினிற்குமெங்களை நீ பயப்படாதே யென்று சொல்லாவிட்டால் நினதுகிருபைக்குப் பெருமையணையாதென்று தேவர்கள் சொல்லுகின்ற புகழையுடைய சோதியாகிய அருகனே! ஐவகைப் பட்ட உயிரையும் இரக்ஷிக்கின்ற உனது தருமசக்கரமானது, மன்மதனுனவ னிப்பொழுது கருப்புவில்லினுலே யென்னையலைவுபடுத்தி என்னிடத்திற் செய்கின்ற வெப்பமாகிய வியாதியை நீக்காத தென்னகாரணமோ? எ - று.

வி - ரை. இதனுல் அருகனது பெருமையும் தனதெளிமையும் கூறப் பட்டன. நீக்காதது—எழுவாய்; என்கொல்—பயனிலை. (அஉ)

அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

83 விலங்காய்ப் பிறந்து தடுமாறி
வீழ்வார் தம்மைத் தேவரிவர்
கலங்காக் கருணை யாற்பிறந்து
காப்பா ரென்பீர் பிறவாது
நிலங்காப் பார்வன் பிலங்காப்பார்
நெடுவான் காப்பார் விலங்குகளைம்
புலங்காப் பார்தம் மொழிகேட்டுப்
புவிகாப் பாரைப் போற்றீரே.

இ-ள். மிருகங்களாகி உலகிற்பிறந்து சமுசாரத்தில் விழுமவர்களைத் தேவர்களென்றும் இந்தத்தேவர்கள் மயக்கமில்லாத கிருபையினாலே அவதரித்துச் சீவன்களை இரட்சிப்பார்களென்றும் சொல்லுமவரே! என்றும் பிறக்காமற் பூமியைக் காவல்செய்வார்; வலிமைபொருந்திய பாதலத்தைக் காவல்செய்வார்; நீண்ட சுவர்க்கத்தைக் காவல்செய்வார்; மிருகங்கள் போன்ற பஞ்சவிடயங்களைக் காவல்செய்வார்; இத்தன்மையையுடையவருடையதருமமொழியை மனத்திற் பொருந்தக்கேட்டு உலகத்தில் வாழுஞ் சீவன்களைக் காவல்செய்யும் அருகபரமேட்டியைப் போற்றுங்கள் எ-று.

வி-ரை. இதனால் அருகபரமனது பெருமை கூறப்பட்டது. என்பீர்—எழுவாய்; காப்பாரை—செயப்படுபொருள்; போற்றீர்—பயனிலை. (அங)

வெண்பா.

84 போற்று மிதுவென்கொல் பொய்ந்நூல் களைப்புலவீர்
சாற்று மனந்த சதுட்டயத்தா—னேற்றுந்
துளக்கப் படாத சுருதியா லல்லா
லளக்கப் படுமோ வறம்.

இ-ள். அறிவுடையவரே! நீங்கள் பொய்யாகிய சாத்திரங்களைப் போற்றுகின்ற இச்செயல் என்னகாரணம்? சொல்லப்பட்ட அநந்த சதுட்டயங்களையுடைய அருகபரமனரங்கமேற்றிய அசைக்கப்படாத வேதத்தாலல்லாமற் றருமமானது மற்றென்றால் அளவுகாணப்படுமோ? எ-று.

வி-ரை. இதனால், அருகபரமனோதிய தருமமே மெய்யான சாத்திரமென்பது கூறப்பட்டது. புலவீர்—எழுவாய்; அளக்கப்படுமோ—பயனிலை.

கட்டளைக்கலித்துறை.

85 அறமா முயிர்க்கொலை யென்னின்மற் றுருயி ரோம்புதலோ
மறமா வதுமறஞ் செய்தவ ரெய்துவர் வானமென்றாற்
பிறமா நரகறஞ் செய்தவர்க் கோபிண்டி வாமன்மெய்ந்நூற்
றிறமாறு கொண்டசின் னூற்றிண்ணர் காளொன்று செப்புமினே.

இ-ள். அசோகிலமர்ந்த அருகபரமனுடைய உண்மை விளங்காநின்ற பரமாகமத்தினுடையவகைக்கு மாறுபாடுகொண்ட அற்பநூலின்கண் உறுதியையுடையவரே! சீவனைக் கொல்லுதல் அறமாகுமென்று சொன்னால் நிறைந்த சீவனை யிரட்சித்தலோ பாவமாவது? பாவத்தைப் பண்ணினவர்கள் சுவர்க்கத்தையடைவார்களென்றுசொன்னாற் கொடிய நரகமானது தருமத்தைப் பண்ணினவருக்கோ? இரண்டில் ஒருதுணிவு சொல்லுங்கள் எ-று.

வி-ரை. இதனால் மித்தியாதிருட்டிகளால் பழிக்கப்பட்டது. சின்னூற்றிண்ணர்காள்—எழுவாய்; ஒன்றை—செயப்படுபொருள்; செப்புமின்—பயனிலை; பிற என்பது அசை. (அரு)

எழுசீர்க்கழிநெடில்விருத்தம்.

86 மின்னிடை மடவார் குழைதொடர்ந் தகன்று
விடந்தரு படைவிழிக் குடைந்து
வெந்நிடு மவர்கள் வீரரே னுலகில்
வீரரல் லாதவ ருளரே
கொன்னுடை நெடுவே லரசரு மமர
குலமுநின் னடிமுதல் வணங்கி
நின்னுடை யடியே யருளென விருந்த
நிமலனே நீயலா விடினே.

இ-ள். அச்சந்தருதலையுடைத்தாகிய நீண்டவேலினையுடைய சக்கரவர்த்திகளும் தேவர்களுடையகூட்டமும் உன்னுடைய பாதத்தடியிலிறைஞ்சி உம்முடைய பாதத்தை யெங்களுக்குக் கொடுமென்று சொல்ல வீற்றிருந்த நிருமலனே! நீயல்லாவிட்டால் மின்னலையொத்த இடையையுடைய மாதர்களது குண்டலத்தையுடைய காதளவுந் தாவிப் பரந்து விடம் பொருந்திய வாள்போன்ற கண்களுக்குத்தோற்று முதுகுகாட்டியோடுமவர்கள் வீரர்களானு லுலகத்தில் வீரரல்லாதவர்களுண்டோ? எ-று.

வி-ரை. இதனால் வினையினீங்காதவை மித்தியாதெய்வங்களென்று அத்தெய்வம் பழிக்கப்பட்டது. வீரரல்லாதவர்—எழுவாய்; உளரே—பயனிலை. (அசு)

கலிவிருத்தம்.

87 விட்டகல்வ தேகருமம் வெய்யவினை காண்முன்
கட்டழலு ணுங்குல மடங்கமடி யக்கார்
மட்டவிழு மாமலரின் வந்தவா தர்க்கென்
னிட்டமிட மாயின தினித்தொடர்வி லேனே.

இ - ள். வெப்பமான வினைகளே! மிகுந்த நெருப்பினுள் ஆதியில் உம்முடைய குலமுழுவதுங் கெடச் சலத்திலே தேனுனது விரியாநின்ற பெருமையையுடைய தாமரைப்பூவிற் றிருவுலாவந்த கருத்தனுக்கு என்னுடைய அன்பே இடமாயிற்று; இனி உம்மொடு தொடர்ச்சியில்லை; ஆதலாலென்னைவிட்டகல்வதே காரியமாகும் எ - று.

வி - ரை. இதனால் அருகனிடத்திற் றனதுமனமடைந்தபெற்றி கூறப்பட்டது. அகல்வதே—எழுவாய்; கருமம்—பயனிலை. (அஎ)

கலிவிருத்தம்.

88 தொடர்படு சடையுட னிருந்து தோகையர்க்
கிடர்படு மனத்தவ ரிறைமை கேட்பரோ
படர்படு கதிப்பெயர்ப் பவ்வ நான்கையுந்
திடர்பட வெகுண்டவர்க் குரிய செல்வரே.

இ - ள். பரவிய நான்குகதியென்ற பெயரையுடைய நான்குகடலையும் மேடாகக் கோபித்த அருகருக்குரிமையென்னுஞ் செல்வத்தையுடைய சாதுக்கள், தொடர்ச்சிபட்ட சடையுடனே வீற்றிருந்து மாதர்களுக்குத் துன்பப்படும் மனத்தையுடையவருடைய சுவாமித்துவத்தை யொருவர் சொல்லக் கேட்பார்களோ? எ - று.

வி - ரை. இதனால் அருகனுடைய அடியார் மித்தியாதெய்வங்களை மதியாரென்பது கூறப்பட்டது. செல்வர்—எழுவாய்; இறைமையை—செயப்படுபொருள்; கேட்பரோ—பயனிலை. (அஅ)

அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

89 செல்வ ரென்று தாந்தம்மைத்
தேறிக் கல்வித் திருவுடைய
மல்லன் மதியோர் வறுமையைக்கண்
டிகழு மடவார் பாலணுகோம்

அல்லல் வினைவெங் கலிகடிந்திட்
டகிலம் புரக்குந் தனிச்செங்கோற்
றொல்லை மறைநா யகன்றருமச்
சுடர்மா மணிகைக் கொண்டோமே.

இ - ள். துன்பத்தைத்தரும் வினையாகிய வெப்பம்பொருந்திய வறுமையைநீக்கி யாவற்றையும் அளிக்கின்ற ஒப்பற்ற ஆணையாகிய பழமையையுடைய வேதத்தைச்சொன்ன அருகபரமனுடைய தருமமாகிய பிரகாசியாநின்ற பெருமைபொருந்திய இரத்தினத்திரயத்தைக் கையிற் கொண்டோமாகையால் தாங்கள் செல்வத்தையுடையோமென்று தங்களைத் தெளிந்து கல்வியாகிய செல்வத்தையுடைய வளப்பம்பொருந்திய புத்தியையுடையவரது தரித்திரத்தைப்பார்த்து நிந்தியாநின்ற பேதைமையையுடையவரிடம் யாஞ் சேரோம் எ - று.

வி - ரை. இதனால் மித்தியாதிருட்டிகள் எவ்வளவுசெல்வத்தராயினும் சம்மியக்திருட்டிகட் கிணையாகாரென்பது கூறப்பட்டது. யாம்—எழுவாய்: மடவாரை—செயப்படுபொருள்; அணுகோம்—பயனிலை. (அகூ)

### ஆசிரியவிருத்தம்.

90 கொண்டல் வண்ணனைப் பண்ணவர் தலைவனைக்
கொலைகடிந் துயிரோம்பும்
கொற்றநேமியங் கடவுளை மகரவெல்
கொடியவன் றனைக்காய்ந்து
தொண்டர் சிந்தையிற் றுணிபுநன் மதியெனத்
தோன்றுதண் சுடரோனைத்
தூய நான்மறைத் தலைவனை யறிவனைத்
தொழாதவர் தொலையாத
சண்ட வெந்துயர் நரகினில் வெருவுறு
விலங்கினிற் பசியாலே
தளர்ந்து நல்லறி விழந்தமா னிடத்தினிற்
றாழ்ந்தினி வரும்பேரப்
பண்டை வல்வினைப் பெரும்பகை துரந்திடத்
துரந்திடத் தடுமாறிப்
பரிவுகொண்டொரு நிலையிலர் வருந்துவர்
வருந்திலர் பணிவாரே.

இ - ள். மேகம்போன்ற நிறத்தையுடையவனை, கடவுளர்களுடைய நாயகனை, கொல்லுதலைநீக்கிச் சீவனை யிரட்சியாநின்ற வெற்றிபொருந்திய தருமசக்கரத்தையுடைய அழகிய சுவாமியை, மகரமீனெழுதிய யாவற்றையுஞ் செயித்த கொடியையுடைய மன்மதனைக் கொன்று அடியவருடைய மனதில் நல்லபுத்தியென்றுசொல்லத் துணிந்து உதிக்கின்ற குளிர்ச்சிபொருந்திய சந்திரனை, பரிசுத்தமான நான்குவேதத்திற்கும் முதல்வனை, ஞானியை வணங்குமவர் துன்புறார்; வணங்காதவர்கள், நீங்காத மிகுந்த வெப்பமாகிய துன்பத்தைத்தரும் நரகத்திலும் பயப்படுகின்ற மிருகத்திலும் பசியினாலே சோர்ந்து நல்லஞானத்தையிழந்த மனிதர்களிலும் பிறந்து மேல்வரப்பட்ட மிகுதியையுடைய அநாதியிற்கட்டிய வலியையுடைய தீவினையாகிய பெரிய பகைவன் செலுத்தச்செலுத்த மயங்கித் துன்பங்கொண் டொருநிலையு மில்லாமற் றுன்புறுவார்கள் எ - று.

வி - ரை. இதனால், சகலசீவாதாரன் அருகனே என்பது கூறப் பட்டது. வணங்குமவர்—எழுவாய்; துன்புறார்—பயனிலை; வணங்காதவர்—எழுவாய்; துன்புறுவார்—பயனிலை. (கூo)

## களி.

### ஆசிரியவிருத்தம்.

91 பண்டயன்றலை மண்டையிற்றிரு மாலரற்கு நிறைத்திடும்
பழையமந்திர மன்றுமந்திர யானமோதிய போதியா
னுண்டமந்திர மன்றுவேதியர் வேதமந்திர மோதிநின்
றுண்ணுமந்திர மன்றெனுவிடை நண்ணுமந்திர மந்திரத்
தண்டர்தம்பதி கண்களாயிர முங்கரங்களு மாடநின்
றுடிநெஞ்சு களிப்பவஞ்ச மொளிப்பவைம்பெரு நூறுவாய்க்
கொண்டமந்த்ர மெமக்கனந்த சுகத்தையேதரு மந்திரங்
கொற்றமுக்குடை நற்றவன்றமர் கூறுமந்திர மஞ்சுமே.

இ - ள். என்னுவிலே பொருந்தும் மந்திரம், விமானத்திலேவாழும் தேவர்களுடைய நாயகனுன இந்திரன் ஆயிரங்கண்களும் ஆயிரங்கைகளு மாடும்படி யெதிரேநின்று நடித்து மனமானது சந்தோஷிக்கக் கபட மொளிக்க ஐந்நூறுவாயிலும் செபித்துக்கொண்ட மந்திரம், எங்களுக் கனந்தசுகத்தைக் கொடுக்கும் மந்திரம், வெற்றியையுடைய மூன்றுகுடையை யுடைய நல்லதவத்தையுடைய அருகனதுபத்தர்கள்சொல்லும் பஞ்சமந்திர

மும், ஆதியிற் பிரமனுடைய தலைமண்டையில் விஷ்ணு அரனுக்கு நிறைத்த பழங்கள்ளன்று; கள்ளின் விதியைச்சொன்ன அரசநிழலையுடைய புத்தன் குடித்த கள்ளன்று; பிராமணர் வேதமந்திரத்தை யோதிக்கொண்டு குடிக்கின்ற கள்ளன்று எ-று.

வி - ரை. இதனால் பஞ்சமந்திரத்தினதுபெருமை கூறப்பட்டது. மந்திரமஞ்சும்—எழுவாய்; கள்ளன்று—பயனிலை. (கக)

எண்சீர்க்கழிநெடில்விருத்தம்.

92 அஞ்சன நெடுங்கயல் கொடுங்குழை நெருக்கு
மானன வரம்பையர்க ளாயிரவ ராடுங்
கஞ்சமல ராயிர மருங்குடைய தெய்வக்
காமர்நளி னத்தமரர் கைதொழ நடந்தாய்
வெஞ்சின மடங்கலொடு குஞ்சரமு நண்பாய்
மேவியொழு கப்புவனி காவல்புரி வீரா
நெஞ்சநிறை வல்லரண் முருங்கவொ ரனங்கன்
நின்றுமலை யாநிலைமை யென்றுபெறு வேனே.

இ - ள். மைதீட்டிய நீண்ட சேற்கெண்டையாகியகண்கள் கனமான குண்டலம்பொருந்தியகாதை நெருக்குகின்ற முகத்தையுடைய தெய்வ மாதர்கள் ஆயிரவர் நடிக்கப்பட்ட தாமரைமலர்கள் ஆயிரம் பக்கத்திலுடைத்தாகிய தெய்வத்தன்மையையுடைய அழகிய தாமரைப்பூவில் தேவர்கள் கைகளைக்கூப்பி வணங்க நடந்தவனே! வெப்பம்பொருந்திய கோபத்தையுடைய சிங்கத்துடனே யானையும் சிநேகமாய்ப் பொருந்திநடக்க உலகத்தைக் காத்தலைச்செய்யாநின்ற அநந்தவீரியனே! மனத்தின்கண் கற்பாகிய வலிமையுடைய மதிலழிய ஒரு மன்மத னெதிர்நின்று சண்டைபண்ணாத நிலையானதன்மையை யெப்பொழுது அடைவேன்? எ - று.

வி - ரை. இதனால் காமங்கடத்தலே முத்திக்குநெறியென்பது கூறப்பட்டது. யான்—எழுவாய்; நிலைமையை—செயப்படுபொருள்; என்றுபெறுவேன்—பயனிலை. (கஉ)

ஆசிரியவிருத்தம்.

93 பெறுவ தெண்டிசை கைதொழ வருளறந்
தருதனிச் செங்கோலாற்
பிறங்கு மூவுல கொருங்குட னுள்வதொர்
பெருமையைப் பெறுதிங்கு

மறுவ ரும்பெருந் துயர்தரு வினைப்பழம்
பகைவர்கை யகப்பட்டு
வருந்து கின்றதுன் றிருந்தடி நினைகுவ
தருமையின் வெறிவீச
வறுப தந்தொடர்ந் தெழுநரம் பெனமுரல்
விசைகுமு கும்மென்ன
வலங்கு தண்மதுத் திவலையொ டிழிதரு
மலர்மழை வலயத்து
ளூறுவர் வந்தனை செயவிருந் தருளிய
வும்பர்நா யகனேயென்
னுள்ள மாமலர் மிசையினு மொருபொழு
துலாவெழுந் தருள்வாயே.

இ-ள். வாசனைவீச வண்டினங்கள் பின்றொடர்ந்து சத்தசுரம் போலச் சப்திக்கின்ற இராகமானது குமுகும்மென்றொலிக்க அசைகின்ற குளிர்ந்த தேன்றுளியுடனே யிறங்குகின்ற புஷ்பமாரியினுடைய வட்டத்தினுள் முனிவர்கள் வணக்கத்தைச்செய்ய வீற்றிருந்த தேவர்களுக்கு நாதனே! இவ்விடத்தில் எட்டுத்திக்குமுள்ளாகக் கைகளைக்கூப்பி வணங்கப்பெறுவதும் அருளாகிய தருமத்தைக்கொடுக்கின்ற ஒப்பற்ற ஆக்கினையினாலே விளங்குகின்ற மூன்றுலகமு மொன்றாக வொருதன்மையாய் ஆள்வதுமாகிய ஒப்பற்ற பெருமையையடையாமற் குற்றங்கள் உறுகின்ற மிகுந்த துன்பத்தைக் கொடுக்கின்ற வினைகளாகிய பழமைபொருந்திய பகைவர்கையில் அகப்பட்டு உன்னுடைய திருத்தமாகிய பாதங்களை நினைகுவதருமையாகையால் என் மனமானது துன்புறுகின்றது; ஆகையால் என்னுடைய உள்ளமாகிய பெருமை பொருந்திய தாமரைப்பூமேலும் ஒருகணம் திருவுலாவெழுந்தருள்வாய் எ-று.

வி-ரை. இதனால் அருகனை மனத்தில் வையாதவர்கள் கருமங் கெடுத்து வீடுபெறமாட்டார்களென்பது கூறப்பட்டது. நாயகனே! நீ—எழுவாய்; உலாவெழுந்தருள்—பயனிலை. (கூங)

வஞ்சிவிருத்தம்.

94 அருவினை விடும்பகவர் சித்தர்க
ளொருதுறவு தந்தருளு முத்தமர்
சுருதிகள் பயந்தருள்செய் சுத்தர்க
டிருமுனிவர் தங்கள்பெயர் செப்பவே.

இ - ள். அருகரும் சித்தர்களும் ஒப்பற்ற தவத்தைக்கொடுக்கின்ற ஆசாரியரும் வேதங்களையோதுவித்து இரட்சியாநின்ற உபாத்தியாயர்களும் சித்தித்திருவையுடைய சாதுக்களுமாகிய பஞ்சபரமேஷ்டிகளுடைய நாமங்களைச்சொல்லவே வெல்லுதற்கரிதாகிய வினையானது சீவனைவிடும் எ - று.

வி - ரை. இதனால் பஞ்சமந்திரமே முத்திக்குக் காரணமென்பது கூறப்பட்டது. வினை—எழுவாய்; சீவனை—செயப்படுபொருள்; விடும்—பயனிலை. (கூச)

கலித்தாழிசை.

95 பல்லுருவ மெல்லாம் படைத்தேனுக் கெட்டாத
வெல்லுருவாய் நீண்ட வெழிலுருவம் யாதரோ
வெல்லுருவாய் நீண்ட வெழிலுருவ முக்குடைக்கீழ்த்
தொல்லுலக மூன்றுந் தொழச்சூழ் வினையென்னும்
வல்லிருள் துறந்திடுவ தன்றே.

இ - ள். பலவாகிய வுருவங்களெல்லாமெடுத்த எனக்கடையக்கூடாத பிரகாசியாநின்ற உருவமாயுயர்ந்த அழகிய வுருவமானதியாதுதான்? பிரகாசமாகிய வுருவமாகி வளர்ந்த அழகியஉருவமானது, முக்குடைநிழலிற் பழமையாகிய மூன்றுலகமும் வணங்கச் சீவனைப்பற்றிய வினையாகிய வலிய இருட்டை ஓட்டுவதன்றோ எ - று.

வி - ரை. இதனால் சித்தருடைய உருவங்கிடைத்தல் அரிதென்பது கூறப்பட்டது. உருவம்—எழுவாய்; யாது—பயனிலை; உருவம்—எழுவாய்; இருட்டை—செயப்படுபொருள்; துறந்திடுவதன்றே—பயனிலை. (கூரு)

சந்தவிருத்தம்.

96 இடுகிடை தளரவார் செற்றன
வினையன விளையர்தோள் வெற்றமு
மிதயமு நிறையுமோ டப்பொரு
தெறிவன முளரிநாண் மொட்டினை
யடுவன விவையெனு நச்செழி
லயில்விழி மயிலனார் கச்சணி
யணிமுலை பரசிமா லுற்றுள
மலமரு செயலெலாம் விட்டன

முடுகிய லிவுளிதேர் வெற்புறழ்
முரணிப மறவர்கால் செற்றதொர்
முரிதிரை யுவரிபோன் மொய்த்திகன்
முறுகுதொ றொழுகுசோ ரிப்புனல்

கடுகிய கதிகளா கத்தெறு
கறுவுகொ டமர்செயா தொத்தெழு
கருணைகொ டுலகமாள் கொற்றவர்
கடிமலர் நடவுதாள் பற்றியே.

இ - ள். முடுகுகின்ற இயல்பையுடைய குதிரையும் இரதமும் மலையையொத்த யானையும் வலியையுடைய வீரர்களும், காற்றுற் கோபித்துச்சூழ்ந்துகொண்டு உடையும் அலையையுடைய சமுத்திரம்போலநெருங்கி யுத்தமானதுமிகுந்தொறும் ஒழுக்கப்பட்ட இரத்தமாகியசலமானது முடுகியவெள்ளமாக ஓடுதலுண்டாகக் கொல்லுகின்ற வைரத்தைக்கொண்டு யுத்தம்பண்ணமற்பொருந்தி எழுகின்ற கிருபையைக்கொண்டு உலகத்தையாளுகின்ற வெற்றியையுடைய அருகபரமனது வாசனைபொருந்திய தாமரைப்பூவை நடத்துதலைச்செய்யும் பாதத்தைப்பிடித்தே, சிறுகிய மருங்குல் சோரக் கச்சினைச்செயித்த இவைகள், இளையவர்களுடைய தோளினதுவெற்றியும் மனமும்கற்பும் நீங்க மோதியடிப்பன; முளரியினுடைய அன்றலரு மொட்டினைச்செயிப்பன; இவையென்று விடம்பொருந்திய அழகையுடைய வேல்போன்றகண்களையுடைய மயில்போன்ற மாதர்களுடைய கச்சினையணிந் தாபரணமும்பொருந்திய தனங்களைத்துதித்து மயக்கத்தைப் பொருந்தி மனமானதுசுழல்கின்ற செய்கையெல்லாவற்றையும் யாம் விட்டோம் எ - று.

**வி - ரை.** இதனுல் அருகனைத்துதித்து நம்புபவரே காமனைவென்றவரென்பதுகூறப்பட்டது. யாம்—எழுவாய்; எல்லாவற்றையும்—செயப்படுபொருள்; விட்டனம்—பயனிலை. (கூசு)

அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

97 பற்றற் றவர்கள் வந்துன்னைப்
பற்றி லவர்கள் பற்றற்றே
நிற்றற் கியைந்து பற்றுது
நின்று யிதுவு நெறியாமோ

கொற்றக் கவிகை யொருமூன்றுங்
குளிர்வெண் டிங்க ணிலாவெறிக்கு
முற்றத் தமரர் முடிகள்வெயி
லெறிக்கு மெயிலாய் மொழியாயே.

இ-ள். வெற்றிபொருந்திய மூன்றுகுடையும் குளிர்ந்த வெண்மையாகிய சந்திரன்போல் பிரகாசத்தை வீசாநின்ற முன்வாயிலிலே, தேவர்களுடைய கிரீடங்களினலே இளஞ்சூரியன்போல விளங்காநின்ற மும்மதிலையுடையவனே! வினைப்பற்று நீங்கினவர்கள் உன்னிடத்தில் வந்து உன்னைப் பற்றினல் அவர்கள் வினைப்பற்றுநீங்கியேநிற்றலுக்குப் பொருந்தி, நீ அவரைப் பற்றுமனின்றுவிட்டாய்; இந்தத்தன்மை யுன்னெறியாமோ? நீ சொல் எ-று.

வி-ரை. இதனல் அருகனுடைய அவாவற்றகுணமும் அவனை நினைத்தவர் பெரும்பேறும் கூறப்பட்டன. நெறி—எழுவாய்; ஆமோ—பயனிலை; நீ—எழுவாய்; சொல்—பயனிலை. (கூஎ)

வெண்பா.

98 மொழிவழி வாராத மூர்க்கர் நிரையப்
பழிவரு வெஞ்சிறையிற் பட்டார்—மொழிவழி
வந்தார்கள் வானநா டாள்கின்று ரன்னதோ
வெந்தாய்வேந் தாகு மியல்பு.

இ-ள். என் கருத்தனே! திவ்வியத்தொனியாகிய ஆணையினுடைய மார்க்கத்தில் கூடவாத மூர்க்கர்கள் நிந்தைவருகின்ற வெப்பமான நரகமாகிய சிறைச்சாலையில் அகப்பட்டார்கள்; ஆணையினுடைய மார்க்கத்தில் நடந்தவர்கள் கற்பங்களையாள்கின்றார்கள்; ஆகையால் அருகனுகுமியல்பு அன்னதன்மைத்தோ எ-று.

வி-ரை. இதனல் அருகனுடைய திவ்வியத்தொனியினதுசிறப்புக் கூறப்பட்டது. மூர்க்கர்—எழுவாய்; பட்டார்—பயனிலை; வந்தார்கள்—எழுவாய். வானநாடு—செயப்படுபொருள்; ஆள்கின்றார்—பயனிலை; இயல்பு—எழுவாய்; அன்னதோ—பயனிலை. (கூஅ)

எண்சீர்க்கழிநெடில்விருத்தம்.

99 இயல்பினு நிலநீர்தீக் காலா காய
மிரவிமதி யியமான னாகி நின்ற
மயலிலா வெண்மூர்த்தி யனந்த மூர்த்தி
வரம்பிகந்த மாசிலா ஞான மூர்த்தி

செயலினும் வினைமூர்த்தி யவர்கள் சிந்த
முச்சூர்த்தி யாயுயர்ந்த தெய்வ மூர்த்தி
பெயரினு மாயிரத்தெண் மூர்த்தி யல்லாற்
பிறமூர்த்தி களையென்னோ பேணு மாறே.

இ-ள். இயல்பாக ஆகிய பூமியும் சலமும் அக்கினியும் வாயுவும் ஆகாயமும் சூரியனும் சந்திரனும் சீவனுமாகி நிலைபெற்றுநின்ற மயக்கமில்லாத எட்டுமூர்த்தத்தையுடையவர்; அனந்தமயமான மூர்த்தத்தையுடையவர்; அளவுநீங்கிய குற்றமில்லாத ஞானமயமான மூர்த்தத்தையுடையவர்; செய்கையினாலேயாகிய வினையென்னும் மூர்த்தத்தையுடையவர்கள் கெட முச்சோதியுருவமாய் மேம்பட்ட தெய்வீகமூர்த்தத்தையுடையவர்; பெயரினாலாகிய ஆயிரத்தெட்டுமூர்த்தத்தையுடையவரையல்லாமல் அந்நியமாகிய உருவையுடையவர்களை ஆதரிக்கும்விதமென்னகாரணமோ? எ-று.

வி-ரை. இதனால் மித்தியாதெய்வம் பழிக்கப்பட்டது. பேணுமாறு—எழுவாய்; என்னோ—பயனிலை. (கூகூ)

ஆசிரியவிருத்தம்.

100 பேணுந் தகைய வானின்மிசை
யோனி மிசையோ ராயிரத்திற்
பெருகுந் தொண்ணூற் றேழினொடு
மருவு மிருபத் தொருமூன்றுங்
காணுந் தகைய மண்ணினிடை
நானூற் றைம்பத் தோரெட்டுங்
கனக பவணத் தேழ்கோடி
மிசையொன் பதிற்றெட் டிலக்கமுஞ்சீர்
மாணுந் தகைய பஞ்சவர்கள்
வயங்கு மிருநால் வியந்தரர்கண்
மருவும் விமானத் தெண்ணிலவு
மாகி வடபொற் குன்றென்னச்
சேணின் றிலங்கு சினகரமுஞ்
செயற்கை வரம்பில் கோயில்களுஞ்
செம்பொ னெயிலு முடையாரென்
சிந்தை யமர்வ தறியேனே.

இ - ள். யாவரும் ஆதரிக்கப்படும் பெருமையையுடைய கற்பங்களில் எண்பத்துநாலுலட்சத்துத் தொண்ணூற்றேழாயிரத்திருபத்துமூன்றும், பார்க்கப்படும் அழகையுடைய பூமியில் நானூற்றைம்பத்தெட்டும், பொன்னு லாகிய பவணலோகத்தில் எழுகோடியும் எழுபத்திரண்டுலட்சமும், சிறப் பானது பொருந்துங் குணத்தையுடைய சோதிடர்களும், விளங்குகின்ற எண்மராகிய வியந்தரர்களும் பொருந்திய விமானங்களில் கணக்கில்லா தனவாகி,வடக்கின்கண்ணிருக்கும் மேருவைப்போல ஆகாயத்தில் நிலைபெற்று நின்றுவிளங்குகின்ற கோயில்களும் செய்கைபடுதலையுடைய அளவில்லாத கோயில்களும் சிவந்த பொன்னுலாகிய சமவசரணமும் உடைய அருகபரமன் எனது மனத்திற்றங்குவதை யானறியேன் எ - று.

வி - ரை. இதனால் பவ்வியசீவர்களுடைய மனத்தில் எப்போதும் வாசம்பண்ணுவர் அருகரென்பது கூறப்பட்டது. யான்—எழுவாய்; அமர்வதை—செயப்படுபொருள்; அறியேன்—பயனிலை. (௧00)

### ஆசிரியவிருத்தம்.

101 அறிவன் காதற் பெருங்கிழத்தி
யகில மீன்ற தாயென்று
மழியாக் கன்னி யறம்வளர்த்த
வன்னை யாறு சமயத்தின்

பிறிவு தன்பாற் றோன்றியவள்
பிறங்கு புவனத் தனிவிளக்குப்
பிறழா முத்தி நாயகிநம்
பிறவிப் பகைத்தி யுயிர்க்கெல்லாஞ்

செறியுங் கருணை சுரந்தளிக்குந்
தெய்வச் செவிலி கற்புடைய
செஞ்சொற் பாவை யானந்த
வல்லி ஞானச் செழுங்கொழுந்து

பொறியைம் புலத்தின் வேட்கைநோய்
தீர்க்கு மருந்தென் றருந்தவர்கள்
போற்றும் பதத்தார் செய்யபதம்
போற்று ருணர்வு பொங்காதே.

இ - ள். "அருகபரமனுடைய விருப்பத்திற்கு மிகுந்த உரிமையான வள்; யாவற்றையும்பெற்ற தாயானவள்; எக்காலமும் கெடாத கன்னிகை யானவள்; தருமத்தை வளரப்பண்ணின செவிலித்தாயானவள்; அறுவகை யாகிய ஏகாந்தவாதத்தினது பிறிவு தன்னிடத்திலுண்டாயினவள்; விளங்கு கின்ற புவனத்திற்குத் தனித்தீபமானவள்; மாறுபடாத சித்தியாகிய நாயகி யானவள்; நம்முடைய பிறப்புக்குப் பகையானவள்; சீவர்களுக்கெல்லாம் நெருங்கிய கிருபைசுரந்துகொடுக்குந் தெய்வத்தன்மையுடைய உயிர்ப்பாங்கி யானவள்; கற்பினையுடைய செம்மையாகிய சொல்லையுடைய பாவையானவள்; இன்பமயமான கொடியானவள்; ஞானமயமான செழுமையாகிய தளி ராகியவள்; ஐம்பொறிகளுக்கும் பஞ்சவிடயங்களிலுண்டாகிய ஆசையாகிய வியாதியைத் தீர்க்கின்ற மருந்து" என்றுசொல்லி, அரிதாகிய தவத்தை யுடையவர்கள் துதிக்கின்ற பாதத்தையுடைய சித்தருடைய சிவந்தபாதத் தைத் துதியாதவருக்கு அறிவானது மிகாது எ - று.

வி - ரை. இதனால் சித்தித்திருவினதுபெருமையும் சித்தருடைய பாதமே சித்தி என்பதும் கூறப்பட்டன. உணர்வு—எழுவாய்; பொங்காது— பயனில்லை. (க0க)

## சம்பிரதம்.

### ஆசிரியவிருத்தம்.

102 பொங்கு நாவலம் பொழிலினைச் சிமிழினு
ளடக்குவன் வடமேருப்
பொருப்பை யூசியின் றுளையிடைப் போக்குவ
னேக்கிலிப் புவனத்து
ளெங்கும் யாவையுஞ் செயுஞ்செயும் விச்சைக
ளிவைசில பொருளோமற்
றேழு லோகமு மலோகமுந் தம்முளே
யடக்கிநின் றடங்காது
கொங்கு வீசுசெம் பங்கயப் பூமிசை
நடந்தவர் தடந்தாளுட்
கொண்ட தொண்டர்த மருளினல் வந்தது
குறிக்கொண்மின் குபதத்தே

தங்கு மார்வமிக் குடையவப் பாதகத்
தோர்கண முதலாகுஞ்
சமய வாதிகள் செவியினி லறம்புகச்
சாற்றுவன் காணீரே.

இ - ள். உலகத்தாரே! விளங்குகின்ற சம்புத்தீபத்தைப் பரணிக்குள்ளே யடக்குவன்; வடக்கின்கண்ணிருக்கும் மேருமலையை ஊசியினுடைய காதிலே நுழைப்பேன்; இப்புவனத்தில் பார்க்குமிட மெவ்விடத்தினும் சகலபொருள்களையும் பண்ணப்பட்ட பண்ணப்பட்ட வித்தைகள் எனக்கு ஒருபொருட்டோ? எழுவகையுலகமும் அலோகமும் தமக்குள்ளே யடக்கிக் கொண்டு நிலைபெற்றுநின் றடங்காமல் வாசனையைவீசுகின்ற சிவந்த தாமரைப்பூமேல் நடந்த அருகருடைய பெருமைபொருந்தியபாதத்தை மனதில் உறுதியாகக்கொண்ட அடியார்களுடைய கிருபையினாலே உபதேசமானதை அறிந்துகொள்ளுங்கள்; குச்சிதபதத்திலே பொருந்திய ஆசை மிகுதியுடைய அந்தப் பாவிகளான புத்தர்களுடைய கூட்டமுதலாகிய ஏகாந்தவாதிகளுடைய காதினிற் சினதருமம் நுழைய யான்சொல்லுவன் பாருங்கள் எ - று.

வி - ரை. இதனால், மித்தியாவாதிகள் அறிவிலரென்பதும், சினதருமத்தின் பெருமையே மிகுந்ததென்பதும் கூறப்பட்டன. யான் சொல்லுவன்—எழுவாய்; காணீர்—பயனிலை. (௧0௨)

எழுசீர்க்கழிநெடில் விருத்தம்.

103 காணுங் கண்ணுள வேனுங் கண்கொடு
காணார் கடைதபு ஞானத்தார்
பேணும் பொருளுள வேனும் புலனவை
துவ்வார் பெருகிய போகத்தார்
பூணும் புரவியு மேறும் பாகனு
மொழியப் புண்டரி கத்திண்டேர்
சேணின் றடியிணை தோயா வகைதனி
யூர்வார் செயலிவை தெரியாவே.

இ - ள். முடிவில்லாதஞானத்தையுடையவர், பார்க்கின்ற கண்களுளவாயிருந்தாலும் கண்ணைக்கொண் டொன்றையும் பாரார்; அனந்தமான சுகத்தையுடையவர், ஆதரிக்கின்ற பொருள்களுளவாயிருந்தாலும் விடயங்களை யனுபவியார்; பூண்டிழுக்கும் குதிரைகளும் ஏறிநடத்தும் பாகனும்

நீங்கத் தாமரைப்பூவாகிய பலம்பொருந்திய தேரின்மேல் இரண்டுபாதங் களும் பொருந்தாதவிதமாக ஆகாயத்தினின்றும் ஒப்பற நடத்துவாராகை யால் இச்செயல்கள் நம்மனோருக்குத் தெரியா எ - று.

வி - ரை. இதனால், அருகனுடைய அதிசயங்கள் கூறப்பட்டன. இவை—எழுவாய்; தெரியா—பயனிலை. (௧0௩)

## மதங்கு.

சந்தவிருத்தம்.

104 தெரிந்த வறமழை பொழிந்த வருண்முகில்
சிவந்த மரைமலர் சுமந்ததாள்
விரிஞ்ச னருமறை புகழ்ந்து நடனவின்
மதங்கி நடனவி றடங்கண்மால்
புரிந்து கொலைகள வியைந்து புவியுடன்
மலைந்து கருமையொ டகன்றுநேர்
சரிந்து தவம்விழ நிமிர்ந்து பிறழ்வன
தழங்கு பரசுத னிகர்ந்தவே.

இ - ள். தெரியப்பட்ட தருமமாகிய மழையைச் சொரிந்த கருணையை யுடைய மேகமானவனும், சிவந்தநிறமுடைய தாமரைப்பூவானது தாங்கிய பாதத்தையுடைய பரமேட்டியுமான அருகனுடைய அரிதாகிய வேதத்தைத் துதித்து நாட்டியத்தைச் செய்கின்ற மதங்கஸ்திரீயினுடைய நடனத்தைக் காட்டுகின்ற விசாலமான நேத்திரங்கள் ஆசையைச்செய்து கொல்லுதலும் திருட்டும் பொருந்தி உலகத்தாருடன் சண்டைசெய்து கருத்தநிறத்துடன் பரந்து நேராகச்சோர்ந்து தவமானது கீழ்ப்பட நீண்டு பிரகாசிப்பன- எப்படியிருந்தவென்றால், சப்தியாநின்ற அருகனைத்துதித்தலை யொத்தன எ - று.

வி - ரை. இதனால், மதங்கஸ்திரீயின் தன்மை கூறப்பட்டது. கண் கள்—எழுவாய்; பிறழ்வன—பயனிலை. (௧0௪)

சந்தவிருத்தம்.

105 நிகரின் முனிவ ரரசர் கந்தியர்
நிரைசெய் பவண ரவர்த மங்கையர்
நெறிகொள் சுடரி னிலகு பஞ்சவர்
நெடிய விழியி னிவர்கள் வஞ்சியர்

புகரி லமர ரவர்ம டந்தையர்
பொழில்கள் பலவு நிலவி யந்தரார்
பொருவி லவர்கள் துணைவி லங்குகள்
புகலு மினைய பலக ணந்தொழ
மகர வரிகொ ளணையி னும்பரின்
மறுவில் கவிகை நிலவி நின்றொளிர்
வலய முழுதும் வெயிலில் வண்டரு
மலர்கள் பொதுளு மிருளில் வெண்டிரை
யிகல்செய் கவரி யசைய வண்டறை
யிணர்கொண் மழையி னடுவு துந்துபி
யிமிழ விசையொ டினிதி ருந்தன
னெமது பிறவி தொறும்வ ணங்கவே.

இ-ள். நாங்கள் எங்களுடைய பிறவிகடோறும்வணங்கவே, ஒப்பில்லாத முனிவர்களும், மன்னவர்களும், ஆரியாங்கனைகளும், வரிசையைச் செய்கின்ற பவணர்களும், அப்பவணர்களுடையநாயகிகளும், ஆகாய வீதியைக்கொண்ட காந்தியினாலே விளங்குகின்ற சோதிடர்களும், நீண்ட கண்களுடைய இந்தச்சோதிடர்களுடைய நாயகியரும், குற்றமில்லாத தேவர்களும்,அத்தேவர்களுடைய நாயகியர்களும், பூமியெங்குந்திரிகின்ற வியந்தரர்களும், ஒப்பில்லாத அவ்வியந்தரர்களுடைய நாயகியரும், மிருகங்களும் சொல்லப்பட்ட இத்தன்மையவாகிய பன்னிரண்டுகணங்களும் வணங்க, பூந்தாதுக்கள்பொருந்திய சிங்கங்கொண்ட வாசனத்தினுடையமேலே குற்றமில்லாத முக்குடையும் விளங்கிநின்று பிரகாசிக்கின்ற பிரபாவலயமூன்றிலும் சூரியனைப்போல வளப்பமான பூக்கணெருங்கும் அசோகமரமும் விளங்க, களங்கமில்லாத வெண்மையானதிரையுடனே பகைகொள்ளும் கவரித்திரள்களெப்பக்கமும் அசைய, வண்டுகண்மோதுகின்ற பூங்கொத்துக்களைக்கொண்ட மழையினுடையமத்தியிற் றேவதுந்துபி சத்திக்க, கீர்த்தியுடனே இன்பமாக அருகபரமன் வீற்றிருந்தான் எ-று.

வி-ரை. இதனால், அருகனது பெருமையும் தேவர்கள் சிறப்புச் செய்யுந்தன்மையும் கூறப்பட்டன. அருகபரமன்—எழுவாய்; வீற்றிருந்தனன்—பயனிலை. (கoரு)

கட்டளைக்கலித்துறை.

106 வணங்கப் படுந்தெய்வ நீயல்ல தியார்நின் வரம்பிகந்த
குணங்கட் கியார்குற்றங் கூறவல் லார்குறி யாறிரண்டு
கணங்கட் கிறைநின் குணமெங் கடவுட்கு மாமென்றுதாம்
பிணங்கப் புகுவர்பின் கொண்டா டுவதவர் பேய்த்தனமே.

இ-ள். குறித்த பன்னிரண்டுகணங்களுக்கும் இறையவனே! நீயல்லாமல் எல்லாரும் துதிக்கப்படுகின்ற சுவாமி எவர்களிருக்கின்றார்கள்? உன்னுடைய அநந்தமான எண்குணங்களுக்கும் எவர்கடாம் குற்றஞ்சொல்ல வல்லவர்கள்? அப்படி யிருக்க; உனதுகுணங்கள் எங்களுடைய சுவாமிக்கு மாகுமென்றே அவர்கள் மாறுபடப்புகுவார்கள்; பின்பு கொண்டாடுதல் அவர்களுடைய பேய்த்தனம் எ-று.

வி-ரை. இதனால், அருகனுடைய குணமகிமையும் மித்தியாதெய்வங்களுடைய குணவீனமும் கூறப்பட்டன. யார்—எழுவாய்; கூறவல்லார்—பயனிலை. (கOசு)

சந்தவிருத்தம்.

107 தனஞ்சுமந் தலமரு மிடையவர்
தடங்கணின் கடைதெற மெலியலர்
சரண்புகுந் தடிதொழி னலர்தரு
சரந்துரந் தெதிர்பொரு பகையிலர்
மனஞ்சலம் படுகழு தொடுபிண
வனந்தொறும் படர்தரு மயலிலர்
வனந்தரும் பதிதொறு மிடுபலி
வருந்தியுண் டலமரு பசியிலர்
சினஞ்செய்வன் பகைவரு மெனவலி
சிதைந்துவெம் படைபல சுமவலர்
சிரங்களெண் டிசைநிரை கொளவரை
செயும்புயம் பலகொடு திரியல
ரனந்தர்கொண் டமளியின் மிசையறி
வழிந்துகண் படுவதொ ரசைவில
ரகண்டமங் கையின்மணி யெனவுண
ரபங்கர்சங் கார்சின ரநகரே.

**இ-ள்.** சகலமும் உள்ளங்கையிலிருக்கின்ற இரத்தினம்போல அறி கின்ற பங்கமில்லாதவர்; சுகத்தைப் பண்ணுமவர்; வினையைச் செயித்தவர்; பாவமில்லாதவராகிய அருகபரமனுனவர்; முலைகளைத் தாங்கி வருந்தாநின்ற இடையையுடையவரது விசாலமான கடைக்கண்கள் வருத்த இளையாதவர்; அடைக்கலமடைந்து பாதத்தைவணங்கினுல் மிகுந்த பாணங்களையேவி யெதிர்நின்று சண்டைபண்ணும் பகையில்லாதவர்; மனமானது சலனப்படும் பேயுடனே பிணத்தையுடைய சுடலைதோறுந் திரியாநின்ற மயக்கமில்லாத வர்; அழகைக் கொடாநின்ற நாடுகடோறும் இடப்பட்ட பிச்சையை வருந்தி வாங்கிப் புசித்துச் சுழலாநின்ற பசியில்லாதவர்; கோபத்தைப்பண்ணுகின்ற கடினமான பகைவன் வருவானென்று பலஞ்சிதைந்து வெப்பமான ஆயுதங் கள் அனேகமாகத் தாங்காதவர்; எட்டுத்திக்கிலும் தலைகள் வரிசைகொள்ள மலைபோலக்காட்டும் புயங்களனேகங்கொண்டு திரியாதவர்; சயனத்தின்மே னித்திரையைக்கொண்டு அறிவுகெட்டுப் படுப்பதாகிய ஓர் சோர்வில்லாதவர் **எ-று.**

**வி-ரை.** இதனுல், அருகனுடைய குணப்பெருமையும் மித்தியாதெய் வங்களுடைய குணக்குற்றமுங் கூறப்பட்டன. அரகர்—எழுவாய்; மெலி யலர் முதலானவை தனித்தனி பயனிலைகள். (கoஎ)

வெண்பா.

108 அனக னமல னலர்கமல மேந்துந்
தனகமல பாதங்க டந்து—நினகமல
நீக்குமா றென்றக்கா னெஞ்சமே வல்வினையை
யாக்குமா றென்னோ வகன்று.

**இ-ள்.** மனமே! பாபமில்லாதவனும் நிருமலனுனவனுமாகிய அருகன் மலர்ந்த தாமரைப்பூவானது தாங்குகின்ற தன்னுடைய தாமரைமலர் போன்ற பாதங்களைக் கொடுத்து உன்னுடைய வினையை நீக்குகின்ற நெறி யானது துறவறமென்று சொன்னுல், அந்தத்துறவறத்தை நீங்கி வலிமை யான கருமத்தை மீட்டுஞ் செய்யும்வித மென்னகாரணம்? **எ-று.**

**வி-ரை.** இதனுல் துறவறத்தின் பெருமைகூறப்பட்டது. ஆக்கு மாறு—எழுவாய்; என்—பயனிலை. (கoஅ)

வஞ்சிப்பா.

109 அகன்றலை விசும்புதொட-நிவந்துயர் சிமையந்தூங்கும்
கல்பொரு கறங்கருவி-வெல்கொடியின் மிசைநுடங்கும்
போக்கறு சுடர்வெள்ளி-மாக்கயிலை மிசைநாப்பண்
பொன்னியல் புகழ்நிலத்துப்-பன்னிரு புகைப்பரப்பின்

முழுமணியின் முறைவகுத்த-வெழுநிலத்தின் மிசையரங்கி
ஞற்றிசை மணிப்படுகான்-மேக்குயர் நெடுவீதித்
துணிமான விருள்சீக்கு-மணிமானத் தூணத்துக்
கண்டவர் கருத்தளவாம்-வண்டுசூழ் மலர்க்கிடங்கி
னடர்பைம்பொன் னவிர்மணியிற்-சுடர்மாலைத் தோரணத்
தெண்டிசைக் கிழவர்முத-லொண்சுடரோ டுரகர்க்குஞ்
சேயுயர் நெடுவரையிற்-போயிலகு பொலன்றூபை
நெடுநிலை வியன்வாயிற்-கொடிநிரைத்த வருகுமிசைக்
கருவியோ டிசைத்தேனுஞ்-செருவறியா வொருமும்மை
மின்னிவர் மணிச்சூட்டிற்-பொன்னெயிற் புடையரங்கின்
மழைதவழ் பன்மாடத்-திழைவளர் முலைமகளிர்
பாடலின் பலபாணி-யாடலின் கனசாலை
பல்பிறப்பு வெளிப்படுக்கும்-புள்ளிமிழ் பூம்பொய்கை
கொய்பூவிற் கொடிப்பந்தரிற்-செய்குன்றிற் செழும்பொனியல்
பல்காவிற் பளிக்கறையி-லெல்லொளிப் பல்பீடத்
திலங்குமணிக் காலாயிரம்-வயங்குமணி மண்டபத்
தருமறை முதல்வர்-தொழுதறிந் தெடுத்த
தொல்வேதப் பேரொலியிற்-பல்பலி நல்வேள்வியில்
தேங்கமழ் வெறிகலந்து-கான்றுகமழ் பூம்பொய்கை
மண்ணோடு விண்புதைய-விண்ணோடு மண்பொதுளித்
தொடியோடு தொடிதேய்ப்ப - முடியோடு முடிநெருக்க
வெழுதருபொற் றுகளுவப்பி - னவிழ்தருகண் ணீரவிப்ப
வேத்தொலியி னிசையொலியிற் - கூத்தொலியின் முழவொலியிற்
கார்க்கட லுடன்கலந்த - தீர்த்தமலி திருமுன்றில்
விசும்புமாசு துடைப்பன்ன - பசும்பொன்னின் பதாகைநிரை
நீர்திகழ் நெடுவரையிற் - சீர்திகழ் செழுங்கோயிற்
றத்தொளிப் பஃறுமச் - சித்திர மணிக்கூடத்துப்
பைந்துணர்ப் பல்போதி - னந்தளி ரசோகின்கீழ்
வண்டாளத் தண்கோதைக் - கந்தகுடி மணியரங்கிற்
சுரியுளைப் பேழ்வாய - வரிசுமந்த மணியணைமிசை
யொண்கதிர் மதிமூன்றின் - வெண்குடை மிசைநிழற்ற
வெழுசுடர் மண்டிலத்தி - னெருசுடர் மின்னிலங்கத்

தண்கதிர் நிலாக்கற்றை - வெண்கவரி நெடுவெள்ள
மொமன்காலோ டிருமருங்கும் - பொங்குபு புடைபெயரத்
தேன்றுவலை யளிமுழக்கிற் - பூம்புயல்கள் கால்வீழ்ப்ப
வந்தர மழையுருமிற் - றுந்துபி சூழ்ந்தொலிப்ப
விருட்பகையிற் றிசைநான்கி - னருட்டிகிரி வினையகற்றப்
பெருந்தொடர்ப் பிறப்பெறியு - மருந்தவத் தரசர்முதல்
மாறிகந்த விலங்கிறுதி - யாறிரண்டு கணஞ்சூழச்
செம்மையிற் றிரியாது - வெம்மைதீர் வெயின்மண்டிலம்
பல்கோடி கதிரொளியி - னெல்காத வுயர்வரையி
னுயிரத்தெட் டிலக்கணத்தொடு - சேயிலகு திருமூர்த்தி
யலகிறந்த வொளிமூன்றி - னுலகனைத்து முடன்விழுங்கிக்
கடையிகந்த காட்சியொடு - கடையிகந்த வாலறிவி
னீறிகந்த வின்பத்தின் - மாறிகந்த பெருவலியி
னோவாத பெருந்திருவின் - கோவாகி வீற்றிருந்
தோராறு முதற்பொருளின் - மூவாறு மொழிப்பொதுமை
யொருமொழியி னுயிர்பரந்த-மருண்மருவா வருண்முதல்வனை
மூவிலையொரு நெடுவேலின் - மேவாத வினையவுணர்
குன்றுபட நூழிலாட்டி - வென்றட்ட விறல்வெகுளியை
மூவெயிலின் முரண்முருக்கி - மூவர்சர ணடையநின்றனை
சுருப்புநாண் வில்லிபட - நெருப்புமிழ் நெடுநோக்கினை
கோள்வலிய கொடுங்கூற்றைத்-தாள்வலியின் விழவுதைத்தனை
பரிவில்கே வலக்கிழத்தி - பிரிவில்லா வொருபாகனை
யான்றமெய் யறம்வளர்க்கும் - மூன்றுகண் முனித்தலைவனை
யாலநெடு நிழலமர்ந்தனை - காலமூன்று முடனளந்தனை
தாழ்சடை முடிச்சென்னிக் - காசறுபொன் னெயிற்கடவுளை
மன்னியபே ருலகனைத்தும் - நின்னுள்ளே நீயொடுக்கினை
நின்னின்று நீவிரித்தனை - நின்னருளி னீகாத்தனை
எனவாங்கு,
ஆதி பகவனை யருகனை
மாதுயர் நீங்க வழுத்துவம் பலவே.

இ - ள். நெஞ்சமே! பரந்தஇடத்தையுடைய ஆகாயத்தைத் தொடும்படி மேனோக்கியுயர்ந்த சிகரத்திற்றங்கிய கல்லுகளைமோதிச் சப்திக்கின்ற அருவியாறு வெற்றிக்கொடிபோல மேலேயசைகின்ற குற்றமற்ற பிரகாசியாநின்ற வெள்ளியாலாகிய பெருமைபொருந்திய கயிலாயமலைமேன் மத்தியில், பொன்னாலியன்ற கீர்த்தியையுடைய பூமியிற் பன்னிரண்டு யோசனையகலத்தில் இந்திரநீலமணியினாற் கிரமமாக ஏற்படுத்திய எழுநிலத்தின்மேல், சபைபோல நான்குதிக்கிலும் மணிகளழுத்திய தூண்கள் மேலே அசைகின்ற உயர்ந்த நீண்ட வீதிகளிற் றுணிபுகொண்ட அபிமானமாகிய அஞ்ஞானமென்னும் இருளைப்போக்காநின்ற மணியழுத்திய மானஸ்தம்பத்திலும், பார்த்தவர்களுடைய மனத்துக்களவாகிய சுரும்புகள்சூழ்ந்த தாமரைமலர்பொருந்திய அகழியிலும், தகடுபடச்செய்த பசுமையாகிய பொன்னும் விளங்குகின்ற மணியும்போலப் பிரகாசியாநின்ற ஒழுங்காகிய தோரணத்தையும் வியந்தரர்முதலாகப் பிரகாசமாகிய சோதிடருடனே பவணருக்கும் மிகவுமுயர்ந்து நீண்ட மலைபோல, எங்குஞ்சென்று விளங்குகின்ற பொன்னாலாகிய ஸ்தூபிகளையுமுடைய நீண்ட நிலையையுடைய பெருத்தவாயில்களிற் கொடிகள் வரிசையாகக்கட்டியபக்கத்தில் கூட்டத்துடன் இராகத்தைப் பாடுகின்ற வண்டுகளும் யுத்தத்தையறியாத மின்னலைப்போலப் பிரகாசியாநின்ற மணிகளிழைத்த சிகரத்தையுடைய பொன்னாலாகிய ஒருமூன்று மதிலினுடைய பக்கத்திடத்தின், மேகங்களூர்கின்ற பலமாடங்களில் ஆபரணங்கள்பொருந்திய தனத்தையுடைய தெய்வப்பெண்களின் பாடலினாலும், பலவாகிய கைக ளாடலினாலும், விளங்கிய பெரிய சபைகளினாலும், முற்சனனங்களைத் தெரியப்படுத்தும் வண்டுகள் சத்திக்கின்ற மலர்களையுடைய தடாகங்களினாலும், பறிக்கப்படுகின்ற பூவினையுடைய கொடிகளாகிய பந்தரினாலும், செய்குன்றினாலும், செழுமையாகிய பொன்னாலியன்ற பலவாகிய சோலைகளிற் பளிங்கினாற் செய்த வீடுகளினாலும், சூரியனைப்போலக் காந்தியையுடைய மூன்றாகிய மேகலாபீடத்தினாலும் விளங்காநின்ற நவமணிகளாற்செய்த ஆயிரங்கால்களினாற் பிரகாசியாநின்ற அழகிய இலக்குமிமண்டபத்தில், அரிதாகிய கணதரர்கள் வணங்கிப் பொருளறிந்தெடுத்துச்சொன்ன அநாதியாகிய வேதத்தினுடைய பெரிதான வொலியிலும், எட்டுவிதமான வருச்சனை

செய்யும் நல்ல வேள்வியிலும் (மனம்வைத்துத்) தேனுனதுவாசியாநின்ற வாசனேயானது நிரம்பி ஒளியைக்கக்கி விளங்காநின்ற மலர்களையுடைய தடாகங்களையுடைய பூமியுடனே ஆகாயமும் மறையத் தேவர்களுடனே மண்ணுலகத்தாரும் நெருங்கி வாகுவலயத்துடன் வாகுவலயங்கடேயக் கிரீடங்களுடனே கிரீடங்கள் நெருக்குண, அதனுலெழப்பட்ட பொற்பொடிகளே அவர்கட்குண்டாகிய சந்தோஷத்தினுலே யுண்டாகாநின்ற ஆநந்தக்கண்ணீ ரானது தணிக்க, ஜயகோஷணையினுலும் பாட்டினெலியினுலும் நடன வொலியினுலும் வாத்தியவொலியினுலும் கருங்கடலொலியுடனே யொப் பாகக்கலந்த விழவுநிறைந்த அழகிய முன்வாயிலில் ஆகாயத்தினது தூசியைத் துடைக்கக்கட்டியதுபோலப் பசுமையாகிய பொன்னுற்செய்த கொடிவரிசைகள் அருவிநீர்விளங்குகின்ற நீண்டமலேபோலச் சிறப்பானது பிரகாசிக்கின்ற செழித்த கோயிலினுடைய விட்டுவிட்டு விளங்குகின்ற பலவாகிய மாலேகளையுடைய விசித்திரஞ்செய்த அழகியகூடத்தில், பசுமை யாகிய கொத்துக்களையுடைய பலமலர்களினுலே அழகுபெற்ற தளிரை யுடைய அசோகமரநிழலில், வளப்பமான முத்தாலாகிய குளிர்ந்த மாலே களையுடைய கந்தகுடியென்னும் அழகியவிடத்தில்,சுரித்துக்கொண்டிராநின்ற புறமயிரையும் பிளப்புவாயையுமுடைய சிங்கமானது தாங்கிய இரத்தின மழுத்திய ஆசனத்தின்மீது பிரகாசியாநின்ற கிரணங்களையுடைய மும்மதி போன்ற வெண்மையாகிய முக்குடையானது மேலே நிழலேச்செய்ய, உதிக் கின்ற சூரியமண்டலம்போல ஒப்பற்ற பிரபாவலயம் மின்னலேப்போல விளங்க, சந்திரனுடைய பிரகாசத்தினது கற்றைபோன்ற வெண்மையாகிய சாமரத்தினது மிகுந்த வெள்ளமானது மென்மையாகிய காற்றுடனே இரு பக்கமும் மிகுந்து பக்கங்களில் அசைய, தேனுகிய திவலேகளே வண்டுகளினது முழக்கத்துடன் புட்பமேகங்கள் பெய்ய, ஆகாயத்திற் சஞ்சரிக்கும் மேகத் திடிபோலத் துந்துபியானது எங்குஞ் சூழ்ந்து சத்திக்க, சூரியனேப்போல நான்குதிக்கிலும் தர்மசக்கரமானது தீவினேகளே நீக்க, அநாதியிற்றுனே தொடர்ந்துவந்த பிறப்பினேக் கெடுக்கின்ற அரிதாகிய தவச்சிரேட்டர்கள் முதலாகப் பகைநீங்கிய மிருகங்களிறுதியாகப் பன்னிரண்டாகிய கணங்கள் சூழ்ந்திருக்க, செம்மையினின்றும் மாறுமல் வெப்பமானது தீர்ந்த சூரியமண்டலத்திற் பலகோடி சூரியனெளிபோல அசையாத உயர்ந்த மலேயினிருந்து ஆயிரத்தெட்டிலக்கணத்துடனே மிகவும் விளங்கு கின்ற அழகிய உருவத்தை யுடையவனே! கணக்கிறந்த முச்சோதியினுலே

உலகமுழுதையு மொருதன்மையாக உட்கொண்டு அனந்தமான தரிசனத்துடனே அனந்தமான பரிசுத்தமான ஞானத்திலும் அனந்தமான இன்பத்திலும் திரிவில்லாத அனந்தவீரியத்திலும் நீங்காத பெரிதாகிய செல்வத்திற்குச் சுவாமியாகி வீற்றிருந்து அறுவகைப்பொருளையும் பதினெண்மொழிக்கும் பொதுமையாக மாகதபாஷையினாலே, சீவன்களிடத்திற் கலந்த வினையானது பொருந்தாமற்கெட உபதேசம்பண்ணும் ஆதியே! மூன்றிலையையுடைய ஒன்றாகிய நீண்டவேலினாலே அடங்காத வினைகளாகிய அசுரர்கள் குன்றுதலடையப் பொடிபடுத்திச் செயித்துக் கொன்ற வலியுடைய கோபமுடையவனே! மும்மதிலினுடைய வலியைக் கெடுத்து மூவுலக இந்திரரும் உனதுபாதத்திற் சேர்ந்து வணங்கநின்றவனே! வண்டுகளாகிய நாரி பொருந்திய கரும்புவில்லையுடைய மன்மதன் பட அக்கினியைக் கக்குகின்ற மிகுந்த நோக்கினையுடையவனே! குற்றத்திற் பலத்தையுடைய கொடுமையாகிய காலனை முயற்சிவலியாற் கெட உதைத்தவனே! முத்திநாயகி நீங்காத ஒருபாகத்தை யுடையவனே! பொருந்திய உண்மைத்தருமத்தை வளர்க்கின்ற மூன்றுகண்ணினையுடைய முனிவர்க்குச் சுவாமியே! ஆலமரத்தினுடைய மிகுந்த நிழலி லமர்ந்தவனே! முக்காலத்தையு மொருதன்மையாக அளந்தவனே! பொருந்திய சடையைமுடித்தலையுடைய குற்றமற்ற பொன்னாலான மதிலையுடைய கருத்தனே! நிலைபெற்ற பெரிய வுலகமுழுதுமுனக்குள்ளே நீ யொடுக்கினாய்; உன்னிடத்தில்நின்று நீ தெரிவித்தாய்; உன்னருளினாலே நீ காத்தாயென்று சொல்லி ஆதியாகிய பகவானை, அருகபரமனை மிகுந்த துன்பமானதுதீர யாம் பலவாகத் துதிப்போம் எ-று.

**வி-ரை.** இதனால், *சமவசரணப்பெருமையும் அருகனது குணப்பெருமையும் கூறப்பட்டன. யாம்—எழுவாய்; அருகனை—செயப்படுபொருள்; வழுத்துவம்—பயனிலை. (கoகூ)

வெண்பா.

110 பலவாம் பருவமெல்லாம் பாரளிக்குங் காலை
யுலவாவொன் றாக வுரைத்தார்—பலரெனினுங்
காவலராந் தேவ ரொருவரே யாங்கவர்தாட்
பூவலரா நாஞ்சூடும் பூ.

---

* இச்சமவசரணத்தின் இயல்பு, ஸ்ரீபுராணத்தும் மேருமந்தரபுராணத்தும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

இ-ள். சாதுக்களே! உத்ஸர்ப்பிணி அவஸர்ப்பிணி யென்னும் பலவாகிய எல்லாக்காலத்திலும் பூமியைக் காக்காநின்றகாலத்தின் முன்னொடு பின் மாறுபடாமலொருதன்மையாகத் தத்துவமுரைத்தவர் பலரானாலும் சுவாமிகளாகியதேவர் தன்மையாலொருவரே யாகையால், நாமெல்லாரும் சிரத்திற்றரிக்கும் பூவானது அத்தேவருடைய பாதமாகிய பொலிவினையுடைய மலராகும் எ-று.

வி-ரை. இதனால், எக்காலத்திலும் சுவாமியொருவரே என்பதும், அவரே தத்துவத்தலைவரென்பதும், அவரது தாண்மலர் யாவரும் தரிக்கத் தக்கதென்பதும் கூறப்பட்டன. சூடும்பூ—எழுவாய்; அலராம்—பயனிலை.

திருக்கலம்பகமூலமும் உரையும் முற்றும்.

---

A/122

102862 O-17LUT,T N51

ஸ்ரீ:

# செய்யுண்முதற்குறிப்பகராதி.

[எண் - பக்கஎண்.]


| | |
|---|---|
| அகன்றலைவிசும்பு | 81 |
| அஞ்சனநெடுங்கயல் | 69 |
| அடல்விடங்கொள் | 16 |
| அணையோமினி | 51 |
| அம்மானைமுடிவிலா | 21 |
| அமரநாடாளு | 53 |
| அரணங்கொடிய | 27 |
| அருவினைவிடும் | 70 |
| அறமாமுயிர்க்கொலை | 65 |
| அறிவரியகுணத் | 30 |
| அறிவன்காதற் | 75 |
| அனகனமல | 81 |
| ஆதிநாள்புண | 32 |
| ஆதியேயாதியின்றி | 20 |
| ஆவாருனக்கு | 18 |
| ஆறுரைத்தான் | 7 |
| ஆனவாருக | 10 |
| இகழ்வார்களை | 48 |
| இசைபெருக | 33 |
| இடுகிடைதளர | 71 |
| இணைவளரிளமுலை | 38 |
| இயல்கொண்ட | 9 |
| இயல்பிணுநிலனீர் | 73 |
| இருந்தாய்வேறே | 22 |
| இலைவயங்கு | 33 |
| இறந்துதாம் | 14 |
| உம்பர்நாடடைவார் | 17 |
| உரந்திகழும் | 44 |
| உரையோம்பயன் | 52 |
| உறவுலகை | 25 |
| உரிமையால்யாவ | 12 |
| ஊசற்குழை | 14 |
| என்மொழியி | 7 |
| ஒடுஞ்சகடத் | 32 |
| ஓதநெடும்புவி | 20 |
| ஓதாதுலகிற் | 61 |
| ஓரேழபங்கவுரை | 62 |

| | |
|---|---|
| கண்மூன்று | 28 |
| கலவமயிற்குல | 13 |
| காணுங்கண் | 77 |
| காதுசிலைவல்லமைக | 51 |
| காலனென்றுடல் | 17 |
| கூறுகுமுறைபொறி | 11 |
| கோண்டல்வண்ண | 67 |
| கோமான்குளிர் | 47 |
| கோறன்மாற்றி | 28 |
| சிதைக்குங்கதிப் | 19 |
| சூதும்போதார் | 60 |
| செல்வரென்று | 66 |
| சோகமேதருந் | 29 |
| தந்தவுலகிற் | 10 |
| தருமத்திகிரிப் | 41 |
| தனஞ்சுமந்தலமரு | 80 |
| தெரிந்தவறமழை | 78 |
| தேர்வதொன்று | 15 |
| தேறினுர்தொழூந் | 24 |
| தொடர்படுசடை | 66 |
| நண்போடன்பு | 45 |
| நாதனக்கமிழ்து | 30 |
| நாம்பரவுந்திற | 35 |
| நாயகனிவனென | 13 |
| நிகரின்முனிவ | 78 |
| நில்லாதசெல்வத்து | 63 |
| நின்றனநின்ற | 24 |
| நூன்மொழியுமாறு | 54 |
| நெஞ்சத்தருளுடை | 36 |
| பகரலாங்குணக் | 23 |
| பண்டயன்றலை | 68 |
| பதினறுவர் | 1 |
| பல்லுருவமெல்லாம் | 71 |
| பலவாம்பருவ | 86 |
| பற்றற்றவர்கள் | 72 |
| பாடுவதுன்னடித் | 32 |
| பாரேழுடையாயைப் | 62 |

| | |
|---|---|
| பிரமனேகாமனே | [illegible] |
| பிழைபிறங்க | 4[illegible] |
| புத்தேளுலகைப் | 4[illegible] |
| புயங்களாயிரங் | 2[illegible] |
| புரந்தரரும் | 19 |
| புலவர்மொழிந்த | 45 |
| புவனநாதரென் | 31 |
| பூநான்கும் | [illegible] |
| பெருந்தகைநின் | [illegible] |
| பெறுவதெண்டிசை | 69 |
| பேசிலகண்டமுநின் | 22 |
| பேணுந்தகைய | 7[illegible] |
| போங்குநாவலம் | 76 |
| பொறிவரிய | 50 |
| போதின்மிசைப் | 35 |
| போவார்போநெறி | 4[illegible] |
| போற்றுமிது | 6[illegible] |
| மண்ணூர்கதிர்மணி | [illegible] |
| மயிலாபுரிநின்றவ | [illegible] |
| மலர்தலை | |
| மறங்கொணேமி | |
| மனைக்குவிளக்க | |
| மாயஞ்செய்யுங் | |
| மின்னிடைமடவார் | |
| மூன்னைப்பிறப் | [illegible] |
| மைச்சந்தமாமுகில் | [illegible] |
| மொழிவழிவாராத | [illegible] |
| யாரேகால | [illegible] |
| வணங்கப்படுந்தெய்வ | |
| வழங்கும்பதினெ | |
| வாகனமாகம் | |
| விட்டகல்வதே | |
| விடுவதுவெவ்வினை | |
| விரையார்மலர்மி | |
| விலங்காய்ப்பிர | |
| வீசுடல | |
| வேண்டுதல் | |

## II. செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது (உரையுடன்) ... ... | 0 | 4 | 0 |
| 2. | கனூல் (5) இனியநாற்பது (உரை) ... | 0 | 3 | 0 |
| 4. | புலவராற்றுப்படை ... ... ... | 0 | 3 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | 0 | 6 | 0 |
| 8. | திணைமாலைநூற்றைம்பது (உரையுடன்) ... | 0 | 8 | 0 |
| 9. | அநுமானவிளக்கம் ... .. ... | 0 | 10 | 0 |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... ... | 0 | 2 | 0 |
| 12. | பன்னிருபாட்டியல் ... | 0 | 12 | 0 |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 4 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... ... | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா ... ... ... | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை ... ... ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம்... ... ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா ... ... ... ... | 0 | 3 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| 22. | திருக்கலம்பகமூலமும் உரையும் ... | 1 | 0 | 0 |
| 23. | விக்கிரமசோழனுலா ... | 0 | 8 | 0 |
| 24. | குருமொழிவினாவிடை ... ... ... | 0 | 1 | 0 |
| 25. | கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை ... | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் ... ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை... ... ... | 0 | 8 | 0 |
| 0. | ஞானாமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 3 | 0 |
| 2. | மநீஷாபஞ்சகம் ... ... ... | 0 | 8 | 0 |
| 6. | உவமானசங்கிரகம் ... ... ... | 0 | 1 | 0 |
| 7. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | 4 | 8 | 0 |
| 8. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 0. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | 0 |
| 1. | பொருட்டொகைநிகண்டு ... ... ... | 0 | 6 | 0 |
| 2. | அகராதிநிகண்டு ... ... ... | 0 | 12 | 0 |
| . | மேகவிடுதூது ... ... ... | 0 | 2 | 0 |
| . | திருக்குற்றாலமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 | 0 |
| | இராமோதந்தம் ... .. ... | 0 | 3 | 6 |
| | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100)... | 1 | 0 | 0 |
| | ...துராகிம் தமிழும் ... ... ... | 0 | 6 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 52. | கூடற்புராணம் ... ... ... | 0 | 10 | |
| 53. | திருவள்ளுவர் (ஆங்கிலம்) ... ... ... | 0 | 6 | |
| 54. | அரும்பொருள்விளக்கநிகண்டு ... ... | 1 | 4 | |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ... | 0 | 12 | |
| 56. | யாப்பருங்கலம் ... ... ... | 0 | 10 | |
| 57. | மதுரைமும்மணிக்கோவை ... ... ... | 0 | 5 | 0 |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் ... ... ... | 0 | 3 | 0 |
| 59. | கடம்பர்கோயில் உலா ... ... ... | 0 | 6 | 0 |
| 60. | சங்கரநயினார்கோயில் அந்தாதி ... ... | 0 | 6 | 0 |
| 61. | கலைசைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 62. | பெருந்தொகை ... ... ... | 5 | 0 | 0 |
| 63. | குடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ... | 0 | 5 | 0 |
| 64. | சிராமலைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 65. | மத்யமவியாயோகம் ... ... ... | 0 | 2 | 0 |
| 67. | அமிர்தரஞ்ஜநி ... ... ... | 0 | 2 | 0 |
| 69. | பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் ... | 0 | 8 | 0 |
| 70. | திருச் சிறுபுலியூருலா ... | 0 | 12 | 0 |

குறிப்பு:-கைவசம் இல்லாத சங்கப்பிரசுரங்களும் செந்தமிழ்ப்பிரசுர
களும் இதில் குறிக்கப்படவில்லை. மறுபடி அச்சிட்டு வெ
யானதும் இப்பட்டியலில் சேர்க்கப்படும்.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பொ
விஷயங்களைக்கொண்டு வெளியாகிவரும் இச்" செந்தமிழ் "ப்பத்தி
கைக்கு வருஷச்சந்தா ரூ. 4. தனிப்பிரதியின் கிரயம் அணா
வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ. 4—8—0. இதுவரை 4
தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3,
7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 மாதப்பகுதிக
உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1-க்கு ரூ 4-0-0 வீதம் வி
பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பதிப்புப்புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மே
பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரையணா
கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

S. சிவஸ்வாமி, மா